

GOKULAM
கோகுலம்
அக்டோபர் '97 ரூ. 5/-
பறக்க விடப் போறேன்
பரிசு வாங்கும் பாரேன்!

ON THE AUSPICIOUS OCCASION OF 50 YEARS OF INDIA'S INDEPENDENCE

INDIA'S LARGEST SELLING COMICS

DIAMOND COMICS PRESENTS





NEW AMAR CHITRAKATHA

- Gopal & The Cow Bird
- Krishna & The False Vaasudeva
- Krishna & Narakasura
- Paurava & Alexander
- Mahiravana • Sahilvahan

(Price Rs. 25/- Each)

JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering six books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/-)** you'll have to order six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 6 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these I promise to accept the V.P. every month.

NAME ____________________

ADDRESS ____________________

____

POST OFFICE ____________ PIN CODE ____________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ____________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.


DIAMOND COMICS PVT. LTD.
X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE-2, NEW DELHI-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore **Hyderabad :** • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar, • A.K. Agencies, Rajaji Nagar • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut • Amity International Book House Arta Bldg., East Kattaparamba, Calicut



கோகுலம்


அக்டோபர் 1997
மலர் : 15 இதழ் : 9



அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். காலாண்டுத் தேர்வுகள் முடிந்து விடுமுறை கூட ஆரம்பமாகியிருக்குமே? எந்தப் பாடத்தில் அதிகக் கவனம் தேவை என்பதை இதற்குள் புத்திசாலியாகிய நீங்களே கண்டுபிடித்திருப்பீர்கள். அதில் கூடுதல் கவனம் செலுத்திப் படிக்க இதுவே பொருத்தமான காலம். உடனே செயல்படுங்கள். திட்டம் போட்டுப் படித்தால், வெற்றி உங்களைத் தேடி வந்து கதவைத் தட்டுமே?

புதிய தொடர்கதை, "ஒன்பதாம் வீடு!" உங்களைக் கவர்ந்து விட்டது என்பதை உங்கள் கடிதங்கள் உணர்த்துகின்றன. இதில் அதிசயப்படும்படி எதுவும் இல்லை. இதை எழுதும் வெ. நல்லதம்பி சிறுவர் இலக்கியத்தில் ஊறித் திளைத்தவர். வானொலி அண்ணாவாக இருந்து மகிழ்வித்தவர். அதனால், சிறுவர் உலகம் எதை விரும்பி ஏற்கும் என்பதை அளந்து வைத்துள்ளவர். அவர்தருவது உங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்படி இருக்கும் என்பதை மட்டும் இப்பொழுது சொல்லி வைக்கிறேன்.



இது தேசபிதா காந்தியடிகள் பிறந்த மாதம் இல்லையா? இதையொட்டி காந்தியடிகள் பற்றிய பாடல்கள் இந்த இதழில் இடம்பெறுகின்றன. வழக்கமான பகுதிகளுக்கும் குறைவில்லை. உங்களுக்கு மகிழ்ச்சிதானே?

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.

காந்தி கண்ட போர்!

கத்தி இன்றி ரத்தம் இன்றி
காந்தி கண்ட போரிலே
சத்தி யத்தின் வெற்றி என்ற
சங்க நாதம் கேட்டது!


வாளும் இன்றி வெடியும் இன்றி
வாட்ட வந்த போரிலே
தோள்கொ டுத்து துயர்சு மந்து
துன்பம் ஏற்று வென்றனர்!


அடிமை என்ற விலங்கொ டித்த
அகிலம் போற்றும் போரிலே
மடிவ தற்கு ஆயி ரங்கள்
மகிழ்ச்சி யோடு சேர்ந்தனர்!

கொடியை ஏந்தி அடியை ஏற்று
குமரன் மாண்ட போரிலே
வடித்த ரத்தம் வெற்றி வாகை
வார்த்தெ டுத்துத் தந்தது!

சத்தி யத்தை முன்நி றுத்தி
தருமம் வென்ற போரிலே
உத்த மர்க்கு வாழ்வு தந்து
உண்மை வெற்றி கண்டது!

— அழகனார்





காந்திக்குப் பிடித்த பாட்டு!

குஜராத் மொழியில் ஒரு பாட்டு
காந்தியார் மிகவும் விரும்பியது.

நிஜமாய் அவரது வாழ்க்கையிலே
நிழலாய்த் தொடர்ந்து வந்ததுவே.

"குடிக்க ஒருவர் நீர்தந்தால்
கொடுப்பாய் உணவு கைம்மாறாய்;

அன்பாய் உன்முன் கரங்குவித்தால்
அவனைப் பணிந்து வணங்கிடுவாய்;

செம்பால் ஆன காசுக்குச்
செம்பொன் தந்து மகிழ்ந்திடுவாய்;

உயிரைக் காத்தவன் துன்பத்தை
உயிரைக் கொடுத்துத் துடைத்திடுவாய்;

சிறிய உதவி செய்தார்க்கும்
செய்வாய், நீதான் பேருதவி;

உலகில் பிறந்த எல்லாரும்
ஓர்நிரை என்பார் பெரியோர்கள்;

தீமை செய்த ஒருவருக்குத்
தக்க நன்மை செய்திடுவாய்!"

இந்தப் பாடல் மகாத்மாவின்
இதயம் தொட்ட பாட்டாகும்

அந்தப் பாட்டு நமக்கெல்லாம்
அவர்போல் புகழ்பெற வழிகாட்டும்!

— பி.வி. கிரி

இவனுக்கே..!

கொ.மா. கோதண்டம்



அந்தக் கிராமத்தின் அரசு மருத்துவமனை முன்பு சைக்கிளில் வந்து இறங்கிய கண்ணன், மணி, குமார், வேலன் ஆகியோர் மரத்து நிழலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

நகரத்து மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் கிராமங்களில் சுகாதாரப் பிரச்சாரத்திற்காக வந்திருந்தனர். அந்த வட்டாரத்துக்கே இந்த கிராமத்தில்தான் பெரிய அரசு மருத்துவமனை இருந்தது. மற்ற மாணவர் குழுக்கள் வேறுவேறு கிராமங்களுக்குச் சென்றிருந்தனர். இந்த நால்வரும்கூட மாலையில் கிராம மக்களைக் கூட்டிப் பேச இருந்தனர்.

மருத்துவமனையைச் சுற்றிப் பார்த்துவிட்டு அப்படியே சென்று மலையடிவார அருவியில் குளித்துவிட்டு மாலையில் வந்து சுகாதார பிரச்சாரக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யலாம் என்பது அவர்கள் திட்டம்.

இவர்கள் பேசி முடிவெடுத்து அருவிக்குப் புறப்படும் வேளையில் மருத்துவமனை உள்ளிருந்து ஒரு கிராமத்து மனிதர் இவர்களைப் பார்த்து ஓடி வந்தார்.

"தம்பிகளா! கொஞ்சம் நில்லுங்க!"- சத்தம் கேட்டு அவர்கள் நின்றனர்.

''உங்களுக்கு என்ன வேணும்?'' மணிதான் கேட்டான்.

"தம்பிகளா, எங்கப்பாவை வயித்து வலிக்காக ஆஸ்பத்திரியில சேத்திருக்கோம். ஆப்பரேசன் செய்யனுமாம். பெரியவருக்கு 'ஏ' குரூப் இரத்தம் ஒரு பாட்டில் வேணுமுன்னு டாக்டரு சொல்லிட்டாரு. எனக்கு என்ன தெரியும்? நா எங்க போவேன்? டவுனுக்கு போகனுமுன்னாலும் பஸ்ஸைப் புடிச்சி போயிட்டு வர நாழியாகும், நீங்கதான் தம்பிகளா எனக்கு உதவி செய்யணும். நீங்க யாராச்சும்தான் இரத்த தானம் செஞ்சு எங்கப்பாவ காப்பாத்தனும்''

அவர் கெஞ்சியபடி அழுதுவிட்டார்.

"நம்மிடம் யாருக்குப்பா 'ஏ' 'குரூப் இரத்தம் இருக்கு?" - கண்ணன் கேட்டான். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''வேலா! உனக்கு 'ஏ' குரூப் இரத்தம் தானே?'' என்று கேட்டான் குமார்.

வேலன் ஒன்றும் பேசாமல் தலை கவிழ்ந்து நின்றிருந்தான்.


''என்ன வேலா, நீதான் இரத்தம் தந்து அந்தப் பெரியவரை காப்பாத்தேன்?'' மணி கேட்டதும் "என்னால முடியாதுப்பா. இங்க நான் பிரச்சாரம் செய்யத்தான் வந்தேன் இரத்ததானம் செய்ய வரல்லே" என்று வேலன் சிடுசிடுத்து கண்டிப்புடன் கூறினான்.

''தம்பி ஒரு உசுரைக் காப்பாத்தின புண்ணியம் கிடைக்கும். எப்படியாச்சும் எங்க அப்பாவைக் காப்பாத்துங்க''- கிராமத்துக்காரர் மன்றாடினார்.

அவர்கள் அத்தனை பேரும் எத்தனை சொல்லிப் பார்த்தும் வேலன் ஒப்புக் கொள்ளாததால் அவர் போய் விட்டார். அவர்கள் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள். இது பற்றியே பேசிக் கொண்டு வந்தனர்.

"நாம பொதுத் தொண்டு செய்யலா முன்னுதா வந்திருக்கோம். வந்த இடத்துலே, அதுவும் ஒரு கிராமத்துப் பெரியவர் உயிரைக் காப்பாத்தறது நல்லதில்லையா? பாவம் அந்தாளு வேற வழி தெரியாமெதான் நம்மகிட்ட வந்து உதவி கேட்டாரு. நாமளே செய்யல்லேன்னா படிக்காதவங்க என்ன செய்வாங்க"

"இரத்தம் கொடுக்குறதினால உடம்பு ஒண்ணும் பாதிக்காது. கொஞ்ச நேரத்தில



இரத்தம் ஊறிடும். சிறிது நேரந்தான் சோர்வு தெரியும். போன காந்தி ஜெயந்தி அன்று நாங்கூட இரத்ததானம் செஞ்சிருக்கேன்"

மூவரும் பல விளக்கங்கள் கூறிய பின் சிறிது நேரம் மௌனமாக வந்த வேலன் இரத்ததானம் செய்யச் சம்மதித்தான். அவர்கள் திரும்பி மருத்துவமனை வந்து டாக்டரிடம் பேசினார்கள். வேலன் இரத்த தானம் செய்து



முடித்த சமயம் ஒருநர்ஸ் ஓடி வந்து டாக்டரிடம், "அந்தப் பெரியவர் உயிர் போயிடிச்சி டாக்டர்" என்று கூறினார்.

"அடடா, நீங்க அப்பவே கொடுத்திருந்தா அவரைக் காப்பாத்தி இருக்கலாமே தம்பி?" டாக்டர் அனுதாபத்தோடு கூறினார்.

இது பற்றி மேலும் பேசி வேலனை மனம் நோகச் செய்ய வேண்டாம் என எண்ணிய நண்பர்கள் வேலனை அழைத்துக் கொண்டு வெளியே வந்தனர். சைக்கிளில் ஏறி மலை அடி வாரம் வந்தனர்.

அருவியில் 'சோ'வெனத் தண்ணீர் பால் போல் விழுந்து கொண்டிருந்தது. அதில் பலர் குளித்துக் கொண்டிருந்தனர்.

கரையோர மரங்களிலிருந்து விழுந்த மலர்கள் ஆற்று நீரில் மிதந்து சென்றன.

அருவியில் குளித்து முடித்ததும் நேரமாகி விட்டதென்று வேகமாக சைக்கிளில் கிளம்பினர். ஒரு திருப்பத்தில் வரும் போது எதிரே வந்த கார் திடீரென்று சைக்கிள்களில் மோத அவர்கள் விழுந்து உருண்டனர். காரை நிறுத்திய டிரைவர் இறங்கி வந்து அவர்களைத் தூக்கி விட்டு "என்ன தம்பிகளா, ஓரமா வரக் கூடாது? நாலு பேரும் ரோட்டை மறைச்சிக்கிட்டு வந்தா திருப்பத்துல நா பாக்கவா முடியும்?" என்று கேட்டார்.

வேலனுக்கு மட்டும் தலையில் பலமாக அடிபட்டு மயங்கி விழுந்து விட்டான். அவர்கள் சைக்கிளை ஓரத்தில் போட்டு விட்டு வேலனைக் காரில் படுக்க வைத்து தாங்களும் ஏறிக் கொண்டு மருத்துவமனை வந்தனர். வேலனை டாக்டரிடம் தூக்கிச் சென்று காட்டினார்கள்.

"அடடா! பலமா அடிபட்டுருக்கே! இரத்தம் செலுத்தித்தான் சிகிச்சை செய்யணும். இல்லேன்னா பிழைக்கிறது கஷ்டம்" என்றார் டாக்டர்.

அங்கே வந்த நர்ஸ் "டாக்டர் இந்தத் தம்பிதான் ரெண்டு மணி நேரத்துக்கு முன்னால இரத்ததானம் செஞ்சிருக்காரு. அந்த இரத்தமே ரெடியா இருக்கு " என்றார்.

"ஓ... பெரியவரு இரத்தம் கெடக்கிறதுக்குள்ளே போயிட்டாருன்னு சொன்னீங்களே, அந்த கேஸா? அப்ப இந்தப் பையனின் இரத்தத்தையே இவனுக்கே கொடுத்திரலாமே! நல்ல வேளை இவன் செஞ்ச இரத்ததானமே இப்ப இவனையே காப்பாத்தப் போறது. உடனே ஆரம்பிக்கலாம்" என்று டாக்டர் எழுந்தார்.

வேலனின் இரத்தம் பாட்டிலிலிருந்து அவன் உடம்பில் ஏறிக் கொண்டிருந்தது!

மூழ்கினால் அழுகல்..!

துவரைப்பட்டியில் பெரிய பண்ணையார் வசித்து வந்தார். அவர் மிகவும் கருமியாகவும், கடுமையாகவும் நடந்து கொள்வார். அவருடைய பல வியாபாரங்களில் கோழிப் பண்ணையும் ஒன்று.

ஒருநாள் கோழிப் பண்ணையில் வழக்கமாக முட்டை வாங்கிச் செல்லும் சிறு வியாபாரி காளியப்பன் வந்தான்.

பண்ணையாரைப் பார்த்து, "ஐயா நேற்று வாங்கிப் போன முட்டைகளில் நிறைய முட்டைகள் அழுகி விட்டன. அழுகிய முட்டைகளுக்குப் பதிலாக நல்ல முட்டை கொடுத்திங்கன்னா நான் நஷ்டப்படாமல் இருப்பேன்" என்றான் காளியப்பன்.

"அழுகின முட்டைக்கு பதிலா நல்ல முட்டை தர மாட்டேன். இஷ்டம்னா வாங்கு. இல்லாட்டி போ" என்றார் பண்ணையார்.

காளியப்பன் செய்வதறியாது திரும்பினான். நஷ்டப்பட்ட பணத்தை எப்படியாவது மீட்கணும் என்று ஒரு முடிவுக்கு வந்தான்.

மறுநாள் காலை ஒரு வாளியில் கொஞ்சம் தண்ணீருடன் கோழிப் பண்ணைக்குச் சென்றான் காளியப்பன். பண்ணையார் அவனை ஏளனமாகப் பார்த்தார். "எங்க போனாலும் இங்கதான் வந்தாகணும், பார்த்து நடந்துக்க" என்றார்.


"நீங்க சொல்றதும் சரிதாங்க. ரெண்டு பேரும் நஷ்டப்படாம இருக்க ஒரு வழி சொல்றேன்" என்றான் காளியப்பன்.

"அப்படியா! சொல் பார்க்கலாம்."

"நல்ல முட்டைகளெல்லாம் தண்ணீரில் மூழ்கிடும். கெட்ட முட்டையெல்லாம் தண்ணீர்ல மிதக்கும். அதை வைத்துப் பரிசோதித்து முட்டையை வாங்கிக்கிறேன்" என்றான் காளியப்பன்.

பண்ணையாரும் ஒத்துக் கொண்டார்.

காளியப்பன் தான் கொண்டு வந்த வாளித் தண்ணீரோடு, இன்னும்



கொஞ்சம் தண்ணீரை ஊற்றினான். ஒவ்வொன்றாகத் தண்ணீரில் எழுபத்தைந்து முட்டைகளைப் போட்டான். அத்தனை முட்டைகளும் நீரில் மிதந்தன!

கலக்கமுற்ற பண்ணையார், "இதோட நிறுத்துப்பா. மீதி இருபத்தி ஐந்து முட்டைகளை என்னிடம் கொடுத்துடு. அவைகளை நீரில் போட

வேண்டாம். வேறு யாருக்காவது அப்படியே விற்று விடுகிறேன்" என்று கெஞ்சினார்.

"ஐயா, உங்களைப் பார்க்கவும் பாவமா இருக்கு. இந்த இருபத்தி ஐந்து முட்டைகளையும் தண்ணீர்ல போடாமல் நானே முழுப் பணமும் கொடுத்து எடுத்துக் கொள்கிறேன். கெட்டுப் போன எழுபத்தி ஐந்து முட்டைகளையும் கூடப் பாதி விலைக்கு வாங்கிக் கொள்கிறேன். நீங்களும் நஷ்டப்பட வேண்டாம்" என்றான் காளியப்பன்.

"அழுகிய முட்டைய வைச்சுக்கிட்டு என்ன செய்யப் போறோம்? அவைகளையும் பாதி விலைக்கு இவனிடம் தள்ளி விடலாம்" என்று மனதுக்குள் நினைத்து, "சரி" என்றார் பண்ணையார்.

காளியப்பன் மகிழ்ச்சியுடன் முட்டைகளை எடுத்துக் கொண்டு சென்றான்.

மறுநாள் மிருக வைத்தியரிடம் அத்தனை முட்டைகள் கெட்டுப் போனதையும் காளியப்பன் அவைகளைப் பாதி விலைக்கு எடுத்துக் கொண்டதையும் கூறினார் பண்ணையார்.

கடகடவெனச் சிரித்த வைத்தியர், "உங்களை புத்திசாலி ஒருத்தன் நல்லா ஏமாத்திட்டான்" என்றார்.

"புரியும்படிச் சொல்லுங்க வைத்தியரே?" என்றார் பண்ணையார்.

வைத்தியர் வாளியில் தண்ணீர் கொண்டு வந்து, அதில் முட்டையைப் போட்டார். முட்டை மூழ்கியது. பின் ஒரு கரண்டி உப்பைத் தண்ணீரில் போட்டுக் கலக்கினார். சிறிது நேரத்தில் மூழ்கிய அதே முட்டை மேலே மிதந்தது!

"சாதாரண தண்ணீர்ல உப்பு கலந்ததும் அது அடர்த்தி அதிகமாகி விடுகிறது. அதனால்தான் முட்டை மிதக்குது" என்றார் வைத்தியர்.


தான் ஏமாற்றப்பட்டதை அறிந்த பண்ணையார் வருந்தினாலும் காளியப்பனின் புத்திசாலித்தனத்தை மனதுக்குள் பாராட்டிக் கொண்டார்.

— வீரலக்ஷ்மி கண்ணப்பன்

கோகுலம்

அக்டோபர் 1997

இந்த இதழில்...



புதுநெறி காட்டும் புத்தர் கதைகள், பாலமுருகன், பக். 80, ரூ 15/- சங்கர் பதிப்பகம், 21, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை – 49.

உலகப் புகழ்பெற்ற புத்தர் ஜாதகக் கதைகளிலிருந்து சிறுவர்க்கு ஏற்றதாகப் பதினைந்து கதைகளைத் தொகுத்துத் தந்துள்ளார் ஆசிரியர். கதைகள், நேரில் உட்கார்ந்து கதை கூறுவது போல் அமைந்துள்ளன. தெளிவான நடை, நல்ல பயனுள்ள தொகுப்பு.

பிஞ்சு உள்ளங்களுக்கான பாடல்கள், விட்டலாபுரம் ராஜன், பக். 64, ரூ. 12 – மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை – 17.

சிறுவர்க்கான பாடல்களை எழுதுவது கடினமான கலை. குழந்தைக் கவிஞரை முன்னோடியாக வைத்துக் கொண்டு தோன்றிய குழந்தைப் பாடல் இயக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பாடல் புனைந்தவர்கள் ஏராளமானோர். அந்த இயக்கத்தின் தாக்கம் இன்னமும் உள்ளது என்பதை அவ்வப்பொழுது வரும் குழந்தைப் பாடல் தொகுப்புகள் உணர்த்துகின்றன. அந்த வரிசையில் இதோ ஒரு தொகுப்பு. குழந்தைகளுக்குப் பிடித்த தலைப்புகளில் மட்டுமல்லாது கதைப் பாடல்களும் ஏராளமாக உள்ளன. நெஞ்சை அள்ளும் சந்தம், பாடல்களைத் தானாகவே தாளம் போட்டுப் பாட வைக்கின்றன. "எங்கள் ஊர்" என்ற தலைப்பில் ஒரு பாடல் :

எங்கள் ஊர் சிறிய ஊர்
ஏர் உழவர் வாழும் ஊர்
மாளிகைகள் அற்ற ஊர்
மண் குடிசை நிறைந்த ஊர்
வயல்களால் சூழ்ந்த ஊர்
வடிகால் நீர் பாயும் ஊர்
பசுமை மிகப் படர்ந்த ஊர்
பசுவும் கன்றும் மேயும் ஊர்!
தாளாளர் உள்ள ஊர்
தானியங்கள் கொழிக்கும் ஊர்
உண்டி மிகக் கொடுக்கும் ஊர்
உயிரினைக் காக்கும் ஊர்!

– பக். 20

சிறுவர் பாடல் பிரிவுக்குப் பெருமை சேர்க்கும் தொகுப்பு.

சுட்டிப் பையன் கார்த்திக்! – தேசபந்து. பக். 96 ரூ. 36/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை – 17.

மோசடி, லஞ்சம் கள்ளச் சாராயம் என்று எல்லாத் தீய வகைகளாலும் சமூக விரோதியாக விளங்கும் எம்.எல்.ஏ. சேனாபதியை, அவர் மகன் கார்த்திக் தனது தாத்தா, அம்மாவின் உதவியால் தக்க ஆதாரங்களுடன் சிக்கவைத்து, தனது பிறந்தநாளன்று போலீசில் பிடித்துத் தருவதே கதை. சிறுவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் அரசியல்வாதிகளின் மோசடித்தனங்களை அப்படியே தோலுரித்துக் காட்டி கதையை ஓட்டியிருப்பது ஆசிரியரின் தனித் திறமையைக் காட்டுகிறது. இயல்பான நடை. அடுத்து என்ன நடக்குமோ என்ற எதிர்பார்ப்போடு கதை ஓடுகிறது. கோகுலத்தின் முன்னாள் கௌரவ ஆசிரியரின் படைப்பாயிற்றே? சிறப்புக்குக் கேட்கவா வேண்டும்? தினமலர் சிறுவர் மலரில் தொடர்கதையாக வெளிவந்து பல்லாயிரக்கணக்கான சிறுவரை மகிழ்வித்த கதை இப்பொழுது நூல் வடிவில் வெளியாகியுள்ளது. பெருமை தரும் தயாரிப்பு.

ஐந்திணை நிலங்கள்; குழந்தைகளின் குரல், தொகுப்பு கீதா உல்ஃப், பக். 64 ரூ 70/- தாரா பதிப்பகம், சென்னை கிராப்ட்ஸ், 20/ ஜி.ஏ. ஷோர்ஹாம், 5-வது நிழற்சாலை, பெசன்ட் நகர், சென்னை – 90.

ஐந்திணை நிலங்கள், அவற்றின் சூழ்நிலை, மக்கள் வாழ்க்கை ஆகியவைகளை, அந்தந்த நிலங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கே குழந்தைகளை அழைத்துச் சென்று, அவர்களுடைய அனுபவத்தை அவர்கள் கைப்பட எழுதவைத்து, அப்படியே பதிப்பித்துள்ளார்கள். குழந்தைகளின் கண்ணோட்டத்தில் அவர்களைக் கவர்ந்தவை எவை என்பதை அறிய முடிகிறது. அவர்கள் தராத; விட்டுப் போன விவரங்களையும் உரிய படங்களுடன் தொகுத்துத் தந்திருக்கிறார்கள். குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் பயன்படக்கூடிய பல புள்ளி விவரங்கள் தரப்பட்டுள்ளன. குழந்தைகள் தாங்களே வரைந்துள்ள படங்களும், வண்ணமும், கதைத்தாளும், அச்சும் அயல்நாட்டுத் தயாரிப்போ என்று மயங்க வைக்கும் அளவுக்கு உள்ளது. தொகுப்பாசிரியர் பெருமை கொள்ளலாம். அரிய புதிய முயற்சி.

– ரே


டால்பின் புத்திசாலியா?

ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக அத்தை, தன் மகள் மைதிலியுடன் வந்திருந்தார். ராஜாவுக்கும் திலகாவுக்கும் சந்தோஷமாக இருந்தது.

அத்தை வந்தால் வீடு கலகலப்பாக இருக்கும். வெளியில் எங்காவது அழைத்துச் செல்வார். நிறைய விஷயங்களைச் சொல்லிக் கொடுப்பார். அத்தை கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறார்.

கருத்தரங்கம் மாலையில் முடிந்தது. ராஜா, திலகா, மைதிலியைப் புத்தகக்காட்சிக்கு அழைத்துச் சென்றார் அத்தை.

"உங்களுக்கு என்னென்ன புத்தகங்கள் தேவையோ, வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார் அத்தை.



திலகாவும் மைதிலியும் போட்டி போட்டுக் கொண்டு புத்தகங்களை வாங்கினார்கள்.

"என்ன ராஜா, நீ இன்னும் புத்தகம் வாங்க முடிவு செய்யலையா?" என்றார் அத்தை.

"இன்னும் நிறைய ஸ்டால் இருக்கே?" என்றான் ராஜா.

பெரிய பெரிய ஸ்டால்களில் நுழைந்து ஒவ்வொரு புத்தகமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் ராஜா. நீல நிறத்தில் அழகான டால்பின் படம் போட்ட புத்தகத்தை எடுத்துப் பார்த்தான். புத்தகம் முழுவதும் டால்பின்கள் நிறைந்திருந்தன. வண்ண போட்டோக்களில் டால்பின்கள் விதம் விதமான கோணங்களில் ரொம்ப அழகாக காட்சியளித்தன

"அத்தை இந்தப் புத்தகத்தை வாங்கிக்கிறேன்" என்றான் ராஜா திருப்தியுடன்.

"ராஜா புத்தகம் முழுவதும் டால்பினுடைய போட்டோக்கள்தான் இருக்கு. அதைப் பற்றின குறிப்பு இல்லை. விலையும் ரொம்ப அதிகமாயிருக்கே?" என்றாள் திலகா.

"விலையைப் பற்றிக் கவலைப்படாதே! உனக்குப் புடிச்சிருந்தா வாங்கிக்க" என்றார் அத்தை.


"குறிப்பு இல்லைன்னா என்ன? அத்தைதான் இருக்காங்களே, டால்பினைப் பற்றிச் சொல்லிக் கொடுக்க?" என்றான் ராஜா.

"சரி! நேரமாயிடுச்சு. வாங்க போகலாம்" என்றார் அத்தை.

இரவு சாப்பிட்டவுடன் மாடிக்குச் சென்றனர். தாங்கள் வாங்கிய புத்தகங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்த போது, "அத்தை டால்பின் குட்டித் திமிங்கலமா?" என்றான் ராஜா.

"நீ சொன்னது சரிதான். திமிங்கலத்தோட சகோதரர்கள்தான் இந்த டால்பின்கள்" - அத்தை.

எஸ். சுஜாதா



"அப்படின்னா டால்பின் கடல்ல மட்டும்தான் வாழுதா?" - திலகா.

"பெரும்பாலும் டால்பின்கள் கடலில் தான் காணப்படுகின்றன. பனிக் கடலைத் தவிர மற்ற கடல்களில் எல்லாம் இவை வாழுகின்றன. ஆனால் நன்னீர்நிலைகளிலும், தண்ணீர் அதிகமாக இருக்கக் கூடிய பெரிய ஆறுகளிலும் 'ஆற்று டால்பின்கள்' வாழ்கின்றன. இவை கடல் டால்பினை விடச் சிறியவை" என்றார் அத்தை.

"நம்ம நாட்டு ஆறுகளில் டால்பின் இருக்கா அத்தை?" - ராஜா.

"இந்தியாவின் வட பகுதிக்ளில் சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா நதிகளில் ஆற்று டால்பின்கள் உள்ளன" - அத்தை.

இந்திய அரசு 'ஆற்று டால்பின்' தபால் தலையை வெளியிட்டதாக நினைப்பு. சரியா விஜி?" என்று கேட்டுக் கொண்டே அம்மாவும் விவாதத்தில் கலந்து கொண்டார்.

"நீங்க சொன்னது சரிதான்! 1991-ல் வந்தது அது. அழியும் நிலைல உள்ள விலங்கா டால்பின் இருக்குறதால, அதைப் பாது காக்கும் விதமாக 'தபால் தலை' வெளியிட்டிருந்தாங்க" - அத்தை.

"இது முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்குமா? - மைதிலி.

"டால்பின் பாலூட்டி இனத்தைச் சார்ந்தது. குட்டி போட்டுப் பால் கொடுக்கும்."

"கடல்ல குட்டி போட்டுப் பால் கொடுக்குமா? ஆச்சரியமா இருக்கு!" - ராஜா.

"டால்பின் குட்டி போட்டு நாலு மாதம் வரை பால் கொடுக்கும்."

"அம்மா, டால்பின் என்ன சாப்பிடும்" - மைதிலி.

"கணவாய் மீன், நத்தை, சின்னச் சின்ன கடல் வாழ் உயிரினங்களை உணவாக உட்கொள்ளும்."

"டால்பினுக்கும் மீனுக்கும் என்ன வித்தியாசம்?" - ராஜா.

"மீன்கள் செதில்கள் மூலம் தண்ணீருக்குள்ளேயே சுவாசிக்கின்றன. டால்பின்களோ தண்ணீர் மட்டத்துக்கு மேல வந்து தலையிலிருக்கும் ஓட்டையின் மூலம் சுவாசிக்கின்றன. ஓட்டைதான் மூக்காகச் செயல்படுது. தண்ணீருக்குள் போகும்போது ஓட்டை தானாகவே மூடிக் கொள்ளும்" என்றார் அத்தை.

"டால்பினுக்கு பல் அதிகமோ?" புத்தகத்தைக் காட்டி கேட்டான் திலகா.

"அதிகமான்னா கேட்ட திலகா? ரொம்ப ரொம்ப அதிகம். கிட்டத்தட்ட இரு நூறு பல் வரை இருக்கும். ரம்பம் மாதிரி சம அளவுல கூராகக் காணப்படும்."

"ஐயோ! கடிச்சதுனா அவ்வளவுதான்" என்றாள் மைதிலி.

"நெருப்பு வளையத்துக்குள்ள கரெக்டா பாயுதே! டால்பினுக்கு பார்வை கூர்மையா இருக்குமோ?" என்று சந்தேகத்துடன் கேட்டான் ராஜா.

அத்தை சிரித்தார். "டால்பினுக்குப் பார்வை ரொம்பக் குறைவு. அது கண்களோட உதவியால இரை தேடுவதோ, மற்ற வேலைகளைச் செய்வதோ கிடையாது! ஆனா இதுக்கு மாற்றுக் கருத்தும் உண்டு.

டால்பின் ஒலியை எழுப்பும். அந்த ஒலி மற்ற இடத்தில் பட்டு எதிரொலிப்பதை வைத்து உணர்ந்து கொள்கிறது. கேட்கும் சக்தி அதிகம். ஒலி மற்றும் நீரின் அசைவுகளை உணர்ந்து இரை எங்கிருந்தாலும் பாய்ந்து சென்று பிடித்துவிடும்."

"உன்னை இங்கேயும் பாடம் நடத்த வச்சிட்டாங்களா?" என்றார் அப்பா அத்தையிடம்.

"எல்லோரும் ஆர்வமா கேட்கிறாங்களே! அதான் சொல்லிட்டிருக்கேன்" என்றார் அத்தை.

"இன்னொரு முக்கியமான விஷயம். டால்பின்கள் மிகவும் புத்திசாலிகள்னு தெரியுமா உங்களுக்கு?" - அத்தை.

"அப்படியா! எப்படிச் சொல்றீங்க!" என்றனர் மூவரும்.

"சிம்பன்ஸி குரங்கு இனத்தை விட பரிணாம வளர்ச்சியில் மேம்பட்டது டால்பின்னு விஞ்ஞானிகள் சொல்றாங்க. சிம்பன்ஸிக்கும் டால்பினுக்கும் ஸ்விட்ச் போடும் பயிற்சி தரப்பட்டபோது டால்பின் மிகவும் விரைவாகக் கற்றுக் கொண்டது. அதே போல் நீண்ட காலத்திற்கு ஞாபகத்திலும் வச்சிருந்தது."

"டால்பின் தகவல் சுவாரசியமா இருக்கு" என்றாள் திலகா.

"டால்பின் எவ்வளவு நீளமிருக்கும் அம்மா?" என்றாள் மைதிலி.

"டால்பின் தலையிலிருந்து வால வரை இரண்டு மீட்டர் நீளமிருக்கும். நீந்தும் போது வாலை மேலும் கீழும் அடித்துக் கொண்டு இருபது மீட்டர் ஆழம் வரை செல்லும்."

"இந்த போட்டோல கூட்டமா எவ்வளவு அழகா நீந்துது பாருங்க! ரொம்ப ஒற்றுமையா வாழுமோ?" கேட்டான் ராஜா.

"டால்பின்கள் ரொம்ப ஒற்றுமையானவை. கூட்டம் கூட்டமாக வாழும். தங்கள்



அறிவியல் உண்மைகள்

● டால்பின் (Dolphins) பாலூட்டி வகையைச் சார்ந்தது.

● பெரும்பாலும் கடலிலேயே வாழ்கின்றன. ஆற்றில் வாழக்கூடிய டால்பின்களும் உண்டு.

● இயந்திரப் படகை விட வேகமாக நீந்திச் செல்லும்.

● டால்பின்கள் கிட்டத்தட்ட இரு நூறு பற்களைப் பெற்றுள்ளன. பற்கள் கூராக ரம்பம் போல் சம அளவில் காணப்படும்.

● தலையில் இருக்கும் ஓட்டை வழியாகச் சுவாசிக்கின்றன. இதுவே மூக்காகச் செயல்படுகிறது. நீர் மட்டத்திற்கு மேல் வந்து சுவாசித்து பின் நீரில் மூழ்கும். தண்ணீருக்குள் சென்றதும் ஓட்டை தானாக மூடிக் கொள்ளும்.

● கூட்டமாக வாழும் இயல்புடையவை.

● கணவாய் மீன், நத்தை, சின்னஞ்சிறு உயிரினங்கள் இவற்றின் உணவு.

● கடல் டால்பின்கள் இரண்டு மீட்டர் நீளம் உடையவை. ஆற்று டால்பின்கள் சிறியவை.

● பனிக்கடலைத் தவிர மற்ற கடல்களில் காணப்படுகின்றன.

● ஆற்று டால்பின்கள் இந்தியாவில் சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா நதிகளில் காணப்படுகின்றன.

● கோடைக் காலத்தில் குட்டிகளை ஈனுகின்றன. குட்டி நான்கு மாதம் வரை தாய்ப் பால் குடிக்கும்.

● ஒற்றுமையாக இருக்கும். தங்கள் கூட்டத்தைக் கவனமாகக் காவல் காக்கும்.

● ஒரு டால்பினுக்குக் காயம் ஏற்பட்டால் அதைக் கடல் மட்டத்திற்கு மேல் தூக்கி வந்து சுவாசிக்க வைத்து முதலுதவி அளிக்கும் மற்ற டால்பின்கள்.

● டால்பின்கள் மிகவும் புத்திசாலிகள் எதையும் வேகமாகக் கற்றுக் கொள்ளும். கற்றுக் கொண்டதை நீண்ட காலம் நினைவில் வைத்திருக்கும்.

● சர்க்கஸ், விளையாட்டு, நடனத்தைக் கற்றுக் காண்பவர்களை அசத்தும்.

● டால்பினுக்கு பயிற்சியளித்தால் நன்றாகத் துப்பறியும். போர்க் காலங்களில் எதிரிகளின் நீர் மூழ்கிக் கப்பலைக் கண்காணிக்கவும், அழிக்கவும் உதவி செய்கின்றன. ஆழ்கடல் ஆய்வுகளில் விஞ்ஞானிகளுக்குப் பேருதவி புரிகின்றன.

● அன்பாகப் பழகும். பயிற்சியளித்தால் கிளியைப் போல சொல்வதைத் திருப்பிச் சொல்லும் ஆற்றல் உண்டு என்றும் கருதப்படுகிறது.

● டால்பின்கள் இறைச்சி, எண்ணெய்க்காக வேட்டையாடப்படுகின்றன.

● டால்பினுக்கு 'நீரில் செல்லும் பஸ்' என்ற பெயரும் உண்டு.

● ஐம்பது வகைகளில் டால்பின்கள் காணப்படுகின்றன.

கூட்டத்தைச் சுற்றி பெரிய டால்பின்கள் காவல்காக்கும். ஏதாவது ஆபத்து என்றால் எச்சரிக்கை செய்து விட்டு எதிரியுடன் சண்டை போடும்" - அத்தை.

"டால்பினுக்கு எதிரி இருக்கா அம்மா? மைதிலி.

"ஏன் இல்லை? ஆக்டபஸ் டால்பினுக்கு எதிரி. ஆக்டபஸ் தன்னுடைய கால்களினால் டால்பினை வளைத்துப் பிடிக்கும். புத்திசாலியான, துறுதுறுப்பான டால்பின் வேகமாகச் சுழன்று ஆக்டபஸ் காலை தன் கூர்மையான பல்லால் கடிக்க ஆரம்பிக்கும். ஆக்டபஸ் வலிதாங்க முடியாமல் விஷம் கலந்த கறுப்பு நிற திரவத்தைக் கக்கும். அப்போதும் கூட கடித்தபடியே நின்று இறுதி வரை தன் பலத்தைக் காண்பிக்கும். ஒரு டால்பினுக்குக் காயம் ஏற்பட்டால் மற்ற டால்பின்கள் அதைக் கடல் மட்டத்திற்கு மேலே தூக்கி வந்து சுவாசிக்க வைத்து முதலுதவி செய்யும்."

"அம்மாடி! டால்பின் புத்திசாலி; பலசாலி; இரக்கக் குணமுடையது. கேட்கவே

அதிசயமா இருக்கே?" வியந்தபடியே கேட்டாள் திலகா.

"அத்தை, டால்பின் மிக வேகமாக நீந்தக்கூடியது தானே!" - ராஜா.

"ஆமாம்! இயந்திரப் படகுடன் போட்டிப் போட்டுக் கொண்டு வேகமாக நீந்தும். இப்படி நீந்துவதில் டால்பினுக்கு பயங்கர சந்தோஷம். 'பாட்டில் மூக்கி' என்ற டால்பின் ஐம்பது முதல் நூறு கிலோ மீட்டர் வேகத்தில் நீந்தும். டால்பினுடைய உடல் அமைப்பு, நீந்தவும், இரையை வேகமாகப் பிடிக்கவும், எதிரிகளிடமிருந்து தப்பிக்கவும் உதவுது."

"டால்பின் நமக்கு எந்த விதத்துல உதவுது?" - திலகா.

"டால்பின் புத்திசாலின்னு சொன்னேன்ல? பயிற்சியளித்தால், போர்க் காலங்களில் எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பலை உளவு பார்க்கவும், அழிக்கவும் பயன்படுகின்றன. அப்புறம், செயற்கை மீன் வளர்ப்பு திட்டத்துல சுறா மீன்களிடமிருந்து மற்ற மீன்களைப் பாதுகாக்க உதவுது. வழி தவறிய கப்பலுக்கு வழி காட்டி, கரையை அடைய உதவி செய்யும். விபத்துக்குள்ளாகி கப்பலில் இருந்து கடலில் விழுந்த மனிதனைத் தூக்கிக் கொண்டு வந்து கரை சேர்க்கும். டால்பினைப் பழக்கி அதன் மீது அமர்ந்து பயணம் செய்யலாம். டால்பினுக்கு 'நீரில் செல்லும் பஸ்' என்ற செல்லப் பெயரும் கூட உண்டு."

"நம்மகிட்ட கூடவா அன்பா பழகும்?" ராஜா.

"ரொம்ப அன்பாகப் பழகும் இயல்புடையது. சொல்லிக் கொடுத்தால் சரியாகச் செய்யும். அதனால்தான் வெளிநாடுகளில் சர்க்கஸ் கூடாரங்களில் தீ வளையத்திற்குள் நுழைந்து சாகசம் செய்கின்றன. பந்து உருட்டி விளையாடுகின்றன. இசைக்கு ஏற்றவாறு தண்ணீரின் மேல் பரப்புக்கு வந்து தலையை நீட்டி நடனமாடுகின்றன" என்றார் அத்தை.

மொத்தத்துல டால்பின் 'ஆல் இன் ஆல்'ன்னு சொல்லுங்க!. - மைதிலி.

டால்பின் பற்றிய சிந்தனையிலிருந்த ராஜா, "அத்தை டால்பின் பேசினா எவ்வளவு நல்லாயிருக்கும்!" என்றான்.

"டால்பின்கள் தங்களுக்குள் பேசிக் கொள்கின்றன. ஏதாவது புது விஷயத்தை அறிந்து கொண்டால் ஓடி, ஓடி மற்ற டால்பின்களுக்குச் செய்தியைப் பரிமாறும்" என்றார் அத்தை களைப்புடன்.

"மணி பத்தரை ஆயிடுச்சு. எல்லாரும் தூங்குங்க. ஊர்லயிருந்து வந்தவங்களுக்கு களைப்பாயிருக்கும்" என்றார் அப்பா.

திரும்பிப் பார்த்தான் ராஜா. திலகாவும் மைதிலியும் தூங்கிக் கொண்டிருந்தனர்.

"அத்தை நீங்க வாங்கிக் கொடுத்த இந்த அருமையான புத்தகத்துக்கும், டால்பின் பற்றிய செய்திகளுக்கும் நன்றி" என்றான்.

"நன்றி எல்லாம் எதுக்கு? டால்பின் மாதிரி இன்னும் நிறையப் புத்தகங்கள் உனக்கு வாங்கி அனுப்புறேன்" என்றார் அத்தை.

மகிழ்ச்சியுடன் தூங்கப் போனான் ராஜா.

"ஏம்பா நீ ஒருத்தன்தான் ஏறினே! இரண்டு டிக்கெட் வாங்குற?"


"ஒண்ணு காணாமப் போச்சுன்னா இன்னொன்னு வைச்சுக்கப் பேன் சார்!"


"அந்த ஒண்ணும் காணாமப் போச்சுன்னா?"

"அதற்குத்தான் பஸ் பாஸ் இருக்கே!"

"!?.... !?...... !?.........!?"

— ஆர். ராஜராஜன்





டியூப் போட்டாச்சு!


எங்கள் ஊரில் தண்ணீரும், மின்சாரத் தட்டுப்பாடும் அதிகம். தண்ணீர் ஒருநாள் விட்டு ஒருநாள்தான் வரும். டியூப் லைட்டை மாலை ஆறு மணிக்குள் போட்டால்தான் எரியும்.

ஒருநாள் தண்ணீர் வந்தது. அத்தை என்னிடம், "கோயிலுக்குப் போறேன். மறக்காமல் 'டியூப்' போடு" என்று கூறிவிட்டுச் சென்றார். நானும் "சரி"யென்றேன். கோயிலிலிருந்து திரும்பிய அத்தை, "ஏன் டியூப்பைப் போடலைன்னு" கேட்டார். நான், "நீங்க சொன்னபடி டியூப் போட்டுட்டேன். லைட் எரிகிறது பாருங்கள்" என்றேன். அதற்கு அத்தை, "நான் டியூப்ன்னு சொன்னது செடிக்குத் தண்ணீர் விட" என்றவுடன் அனைவரும் சிரித்தோம்.

சேரன்மகாதேவி, ஸ்ரீகாந்த்.

சிரிக்கலையே!


நானும் நண்பர்களும் புதுக்கோட்டையிலிருந்து திருச்சி செல்லும் வழியில் இருக்கும் அருங்காட்சியகத்திற்கு பஸ்ஸில் சென்று கொண்டிருந்தோம். எனக்கு முன் சீட்டில் என் நண்பனும் பெரியவர் ஒருவரும் உட்கார்ந்திருந்தனர். பெரியவர் நண்பனிடம், "திருச்சியா?" என்று கேட்டார். அது நண்பனின் காதில், "சிரிச்சியா?" என்று விழுந்திருக்கிறது. அதனால் உடனே




அவன், "நான் சிரிக்கலையே!" என்று கூறினானே பார்க்கலாம்! பெரியவரும், நண்பர்களும் சிரித்து விட்டோம்.
புதுக்கோட்டை, பி. சரவணமுத்து.

தகராறுக்குக் காரணம்!

அப்பாவுடன் கடைக்குச் சென்று கொண்டிருந்தேன். வழியில் இரண்டு சிறுவர்கள் தகராறு செய்து கொண்டிருந்தார்கள். தகராறு பெரிதாவதை விரும்பாத அப்பா அவர்களிடம், "ஏன் தகராறு செய்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு ஒருவன், "தகராறுக்கு சின்ன 'ரு'தான்



வரும்னு இவன் சொல்றான். பெரிய 'று' வரும்ன்னு நான் சொல்றேன். அதான்" என்றானே பார்க்கலாம்! அன்றிலிருந்து தகராறு என்று யார் சொன்னாலும், சின்ன 'ரு', பெரிய 'று'தான் நினைவுக்கு வருகிறது.
கொழும்பு, வீரலக்ஷ்மி.




உதைத்தால்...

எங்கள் வகுப்பு ஆசிரியர் ஒவ்வொரு வரையும் பழமொழி எழுதச் சொன்னார். நான் 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்ற பழமொழியை எழுதி யிருந்தேன். என் நண்பனுக்கு எந்தப் பழமொழியும் தெரியவில்லை. அதனால் சும்மா உட்கார்ந்திருந்து தூங்கி விட்டான். அவனை எழுப்பி, "பழமொழி எங்கே?" என்றார் ஆசிரியர். அவன் "தெரியாது" என விழிக்க, ஆசிரியர் பிரம்பை எடுத்தார். உடனே "உதைப்பார் உதைத்தால் உதையும் உறைக்கும்" என்று வேகமாகச் சொன்னான் நண்பன்! ஆசிரியருக்கே சிரிப்பு வந்து விட்டது!
ஆட்டையாம்பட்டி, பி. விஜயகுமார்.

பிரேக் பிடிக்கலே...!

தோழியும் நானும் சைக்கிளில் சென்று கொண்டிருந்தோம். எதிரில் வந்த ஒரு சிறுவன் தோழியின் சைக்கிளில் மோதி விட்டான். தோழி கீழே விழுந்து விட்டாள். சிறுவனிடம் "ஏன் தம்பி பிரேக் போட்டிருக்கக் கூடாதா?" என்று கேட்டேன். அதற்கு அவன், "பிரேக் பிடிக்கலே" என்றான். "ஏன் தம்பி, சைக்கிள் புதுசுதானே? பிரேக் பிடிக்கலைன்னு ஏன் பொய் சொல்றே?" என்று கேட்டேன். "சைக்கிள்



புதுசுதான்! ஆனா நான்தான் பிரேக் பிடிக்கலே" என்றவுடன் சிரித்து விட்டோம்.
அருப்புக்கோட்டை, ச. ஈஸ்வரி.

சொர்க்கமா போறோம்!

எங்கள் சித்தியின் திருமண நிச்சய

தார்த்தத்திற்காகப் பாட்டி வீட்டுக்குச் சென்றிருந்தோம். பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது "திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுது" என்றனர். உடனே என் தம்பி, "அப்படின்னா சித்தி நிச்சயதார்த்தத்திற்கு நாம் எல்லோரும் சொர்க்கத்துக்குப் போகப் போறோமா?" என்றானே பார்க்கலாம்!

தாகுகுப்பம், ஜெ. ராஜா.



குறைத்துக் கொடுங்கள்!

தம்பி அம்மாவுடன் மார்க்கெட் போனேன். தம்பி ஆப்பிள் வாங்கச் சொன்னான். "ஐந்து ஆப்பிள் இருபது



ரூபாய்" என்றார் கடைக்காரர். "கொஞ்சம் குறைத்துக் கொடுங்கள்" என்று கேட்டார் அம்மா. "இருபது ரூபாய்க்கு மூன்று ஆப்பிளாக குறைத்துத் தரேன்" என்றார் குறும்புக்கார கடைக்காரர். அம்மாவைத் தவிர அனைவரும் சிரித்து விட்டோம்.

வெள்ளையாம்பட்டு, சி. லோகேஸ்வரி.

ஒரே ரூபாய்க்கு உலகம்!

டில்லியில் உள்ள ஜனக்புரியில்




வசித்து வருகிறோம். எங்க வீட்டிற்கு எதிரில் தமிழ்நாட்டிலிருந்து புதிதாக குடி வந்தது ஒரு குடும்பம். அந்த வீட்டுப் பையனும் நானும் நண்பர்களானோம். ஒருநாள் நானும் அவனும் காய்கறி மார்க்கெட்டிற்குச் சென்றோம். அவன் தானே ஹிந்தியில் பேசி காய் வாங்குவதாகக் கூறினான். "சரி" என்றேன். ஒரு கடைக்காரரிடம் சென்று, "ஏக் ருப்பியா துனியா தேதோ" என்றான். நானும் கடைக்காரரும் சிரித்து விட்டோம். "ஏன் சிரிக்கிறே?" என்று கேட்டான் நண்பன். "நீ ஒரு ரூபாய்க்கு உலகத்தையே கேட்கிறாய்" என்றேன். அவனுக்கும் சிரிப்பு வந்தது. "உனக்கு கொத்தமல்லி இலைதானே வேணும்? அதுக்கு ஏக் ருப்பியா தனியா தேதோன்னு சொல்" என்றேன். "துனியா, தனியா இரண்டும் என்னைக் குழப்பி விட்டது" என்றான் அவன்.

ஜனக்புரி, கே. பிரபு.

திருக வருவது!

எங்க தெருவில் இரவு வீடியோவில் படம் போட்டார்கள். நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போது வீடியோ கடை முதலாளி, கடைச் சிறுவனிடம் வீடியோவைப் பார்த்துக்கச் சொல்லி விட்டுச் சென்று விட்டார். சிறிது நேரத்தில் படம் தெளிவாகத் தெரியவில்லை. தூங்கிக் கொண்டிருந்த அந்தச் சிறுவனிடம் வீடி



யோவை சரிசெய்யச் சொன்னோம். அவன் தூக்கக் கலக்கத்தில் இருட்டில் டீ.வி.யில் உள்ள ஸ்விட்சைத் திருக கையைக் கொண்டு போனான். "பார்த்து பார்த்து! நீ திருக வர்றது ஸ்விட்ச் இல்ல, என் மூக்கு. தூங்காமல் பார்த்துத் திருகு" என்றான் அருகிலிருந்த ஒரு சிறுவன்.

நடுவைக்குறிச்சி, ஆர். ராதா

உயிரைக் கையில் பிடிச்சு!

அப்பாவின் நண்பர் ஸ்கூட்டரில்



வீட்டிற்கு வந்தார். அவர் சாதாரணமாக ஸ்கூட்டர் ஓட்டுவது கிடையாது. "வாங்க! வாங்க! நீங்க ஸ்கூட்டர்லேயே வரமாட்டீங்களே! இப்ப எப்படி வந்தீங்க?" என்று கேட்டார் அப்பா வியப்புடன்.

"போப்பா! உயிரைக் கையில புடிச்சிக்கிட்டு வந்து சேர்ந்தேன்" என்றார் அப்பாவின் நண்பர். என் குட்டித் தம்பி, "உயிர எப்படிப்பா கையில புடிச்சிக்கிட்டு வர முடியும்?" என்றான் உண்மையான ஆர்வத்தில். அனைவரும் சிரித்தோம்!

வரிக்கல், பி. ஆறுமுகம்.

நுங்கு காசுக்கு...

விடுமுறைக்கு பாட்டி வீட்டிற்குச் சென்றிருந்தோம். வாசலில் நுங்கு விற்பதைப் பார்த்த தம்பி, தாத்தாவிடம், "எனக்கு நுங்கு வாங்கித் தாங்க'' என்றான். எல்லோருக்கும் வாங்க தாத்தா காசு கொடுத்தார். நுங்கு விற்பவரிடம் சென்ற தம்பி, "பத்து நுங்கு எவ்வளவுங்க?'' என்று கேட்டான். "ஐந்து ரூபாய்" என்றார் நுங்கு விற்பவர். "கொஞ்சம் குறைத்துத் தாங்க" என்றான் தம்பி. "சரி! பத்து நுங்கு வாங்கினால் ஒரு நுங்கு இலவசமாகத் தர்றேன்" என்றார் விற்பவர். நுங்கு வாங்கிக்கிட்டு வந்து எல்லோருக்கும் கொடுத்து விட்டுத் தானும் ஒன்றை எடுத்துக் கொண்டான் தம்பி. "தாத்தா! நான் ஓசி நுங்குதான் சாப்பிடறேன். எனக்கு வர வேண்டிய அந்தக்



காசுக்கு ஒரு பென்சில் வாங்கித்தாங்க'' என்றான் தம்பி. நாங்கள் அனைவரும் அவனுடைய புத்திசாலித்தனத்தைப் பாராட்டினோம்.

செம்பனார்கோவில், ஆர். விசாலம்.

இப்பவே!

அக்கா மகள் சிறுமி மீனாட்சி வாழைக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள். முடிந்ததும் ஏதோ யோசித்தவளாக ஒரு கை நிறைய உப்பை எடுத்து வந்து வாழை மரத்தடியில் போட்டாள். "எதுக்கு உப்புப் போடுறே?'' என்று கேட்டேன். "இப்பவே உப்புப் போட்டுட்டா, சமைக்கும்போது தனியாப் போட வேண்டியதில்லையே?'' என்றாளே பார்க்கலாம்!

சென்னை, வியாசை. கிருஷ்ணன்.

இப்படி ஓர் அம்மாவா?

அ.சு. கிருஷ்ணன்

அம்மாதான் கந்தனிடம் கேட்டாள். ''கந்தா, என்னப்பா ஸ்கூலயிருந்து வந்ததிலிருந்து சோகமா உட்கார்ந்திருக்கே? நான்கூட இன்னைக்கு உன் டீச்சரைப் பார்த்தேனே. உனக்கு முன்னாடிதானே நீ நல்லாப் படிக்கறேன்னு சொன்னாங்க. அப்புறம் ஏன் வருத்தமா இருக்கிறே?''

''எல்லாம் உன்னாலதான். உன்னை யாரு பள்ளிக்கு எல்லாம் வரச் சொன்னது? எனக்கு ரொம்ப அவமானமாப் போச்சு. நண்பர்கள் எல்லாம் உன்னைப் பார்த்த பிறகு என்னோட சரியாக்கூடப் பேச மாட்டேங்கிறாங்க'' - கந்தன் தன் தாயின் முகத்தைக்கூடப் பார்க்கப் பிடிக்காதவனாகக் கூறினான்.

''கந்தா, நான் என்ன வேணும்னா வந்தேன்?... சுற்றுலா போறதுக்காகக் கட்ட வேண்டிய பணத்தை நீ வீட்டிலேயே மறந்து வெச்சுட்டுப் போயிட்டே. இன்னைக்குத் தான் பணம் கட்ட வேண்டிய கடைசி நாள்னு நீ சொல்லியிருந்ததாலதான் உன் பள்ளிக்கு அவசியம் வர வேண்டியதாயிடுச்சு!'' - அம்மா பரிவாகக் கூறினாள்.

''ஆமாம். இந்த முகத்தை வெச்சுக்கிட்டு வந்ததே தப்பு. இதுல வேற காரணங்களைச் சொல்றியே நீ. 'என்னடா உன் அம்மா, மூஞ்சி எல்லாம் தீக்காயத் தழும்புகளோட இப்படி இருக்காங்க?'. என் அம்மா எவ்வளவு அழகா இருப்பாங்க தெரியுமா? நீ ரொம்ப பாவம்டான்னு' பிரகதீஷ் சொல்றான். அந்த அனிதாகூட 'உங்க அம்மாவைப் பார்த்தால் பயமா இருக்குன்னு சொல்றாள். உன்னைக் கண்டாலே பிடிக்கலைம்மா. ஏன்தான் கடவுள் எனக்கு இப்படியொரு அம்மாவைக் கொடுத்தாரோ?'' - கோபத்தில் கண்டபடி பேசினான் கந்தன்.

''கந்தா, உன் மனசுல என்ன நெனைச்சிட்டிருக்கே? நீ பேசறதையெல்லாம் கேட்டுக்கிட்டுதானிருந்தேன். பாடத்துல மட்டும் முதல் மதிப்பெண் வாங்கினால் போதாது. பெத்தவங்களை மதிக்கறதுக்கும் நீ கத்துக்கணும். 'அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்', தந்தை சொல் மிக்கதொரு மந்திரம் இல்லை'ன்னு தமிழ்ப் பாடத்துல படிக்கிறியே. அந்தக் கருத்துப் படி நீ நடந்துக்க வேண்டாமா?. நீ பேசின ஒவ்வொரு சொல்லும் அம்மாவை எப்படிப் புண்படுத்தியிருக்கும்ன்னு தெரியுமா? அம்மாவிடம் உடனே மன்னிப்புக் கேள்'' - கந்தனுடைய அப்பா கடுமையாகக் கூறினார்.

''என்னையே தப்பு செய்யறேன்னு சொல்றிங்களே அப்பா! இவ்வளவு தீக்காயமிருக்கிற மூஞ்சியுள்ள அம்மா மேல ஒரு தப்புமில்லையா? நான் ஏன் மன்னிப்புக் கேட்கணும்?'' - எதிர் வாதத்தை வைத்தான் கந்தன்.

''இவ்வளவு சொல்லியும் நீ கேட்கல, நானே உண்மையைச் சொல்றேன். உன்னாலதான்டா உன் அம்மாவுக்கு இவ்வளவு பெரிய காயமே ஏற்பட்டுச்சு'' என்றார் அப்பா.


''என்னாலயா? என்னப்பா சொல்றீங்க!'' கந்தன் அதிர்ச்சியுடன்


கேட்டான்.

''ஆமாண்டா. சின்ன வயசுல உன் படுக்கையில் தீ பர விடுச்சு. அதைப் பார்த்த உங்க அம்மா தைரிய மாகத் தன் உயிரைக் கூடப் பொருட் படுத்தாமல் உன்னை அள்ளி எடுத்தாள். நீ ஒரு துளிக்கூடத் தீயில சிக்கிடக் கூடாதேன்னு நெனைச்சு அப் படிச் செய்தாள். அப்ப படுக்கையிலே இருந்த புடைவை விரிப்பு குபுகுபுனு எரிஞ்சு, அதுலே இருந்து வந்த ஜ்வாலை உங்க அம்மா முகத்துல பட்டு, இந்தத் தீக் காயத்தை ஏற்படுத் திருச்சு'' - கம்மிய குரலில் சொன்னார் அப்பா.

''போதும் விடுங்க. அவன்தான் சின்னப் பையன். தெரியாமல் ஏதோ பேசிட்டான்'' என் றாள் அம்மா.

''நீ சும்மா இரு சுசீலா. எல்லா விஷயத்தையும் தெரிந்து கொண் டால்தான் அவன் இனி மேலாவது உன்னை வெறுக் காமல் இருப்பான். கந்தா, உன் அம்மா இக்காயம் பட் டுக்கிட்டப் பிறகு





பாடம்!

நகரின் பெரிய ஓட்டலில் ஒன்றான வசுமதி பவனின்' சர்வர் சுரேஷ். சாப்பிட வருபவர்களிடமிருந்து அதிக 'டிப்ஸ்' பெறுபவனாகத் திகழ்பவன்.

சாப்பிட்ட பில்லுக்கு பணம் வைப்பவர்களுக்கு மீதிச் சில்லரையைத் திருப்பி வைக்கும்போது ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்களாக மீதி வரும்படி காஷியரிடம் (ஒப்பந்தம் செய்துதான்) வாங்கி வைப்பான்.

சாப்பிட்டவர் மீதி வந்திருக்கும் சில்லரைகளில் குறைந்த மதிப்புள்ள ஒரு ரூபாயை மேஜை மீதிருக்கும் தட்டில் இவனுக்கு 'டிப் ஸாக' வைத்துவிட்டுச் சென்றுவிடுவர். அப்படி வைக்காவிட்டால் சுரேஷ் முகத்தைச் சுளிப்பான்.

மாதச் சம்பளத்தைவிட இத்தகைய 'டிப்ஸ்' தான் சுரேஷின் பொருளாதார நிலையைக் கணிசமாக முன்னேற வைத்தது.

ஒருநாள் ஒரு கொழுத்த மனிதர் சுரேஷ் சர்வ் செய்யும் டேபிளில் வந்து உட்கார்ந்தார். வயிறு நிறையச் சாப்பிடுவதைக் கண்ட சுரேஷின் மனம் களித்தது. இந்தத் தடவை மீதிச் சில்லரையாக ஐந்து ரூபாய் நாணயத்தைத் தட்டில் வைக்க எண்ணினான்.

சாப்பிட்ட பிறகு அந்த மனிதர் ஐம்பது ரூபாய்த் தாளைப் பில்லுடன் வைத்தார். சுரேஷ் மீதிச் சில்லரையை ஐந்து ரூபாய் நாணயங்களாகவே தட்டில் கொண்டு வந்து வைத்தான்.

வேறு யாரோ அந்தநேரம் பார்த்து சுரேஷைக் கூப்பிட அவன் அந்தப் பக்கம் சென்றுவிட்டான். சிறிது நேரம் கழித்து சுரேஷ் ஆசையாசையாய் அந்த மனிதர் சாப்பிட்ட டேபிளுக்கு விரைந்தான்.

அங்கிருந்த தட்டைப் பார்த்த அவன் அதிர்ந்தான். அவன் நினைத்ததைப் போல் ஐந்து ரூபாய் நாணயம் அங்கு இல்லை. அதற்குப் பதிலாக அவனுக்குப் பாடம் சொல்லும் விதமாகப் பத்துப் பைசா நாணயம் மட்டுமே அங்கிருந்தது! அதுவும்கூட செல்லாத காசு!

— அ.சு.கி

மருத்துவமனையிலேயே தங்கினால் உன்னைச் சரியா கவனிக்க வீட்டுல ஆளிருக்காதுன்னு அந்த வேதனையைத் தாங்கிக்கிட்டு வீட்டுக்கும் மருத்துவமனைக்கும் அலைந்தாள்'' என்றார் அப்பா.

கந்தன் தன் அம்மாவையே இமைக்காமல் பார்த்தான். கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.

''இவ்வளவு ஏன்டா, நீ நல்லபடியா இருக்கணும்னு ஒரு கோவில் பாக்கியில்லாமல் வேண்டியபடி நேர்த்திக்கடனை முடிச்சுட்டு வந்தாள். தன்னுடைய நீண்ட கூந்தல் போகுதேன்னு துளிக்கூட கவலைப்படாமல் திருப்பதியில் போய் முடி இறக்கிக்கிட்டாள். அப்படிப் பட்டவளைப் பார்த்து அழகில்லைன்னு சொல்லி மனசக் காயப்படுத்திட்டியே?'' - அப்பா வருத்தம் மேலிடக் கூறினார்.

''அம்மா... ப்ளீஸ் என்னை மன்னிச்சிடுமா. உண்மை தெரியாமல் நான் உன்னை என்னென்னமோ பேசிட்டேன். நீ எனக்காகத் தினமும் எவ்வளவு வேலையைச் செய்யறே! அதெல்லாம் நெனைச்சுப் பார்க்காமல் பேசிட்டேன். உண்மையான அழகு உன்னோட நல்ல மனசுதான்னு இப்ப புரிஞ்சுக்கிட்டேன். என்னை உயிர் பிழைக்க வைக்க எவ்வளவு பாடு பட்டிருக்கே! இனிமேல் இப்படிப் பேச மாட்டேன்'' - கந்தன் தன் தாயிடம் கதறி அழுதான்.

அம்மா அவன் முதுகை வருடி அவனைச் சமாதானப் படுத்தினாள். அப்பாவுக்கும் தன் மகன் திருந்திவிட்டதைக் கண்டு மகிழ்ச்சி.

மெல்ல எழுந்த கந்தன் அம்மாவின் முகத்தை ஏறிட்டான். இப்போது கந்தனுக்கு அம்மாவின் முகத்தில் இருந்த தீக்காய வடுக்கள் பெரிதாகப் படவில்லை. தன் பிஞ்சு இதழ்களால் அம்மாவின் முகத்தை முத்தமிட்டான்.

எப்பப்பாரு...

ராமுவைக் கூப்பிட்டுக் கொண்டே வந்தாள் அம்மா. ஆனால் ராமுவின் காதில் அது விழவேயில்லை. 'அப்படி என்னதான் செய்து கொண்டிருந்தான்' என்கிறீர்களா?

ராமு, அம்மாவுக்குப் பத்தடி தூரத்தில் அமர்ந்து டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தான். தொலைக்காட்சியைப் பார்க்கும் போது ராமுவுக்குத் தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே தெரியாது. அந்த அளவுக்கு டீ.வியோடு ஒன்றிப் போய் விடுவான். அன்றும் அப்படித்தான் டீ.வி.யோடு ஐக்கியமாகியிருந்தான்.

அம்மா, ராமுவின் தோளைத் தட்டி, உலுப்பியதும்தான், "என்ன அம்மா?" கூப்பிட்டீங்களா?" என்றான் ராமு.

"கூப்பிட்டேனா...! கூப்பாடே போட்டேன். எத்தனை தடவை கூப்பிடுவது? டீ.வி. பார்த்தா, இப்படியா தன்னையே மறப்பது! இந்த ஆண்டு பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதணும். இப்படி எல்லா நேரம் டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தால் படிப்பு அதோகதிதான்!" என்றாள் அம்மா.

"இந்த அறிவுரையை இன்னைக்கு நேற்றா சொல்கிறோம்? இந்தத் தொலைக் காட்சிப் பெட்டிய வாங்கின நாளா நாமும், சொல்லிச்சொல்லி அலுத்திட்டோம். ராமு கேட்கிற மாதிரி தெரியலையே! எதிர்காலத்தில் இவன் என்ன பண்ணப் போறானோ?" என்றார் அப்பா.

"என்னப்பா...! நான்தான் காலை நேரத்திலே படித்து விடுகிறேனே? அப்புறம் என்ன?" என்றான் ராமு.

"அம்மா சொன்ன மாதிரி நீ இந்த ஆண்டு பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதப் போறே. அதில் நல்ல மதிப்பெண் வாங்கணும்னா நல்லாப் படிக்கணும். காலையில் மட்டும் படிச்சாப் போதாது. அதோட அதிக நேரம் டீ.வி. பார்த்தா கண்ணும் கெட்டுப் போயிடும். சீக்கிரமே சோர்வடைஞ்சிடும்" என்றார் அப்பா.

"ச்சே... இந்த வீட்டிலே நிம்மதியா டீ.வி.யே பார்க்க முடியாது. எப்பப் பாரு ஒருத்தர் மாத்தி ஒருத்தர் ஏதாவது சொல்லிக்கிட்டே இருப்பாங்க" என்று முணுமுணுத்துக் கொண்டான் ராமு. அப்பொழுது கூட டீ.வி. பார்ப்பதை நிறுத்தவில்லை.

ஒரு வாரம் ஓடியது. காலை நேரம். அப்பா பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். "ராமு... இங்கே வா" என்று அவனை அழைத்தார். ராமு உடனே வந்தான். காரணம்,



அப்பொழுது அவன் டீ.வி. பார்த்துக் கொண்டிருக்கவில்லை. படித்துக் கொண்டிருந்தான். அதனால்தான் அப்பா அழைத்ததும் வந்து விட்டான்.

"என்னப்பா?" என்று கேட்டான் ராமு.

"நேற்று அண்ணா நகரில் ஒரு வீட்டில், ஹாலில் உட்கார்ந்து எல்லோரும் டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தார்களாம். சாப்பாட்டு அறையில் இருந்த ஃபிரிட்ஜை ஒரு பலே திருடன் பின்பக்க வழியாகத் திருடிக் கொண்டு போய் விட்டானாம். டீ.வி. பார்த்து முடித்து சாப்பிட உட்கார்ந்த போதுதான் ஃபிரிட்ஜ் திருடு

தேவி நாச்சியப்பன்

போனதைக் கவனித்திருக்கிறார்கள் அந்த புத்திசாலிகள்! இதோ பார், இந்தச் செய்தித்தாளில் போட்டிருக்கு. தன்னை மறந்து டீ.வி. பார்க்கறதுனால என்னவெல்லாம் நடக்குது பார்த்தாயா?'' என்று செய்தித்தாளைக் காட்டினார் அப்பா.

"நம்ம வீட்டிலதான் டீ.வின்னாலே வெறுக்கிற அம்மா, நீங்க எல்லாரும் இருக்கீங்களே? உங்களை எந்தத் திருடனாலும் ஏமாத்த முடியாது, கவலைப்படாதீங்கப்பா" என்று கிண்டலாகக் கூறினான் ராமு.


இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அம்மா, "குதர்க்கம் பேசத் தெரியுதே தவிர, பண்ணுவது தப்பு. அதை இனி மேலாவது திருத்திக்கணும்னு தோணலையே! நீ திருந்தவே மாட்டாயா?" என்று கேட்டாள்.

"அம்மா, தவறு செய்யறவங்கதான் திருந்தணும். நான் என்ன தவறு செய்தேன்? டீ.வி. பார்க்கறது ஒரு தவறா?" என்று கேட்டான் ராமு.

"டீ.வி. பார்க்கறது தவறு இல்லை. ஆனால் அதை நாள் முழுக்கத் தொடர்ந்து பார்க்கறதும், பார்க்கும்போது சுற்றுப்புறத்தையே மறந்து விடுவதும்தான் தவறு. எல்லாருக்கும் அது தொலைக்காட்சின்னா, நமக்கு அது தொல்லைக்காட்சியா இருக்கு" என்றார் அப்பா.

ராமு விடவில்லை. "நீங்கதாம்பா இப்படிச் சொல்றீங்க. பள்ளி ஆண்டு விழாவுக்கு வந்த பேராசிரியர், டீ.வி.யின் மூலம் மாணவர்கள் பல செய்திகளை எளிதாகத் தெரிந்து கொள்கிறார்கள். இன்றைய சிறுவர்களின் நுட்பமான அறிவு வளர்ச்சிக்குக் காரணமாக இருப்பது டீ.வி.தான்னு சொன்னாரு" என்றான்.

"அவர் சொன்னது சரிதான். டீ.வி. மூலம் பல வயதினருக்கும் பலதரப்பட்ட மக்களுக்கும் பலவிதமான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. அதில் கல்வி, தொழில், அறிவியல், மருத்துவம், பொழுதுபோக்குன்னு நிறைய இருக்கு. மாணவர்களுக்கான நிகழ்ச்சியையும், அறிவியல் வளர்ச்சிக்கு உதவும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும்



பார்க்கிறது தவறே இல்லை. ஆனால் மாலை ஐந்து மணிக்குப் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன் டீ.வி.யைப் போட்டா ராத்திரி பத்து, பதினோரு மணி வரை கண்ணிமைக்காம தன்னையே மறந்து பார்க்கிறதைத்தான் தவறுன்னு சொல்றோம்'' என்றார் அப்பா.

"சாப்பிடக் கூப்பிட்டா வருவதில்லை. அப்படியே வந்தாலும் டீ.வி.யைப் பார்த்துக் கொண்டே தட்டில் என்ன இருக்கு? என்ன சாப்பிடுகிறோம்னே தெரியாமல் சாப்பிடுறே! சொன்னா, கோபம்தான் வருது. எப்பத்தான் மாறப் போறியோ?'' என்றாள் அம்மா.

அம்மா சொல்லிக் கொண்டிருக்கும்போதே ராமுவை அழைத்தபடி உள்ளே வந்த பக்கத்துத் தெரு கோபி, "ராமு ஊருக்கு அவசரமாப் போறேன். என் லீவ் லெட்டர் இதோ இருக்கு. டீச்சர் கிட்ட கொடுத்திடு'' என்றான் பதற்றத்துடன்.

"என்ன கோபி? என்ன விஷயம் திடீர்னு ஊருக்குப் போறே?'' என்று கேட்டான் ராமு.

கோபியால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தேம்பித் தேம்பி அழுதான்.

"காரைக்குடியில இருக்கும் தாத்தாவுக்கு உடம்பு சரியில்லைன்னு தந்தி வந்திருக்கு. அதான் நாங்க எல்லாரும் போகிறோம்."

"போன வாரம் கூட உங்க வீட்டில் பார்த்தேனே? நல்லாத்தானே இருந்தாரு? திடீர்னு என்ன?'' என்று கேட்டான் ராமு.

"இரண்டு நாளைக்கு முன்னாடிதான் தாத்தா ஊருக்குப் போனாரு. என்ன ஆச்சுன்னே தெரியலை. போய்ப் பார்த்தாத்தான் தெரியும்'' என்று சொல்லி விட்டுப் போனான் கோபி.

ஒரு வாரம் ஓடியது.

கோபி ஊரிலிருந்து வந்திருந்தான். அவனைத் தேடிப் போனான் ராமு.

"தாத்தாவுக்கு இப்பப் பரவாயில்லே'' என்ற கோபி தொடர்ந்து, "காரைக்குடியிலே, போன ஞாயிற்றுக்கிழமை மாலை தாத்தா டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தாராம். அவர் டீ.வி. பார்த்தால் தன்னையே மறந்து அதில் ஒன்றி விடுவார். வாசலுக்கு எதிர்ப்புறம் தாத்தா டீ.வி. பார்த்திட்டிருக்கும்போது பின்புறமா கொள்ளைக்காரங்க வீட்டுக்குள்ள புகுந்து, கதவையும் சாத்திட்டாங்க. டீ.வி. சத்தத்தில் அந்தக் கொள்ளைக்காரங்க வந்





மியாவ்! மியாவ்! பூனையார்!
மீசையுள்ள பூனையார்!
அக்கம்பக்கம் பார்க்கிறார்
அஞ்சி அஞ்சிச் செல்கிறார்
திட்டம் பல போட்டுமே
திருதிருன்னு முழிக்கிறார்!
சட்டிப்பாலைத் தேடியே
சமையலறை செல்கிறார்!
வேண்டாம் இந்த விளையாட்டு
விலகிப் போங்கோ பூனையார்!
கள்ளத்தனம் நீக்கியே
கண்ணியமாய் வாழ்வீரே!

— தேனி முருகேசன்

தும் தெரியலை. கதவைச் சாத்தினதும் கேட்கவில்லை போலிருக்கு" என்றான்.

"அப்புறம் என்னாச்சு?"

"பாட்டி சமையல் அறையிலே இருந் திருக்காங்க. கொள்ளைக்காரங்க கதவைச் சாத்திட்டு, பாட்டியையும், தாத்தாவையும் ஒரு தூண்ல கட்டிப் போட்டு நகை, பணம், பட்டுப் புடைவை எல்லாத்தையும் திருடிக் கிட்டுப் போயிட்டாங்க. பாட்டியும் தாத்தா வும், "திருடன் திருடன்"னு கத்தி யிருக்காங்க. டி.வி. சத்தத்திலே யாருக்கும் கேட்கவில்லை யாம். அப்புறம் ரொம்ப நேரம் கழிச்சு வந்த தாத்தாவோட நண்பர்தான் கயிறை அவிழ்த்து விட்டிருக்காரு."

"நகை, பணம் பறிபோனதினாலேயோ, அல்லது திருடர்களைப் பார்த்ததனா லேயோ எங்க தாத்தாவும், பாட்டியும் பிரமை பிடிச்ச மாதிரி இருந்திருக்காங்க. தாத்தாவுக்கும் காய்ச்சல் வந்து, இரத்தக் கொதிப்பு அதிகமாயிடுச்சாம். தாத்தா வோட நண்பர் போலீஸ்ல புகார் கொடுத் திட்டு, டாக்டர்கிட்ட கொண்டு போய்க் காட்டிட்டு, எங்களுக்கும் தந்தி கொடுத்திருக்காரு."

"நாங்க போய் மூன்று நாட்கள் இருந்தது தாத்தாவுக்கும் பாட்டிக்கும் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. இருந் தாலும் தாத்தா அந்த அதிர்ச்சியில இருந்து இன்னும் முழுவதுமா விடுபடலை."

கோபி சொன்னதை நினைத்துக் கொண்டே வீட்டுக்கு வந்தான் ராமு. அவன் மனத்தில் பெரிய போராட்டம்.

சிறிது நேரம் கழித்து, "நானும் வந்ததிலிருந்து பார்க்கிறேன்! டி.வி.யே போடலையே! உனக்குப் பிடிச்ச 'சின்னத் திரை' 'ஒளியும் ஒலியும்' கூடப் பார்க் கலையே! என்ன ஆச்சு உனக்கு?" என்று கேட்டாள் அம்மா.

ராமு, கோபி சொன்னதைச் சொன் னான். "நீங்களும், அப்பாவும் எத் தனையோ சொல்லியும் நான் கேட்கலை. ஆனால் கோபியோட தாத்தாவுக்கு ஏற் பட்ட விபரீதத்தைக் கேட்டு மாறிட்டேன். இனிமேல் டி.வி.யைத் தொடர்ந்து பார்த்துக்கிட்டே இருக்க மாட்டேன். முக்கியமா, சுற்றுப்புறத்தை மறந்து டி.வி. பார்க்கவே மாட்டேன்" என்றான் ராமு.

அம்மாவுக்கு ஒரே மகிழ்ச்சி.

அதுதான் கவிதா!

கதை, அமைப்பு : சுஜாதா
ஓவியம் : சசி





நனைந்தபடி வீட்டுக்குள் வந்தாள்.
எங்காவது நின்னுட்டு வரக்கூடாதா?
நாளைக்குத் தேர்வு. அதான் படிக்க ஓடி வந்தேன்.
பரீட்சையை வச்சுக்கிட்டா பூ விக்கப் போனே?
படிச்சிட்டேன். திருப்பிப் பார்த்தா போதும்!
விளையாட வேண்டிய வயசுல இப்படி ஓடியாடித் திண்டாடுதே!
எல்லாம் நமக்காகத் தானே?
கஷ்டம் தெரிஞ்ச பொண்ணு. ஒரு குறையும் வராது.
எவ்வளவு கஷ்டப் பட்டாலும் கவிதாவை நல்லாப் படிக்க வைக்கணும். இதுதான் லட்சியம்!


அப்பா! நீங்க ஓய்வெடுங்க. கடையை கவனிச்சிட்டே படிக்கிறேன்.
சரிம்மா!
வகுப்பில் கவிதா பாடங்களை நன்கு கவனிப்பாள். எத்தனை பொறுப்பு இருந்தாலும் அவளே முதல் ரேங்க்.
கவிதாவின் தோழி பானு. அடுத்த ரேங்க். கெட்டிக்காரி.
பள்ளியில் புதிதாகச் சேர்ந்தாள் மாலா
நான் மாலா.
நான் கவிதா, இவ பானு.
கவிதா ஒரு ஆல்ரவுண்டர். பேச்சு, படிப்பு, விளையாட்டு, எல்லாத்திலும் அவள்தான் முதல்.
ஆமாம்! ஆசிரியைகளுக்கும் உதவியாக இருக்கிறாள்!


யாரைப் பாரு கவிதா புகழ தானா? சே!
மாதத் தேர்வுல வழக்கப்படி கவிதாதான் முதல் ரேங்க். பானு நீ மூனாவது. ரெண்டாவது ரேங்க் மாலாவுக்கு போயிடுச்சு!
மாலா வீட்டில் –
முதல் ரேங்க் யாரு?
என்னது! ரெண்டாவது ரேங்க்!
பூக்கார கவிதாதான்!
ஒரு பூக்காரி முதல் ரேங்க்! நீ ரெண்டாவதா?
விட மாட்டேன்! அடுத்த தடவை நான்தான் முதல் ரேங்க்!



மறுநாள் பள்ளியில் –
பார்த்தாலே எரிச்சலா வருது! இவளாலதானே அம்மாவிடம் திட்டு வாங்கினேன்?
வணக்கம் மாலா.
வணக்கம் பானு!
என்னாச்சு மாலா? ஏன் ஒரு மாதிரி இருக்கே?
இல்லையே? சாதாரணமாத் தானே இருக்கேன்!
பெரிசா துக்கம் கேட்கறா? எல்லாத் துக்கும் இவதானே காரணம்? முதல் ரேங்க் வாங்கி மட்டம் தட்டாம விடமாட்டேன்.
ஏன், மாலா பேசறதில்லே?
தெரியலே. ஆனா இதுக்காக வருத்தபபடாதே!
மறுநாள் –
மாலா ஏன் வரலே?
காய்ச்சலாம்
மாலையில் மாலா வீட்டுக்குப் போனாள்.
மாலா எப்படிம்மா இருக்கா? தேவலையா?
காய்ச்சல் விடலே. போய்ப் பாரு...


காய்ச்சல் குறைஞ்சிருக்கா மாலா?
எதுக்குடி வீட்டுக்குள்ள வந்தே?
இன்னிக்கி நடத்தின பாடத்தை சொல்ல...
அதை நீ சொல்லாதே. பூக்காரியா லட்சணமா வாசலோட நில்லு.
கவிதா வருத்தத்துடன் சென்றாள்.
மாலாவுக்கு குணமான பிறகு பள்ளியில் –
இந்த தடவையும் தேசிய மாணவர் படைக்கு நீதான் கவிதா தலைவி!
டீச்சர்! நானும் கூட நல்லா வேலை செய்வேன்.
மாலாவையே தலைவி யாக்குங்க டீச்சர். வீட்ல எனக்கு நிறைய பொறுப்பு இருக்கு!
உன் விருப்பம் கவிதா.
பள்ளி முடிந்ததும் மழை பிடித்துக் கொண்டது.
வெள்ளிக் கிழமை... சீக்கிரம் அம்மாவுக்கு உதவணும்னு நினைச்சேனே?
எங்கிட்ட குடையிருக்கு வாடி, ரெண்டு பேரும் சீக்கிரமா போயிடலாம்.
என் கூட கார்ல வந்துடு பானு.
கவிதா நீயும் வா.


பானு. நான் கூப்பிட்டது, உன்னை மட்டும்தான். கண்ட கழுதைக்கெல்லாம் என் கார்ல இடமில்லை.
அவ வீடும் போற வழியில தானே இருக்கு!
கழுதையெல்லாம் கார்ல போகக் கூடாது, பானு. நீ கார்ல போடி.
அப்போ, குடையைத் தரேன் நீ வந்துக்க!
மாலா, பானு காரில் போக குடையுடன் கிளம்பினாள் கவிதா.
பள்ளி தகவல் பலகைக்கு முன்பு –
பேச்சு, கட்டுரை, கவிதை மூணுலயுமா உனக்கு பரிசு!
இந்த ஆண்டும் பாரதி விழா போட்டி பரிசுகளை கவிதாவே குத்தகைக்கு எடுத்திருக்காடி! வாழ்த்து கவிதா.
எல்லாப் பரிசையும் நீயே வாங்கிட்டா எப்படி?
பாட்டுப் போட்டில போனாப் போகுதுன்னு மாலாவுக்கு விட்டுக் கொடுத்திருக்காளே?
எனக்கு யாரும் விட்டுக் கொடுக்கல. என் திறமைக்காக கிடைச்ச பரிசு. டீச்சரையெல்லாம் ஜால்ரா அடிச்சு வாங்கினதில்ல.
நல்லா பாடினே. பரிசு கிடைச்சதிலே அதிசய மில்லே! வாழ்த்துகள்.


உன் வாழ்த்து யாருக்கு வேணும்? கட்டுரை, பேச்சு போட்டில எனக்கு ரெண்டாவது இடம்தானே!
நாட்கள் சென்றன. ஒரு நாள் –
கவிதா! கூடைல இருக்கும் எல்லாப் பூவையும் கொடு. அவசரமா வேணும். வீட்ல வந்து காசு வாங்கிக்க.
உனக்கு இல்லாததா மாலா? எடுத்துக்க.
மாலா வீட்டில் –
பூ வாங்கினதுக்கு வீட்ல காசு தராதாச் சொன்னியே!
எதுக்கு வந்திருக்கே, என்ன வேணும்?
என்னடி அளக்கறே! உங்கிட்ட நான் வந்து பூ வாங்கினேனா?
மாலா பூ எதுவும் வாங்கலையே! வாங்கினா வீட்லதானே இருக்கும்?
காசு தேவைன்னா வாங்கிக்க. அதுக்கு ஏன் பொய் சொல்றே?
பொய் சொல்லலை. முப்பது ரூபா போச்சே! என்ன செய்வேன்?


அழுதபடி சென்றாள் கவிதா.
பள்ளியில் –
சுற்றுலா போறோம். சிறப்பான சுற்றுலா கட்டுரைக்கு பரிசும் உண்டு.
அது ஆண்டு மலரில் வெளியாகும்.
எந்தெந்த ஊர் டீச்சர்?
எவ்வளவு கட்டணம்?
பெங்களூர், மைசூர், ஊட்டி போறோம். நூத்தி ஐம்பது ரூபாய்.
யாரெல்லாம் வரப் போறீங்க?
அப்பாடி! கவிதா சனியனால வரமுடியாது. என் கட்டுரைதான் பரிசு வாங்கி மலர்ல வரப்போகுது!
நீ வரலே கவிதா?
எத்தனை பணம் சேர்ந்திருக்கு டீச்சர்?
போனமாதம் கட்டும்போது பார்த்தேன். நூத்தி ஐம்பதுக்குக் குறையாது?
அப்ப, வீட்ல கேட்டுட்டு சொல்றேன் டீச்சர்!
நீ கண்டிப்பா வரணும். நாலு வருஷமா தொடர்ந்து உன் கட்டுரை வந்துட்டிருக்கே!


வீட்டில் —
காரணமாத்தான் சுற்றுலாவுக்கு போகலையப்பா.
ஏம்மா, பணம் பத்தலையா?
சஞ்சயிகாவில பணமெல்லாம் சேர்ந்திருக்கு.
அப்புறமென்னம்மா. எங்களால எங்கேயும் கூட்டிட்டுபோக முடியலேன்னுதானே தினமும் முடிஞ்சதைக் கொடுத்து சஞ்சயிகாவுல போடச் சொல்லி ஒவ்வொரு வருஷமும் அனுப்புறோம்?
அடுத்த வருஷம் பத்தாவது அப்பா. நிறைய செலவுண்டு.
அப்ப பார்த்துக்கலாம். நாளைக்கே பெயரைக் கொடுத்திடு.
சரிப்பா!
கவிதா போனாள்.
பள்ளியில் —
கவிதா, டீச்சர் உன்னை வரச் சொன்னாங்க.
இதுல நாத்தி தொன்னூத்தி ரெண்டு ரூபா இருக்கு. மீதியை செலவுக்கு வச்சுக்க.
நீங்களே பணத்தைக் கட்டிருங்களேன் டீச்சர்?
கணக்கு டீச்சரிடம் தான் தரணும். நீயே தந்திடு. பத்திரம்.
சரிங்க டீச்சர்.



கணித வகுப்பில் –
சுற்றுலாவுக்கு பணம் கொண்டு வந்தவங்க வரிசையா வந்து கொடுங்க!
டீச்சர்! என் பணத்தைக் காணோம்!
எல்லோரும் பணம் கொண்டு வந்திருப்பாங்களே, எப்படித் தேடுறது?
அழாதேம்மா. உனக்கு யார்மேல யாவது சந்தேகம் இருக்கா?
கவிதா மேலதான்!
கவிதா மேலயா! நல்லா யோசிச்சு சொல்லம்மா?
அவ பைல பாருங்களேன்?
கொண்டா கவிதா. சந்தேகம்னு சொன்னதுக்கப் புறம் என் கடமையை நான் செய்ய வேண்டாமா?
இது சஞ்சைகாவுல சேர்த்த பணம். நூத்தித்தொன்னூத்தி ரெண்டு ரூபா இருக்கு.


நூத்தம்ப துன்னு நினைச்சு அதைச் சொன்னேனே? இப்போ வேற தொகை சொல்றாளே! நம்ம குட்டு வெளிப்பட்டுடுமோ?
மாலா சமாளித்து —
அதுல நூற்றைம் பதுதான் என்னுது. மீதி என்னுதில்ல.
ரெண்டு பேரும் தலைமை ஆசிரியரிடம் வாங்க!
எதிரே வந்த வகுப்பு ஆசிரியை —
கவிதா ஏன் அழறா டீச்சர்?
கணித ஆசிரியை நடந்ததை விவரித்தார்.
ஏன் மாலா உன் பணத்தை ரூபாய் நோட்டாவா வச்சிருந்தே?
இல்ல. ஒரு நூறு, ரெண்டு இருபது, ஒரு பத்தா...
அப்படின்னா... இது உன்னுதில்ல. இதுல, ஒரு நூறு, ஒரு ஐம்பது, நாலு பத்து, ஒரு ரெண்டு ரூபாய்தான் இருக்கு!


இதற்குள் –
மாலா, மாலா பணம் இதோ இருக்கு. கணக்கு நோட்டுல இருந்தது.
மாலா, நீ வசதியானவ. நல்லாவும் படிக்கிறே. எதுக்காக, கவிதா மேல வீண்.பழி சுமத்தினே?
டீச்சர் என்னை மன்னிச்சிடுங்க.
பணம் காண லேங்கிற பதட்டத்துல மாலா சொல் லிருப்பா. இனி கவனமா இருப்பா.
கவிதாவுக்கு எத்தனை பெருந்தன்மை பார்த்தியா? இனிமேலாவது ஒழுங்கா இரு மாலா.
ஆசிரியை போனதும் –
என்னை மன்னிப்பியா கவிதா?
எதுக்கு மன்னிப்பு?
உனக்கு எத்தனை கெடுதல் பண்ணி, அவமானப் படுத்தினேன்?
பழசையெல்லாம் மறந்துடு மாலா.



பணத்தை எடுத்து –
இந்தா கவிதா! முப்பது ரூபாய்
எதுக்கு!
பூ வாங்கிட்டு ஏமாத்தலே? அந்தப் பணம்தான்.
நீ இத்தனை மோசமா! கவிதா கூட மூச்சு விடலையே!
அதுதான் கவிதா!
சரி, சரி! ரெண்டு பேரும் சீக்கிரமா பணத்தைக் கட்டுங்க.
நான் வரல. உங்க கூட வர எனக்குத் தகுதி யில்லை.
அப்ப நானும் போகலை.
நானும் கூட போகலை.
சுற்றுலா கட்டுரையை மூனு பேருமே சோந்து எழுது வோமே!
சரி சரி, நானும் வர்றேன். சரிதானே?


எல்லோரும் மகிழ்ச்சியுடன் சுற்றுலா சென்றனர்.
வந்த பிறகு –
என்னது! கட்டுரையை எழுதி யிருப்பது கவிபாமாவா! அப்படி யாரும் நம்ம பள்ளியில் படிக்கிறதாத் தெரியலையே?
எழுதினது யாருன்னு சொல்றதுக்கு முன்னாடி, கட்டுரை நல்லா இருக்கான்னு சொல்லுங்க டீச்சர்?
பிரமாதமா இருக்கு. அதான் கேட்கிறேன்?
அந்தக் கவிபாமா வேறுயாருமில்ல. நாங்க மூனு பேரும்தான்! கவிதாவின் 'கவி'யும், பானுவின் 'பா'வும், மாலாவின் 'மா'வும் சேர்ந்த பெயர்தான் அது!
அப்போ இதுக்கு பரிசு வந்தா என்ன பண்ணுவீங்க?
கட்டுரைப் போட்டி
கவிபாமா
மூனு பேரும் ஒற்றுமையா ஏற்றுக் கொள்வோம்!



பிருந்தாவனக்

கதையரங்கம்...



பாட்டி மரத்தடில வடை சுட்டுக் கொண்டிருந்தாள். அப்போது ஒரு சினிமா விளம்பர வண்டி வந்தது. அதை பார்க்க பாட்டி போனாள். அப்போ மரத்து மேல ஒரு காகம் வந்து உட்கார்ந்தது. தன் கண்களை உருட்டி அங்குமிங்கும் பார்த்தது. காகத்தையும் வடையையும் பார்த்துக் கொண்டு ஒரு குள்ள நரி உட்கார்ந்திருந்தது. நரிக்கு நாக்கில் நீர் ஊறியது. ஆனாலும் நமக்கு எங்கே வடை கிடைக்கப் போகுது. காகம் ஒரு தடவை நாம பாட்டுப் பாடச் சொன்னதை நம்பி வாயைத் திறந்து பாடப் போய் வடை கீழே விழுந்தது. அடுத்த தடவை பாடச் சொன்னப்ப காலில வடையைப் பிடிச்சிட்டு பாடிச்சு. அதனால் காகம் இனி ஏமாறாது என நினைத்தது நரி. இருந்தாலும் முயற்சி பண்ணிப் பார்ப்போம் என மெள்ள மெள்ள மரத்தடிக்கு வந்தது நரி. நாம ஒரு வடைய எடுத்துக்குவோம். கூட ஒரு வடையை எடுத்து நரிக்குக் கொடுப்போம் என இரண்டு வடைகளைக் கொத்திட்டு மரத்தில போய் உட்கார்ந்தது காகம்.

தந்திரக்கார நரி அந்த வழியாகப் போன குரங்கிடம் "குரங்கண்ணே அந்தக் காகம் என்ன சொல்லிச்சு தெரியுமா? உனக்கு வேணும்னா ஒரு வடை தர்றேன். குரங்குக்கு ஒண்ணுமே தர மாட்டேன்னுது" என்றது.

"அப்படியா சொன்னது அந்தக் காகம் இதோ போய் அது வாயில இருக்கிற வடையை எடுத்துக்கிட்டு வர்றேன். நீ இங்கேயே இரு. நான் வந்ததும் சாப்பிடலாம்" என்றது.

குரங்கு காகத்தைப் பிடிக்கிறப்போ வடை இரண்டும் கீழே விழும். இரண்டையும் எடுத்திட்டு ஓடிடணும்னு மனதில் எண்ணிக் கொண்டது நரி.


"குரங்கண்ணே மெதுவா போ, உன்ன பார்த்தா பறந்திடும்" என்றது நரி.

மரத்தின் கீழே எண்ணெய் கொதித்துக் கொண்டிருந்தது. மேலே காகம் வாயில் ஒரு வடையும் காலில் ஒரு வடையுமாக நரிக்காகக் காத்திருந்தது. நரி பக்கத்தில் வந்தது.

நரியை அழைக்க காகம் வாயைத் திறக்க வடை கொதிக்கும் எண்ணெயில் விழுந்து நரி மூஞ்சியெல்லாம் தெறித்தது. வடை கிடைத்த ஆனந்தத்தில் நரி கூத்தாடுது என காகம் எண்ணியது. இதற்குள் பாட்டி அவசரம் அவசரமாக ஓடி வந்தாள். எண்ணெய் சட்டியைத் தூக்கினாள். கை சூடு தாங்காமல் எண்ணெய் நரி மேல கொட்டிடுச்சு.

"காகத்தை ஏமாத்த நினைச்ச எனக்கு நல்ல தண்டனை கிடைச்சிடுச்சு" என்று அழுது கொண்டே ஓடியது நரி.

— சிவபெருமாள்
இரணியல்



அவசரம்..!

காட்டில் நங்கா, பங்கா என்று இரு நரிகள் வசித்து வந்தன. இரண்டும் இணைபிரியா நண்பர்கள்.

நங்கா ஒரு அவசரக் குடுக்கை. எதற்கெடுத்தாலும் அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு காரியத்தையே கெடுத்து விடும். பங்காவோ மிகவும் பொறுமைசாலி.

"காலையிலிருந்து நாமும் தேடிக்கிட்டிருக்கோம். உணவே கிடைக்க மாட்டேங்கிறேதே!" என்றது பங்கா.

"ஆமாம். எனக்கும் பசி வயிற்றைக் கிள்ளுது" என்றது நங்கா.

"ஐயையோ! காட்டை விட்டு ரொம்ப தூரம் வந்துட்டோம். அங்கப் பாரு வயல் வெளி தெரியுது" என்றது பங்கா.

"உனக்கு வயல் மட்டும்தான் தெரியுதா? அங்கே பார்! கொழுத்த ஆடு ஒன்னு புல்லை சாப்பிட்டுக்கிட்டு இருக்கு. வேகமாப் போய் அடிச்சிட வேண்டியதுதான்" என்று பரபரத்தது நங்கா.

"அவசரப்படாதே, மெதுவாப் போ" என்றது பங்கா.

"மெதுவாப் போனா ஆடு ஓடிடும்" என்று கூறிவிட்டு, வேகமாகப் பாய்ந்தது நங்கா.

பாய்ந்த வேகத்தில் அலறல் சத்தம் நங்காவிடமிருந்து வந்தது.

பதறியபடி ஓடிப் போய்ப் பார்த்தது பங்கா. நங்காவின் வாயெல்லாம் ரத்தம். நிஜ ஆடுன்னு நினைச்சு திருஷ்டிக்கு வச்சிருந்த ஆடு மேல பாய்ந்து பல் உடைந்து போயிருக்கு என்பதை அறிந்து கொண்டது. பங்கா நங்காவைத் தூக்கிக் கொண்டு போய் வைத்தியம் செய்தது.

"அவசரப்படாதேன்னு சொன்னா கேட்டியா? நல்லவேளை சின்ன காயத்தோட தப்பிச்ச" என்று தேற்றியது பங்கா.

"இனி எந்தக் காரியத்திற்கும் அவசரப்படமாட்டேன்" என்று அந்த வலியிலும் புன்னகைத்தது நங்கா. நண்பனை ஆதரவாகத் தட்டிக் கொடுத்தது பங்கா.

— ப. ராஜேஸ்கண்ணா
வி. மன்னார்பாளையம் சேலம்.

"பெருங்காயம் ஏத்திக்கிட்டு வந்த லாரி மரத்துல மோதிடுச்சு."


"அப்புறம்?"

"டிரைவருக்கு 'பெருங் காயம்'"

— பா. ஜெயகுமார்



சார் தபால்!



பிருந்தாவனக் கதையரங்கம் மீண்டும் வருவதில் மகிழ்ச்சி! எங்களைப் போன்ற மாணவர்களுக்கு கதை எழுதும் ஆர்வத்தைத் தூண்டுகிறது. கதைகள் ஐந்தும் சிரிக்க வைத்தன. – வலங்கைமான் தேவிகா, குற்றாலம் ஜோசப், சீர்காழி திருமலை, ஸ்ரீரங்கம் மாதவி, திருப்பத்தூர் பாலமுரளி, பாண்டிச்சேரி எஸ். சஷ்டிநாதன். கருப்பம்புலம் சிவகண்மணி.

'ஆயிரம் ரூபாய்க்கு!' எஸ். ஆர்ஜி. சுந்தரத்தின் நாடகம் பரிசுப் பொருட்களை மதிக்காத பலருக்கு, அதன் அருமையை உணர்த்தும் விதமாக அமைந்துள்ளது. – சிங்கம்புணேரி சரவணன், மானாமதுரை ஜவஹருன்னிசா, புதுக்கோட்டை பொன்னி, பாளையங்கோட்டை கல்பனா. காட்டுமன்னார்கோவில் தின. அன்புதேவன்.

'ஒன்பதாம் வீடு' தொடர்கதை ஆரம்பமே அருமையாக இருந்தது. அடுத்த இதழை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். – செங்கல்பட்டு டெய்சி, போரூர் புனிதா, நெய்வேலி சாருலதா, பாண்டிச்சேரி வரதன்.

'பாப்பாவுக்குப் போட்டி!' அட்டைப்பட விளக்கக் கட்டுரை பல அரிய உண்மைகளை வெளிப் படுத்தியது. போட்டியை தவிர்க்க அன்புப் பிணைப்பை ஏற்படுத்தக் கூறிய ஆலோசனை சூப்பர். – கீரப்பாளையம் பூங்கோதை கிருஷ்ணராஜ், திருவாரூர் மூர்த்தி, வல்லம் ராஜா.

மு. நடராசனின் 'இனிமேல்...!' கதையைப் போல் பல வீடுகளில் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது. அம்மாவின் கஷ்டத்தை உணர்ந்து திருந்திய முருகனுக்குப் பாராட்டுகள்! – விண்ணமங்கலம் பார்வதி, இராமநாதபுரம் சந்திரன், சோழியனூர் கண்மணி.

'தீக்குஞ்சுகள் சிறையிருந்த தீவு' என்ற எனது அந்தமான் தீவுகள் பற்றிய கட்டுரையில் தீவுக்குரிய பழங்குடியினர் ஐந்து பிரிவினர் என்றிருப்பதை 'ஷாம்பென்' (Shompen) என்ற பிரிவினரையும் சேர்த்து ஆறு பிரிவினர் என்று மாற்றிக் கொள்ளவும். – இராம்ஜூலஸ், சென்னை – 4.

'அப்பாவாம் அப்பா!' கதையில் அப்பா திட்டினார் என்பதற்காக வீட்டை விட்டுச் செல்ல முடிவெடுக்கும் மெய்யப்பனுக்கு நாய் வீரா மூலம் புத்தி சொல்லி கதையை முடித்திருப்பது புதுமையாக இருந்தது. – திருவையாறு பிரபாவதி, சேலம் கண்ணன், மதுரை பாண்டியன்.

படிப்பில் ஆர்வம் உள்ள ராசா, பள்ளி மாணவர்களின் கிண்டல் பேச்சினால் வாய்ப்பு வந்தும் மறுக்கும் போது வருத்தமாக இருந்தது. நல்லவேளை அவன் மீண்டும் பள்ளிக்குச் சென்று படிக்க முடிவெடுத்த போதுதான் நிம்மதியாக இருந்தது. – பொன்மலை முருகன், அறந்தாங்கி செபஸ்டியன்.

நண்பரை ஏமாற்றிய பொற்கொல்லருக்கு மன்னர் புகட்டிய பாடம் அருமை. – மேலப்பாதி என். ராஜி, மணல்மேடு மேரி, பரமக்குடி கார்த்திகேயன், பெரியகுளம் என். நூர்முகமது.

கங்காரு பற்றிய சுவையான தகவல்களைப் படித்ததும் கங்காருவை நேசிக்க ஆரம்பித்து விட்டோம்! இதுவரை புதிராக இருந்த கேள்விகளுக்கு நல்ல பதில் கிடைத்தது. – மேலப்பாதி. எஸ். நாகராஜன், சின்னாளப்பட்டி வள்ளி, கோவை கே. பாரதி, மேட்டுப்பாளையம் சுந்தர்.



இதுவரை:

பள்ளியில் நடைபெறும் கோடை விழாவுக்கு சித்ரா மட்டும் டிக்கெட் வாங்கவில்லை. அவள் பெயரை, வகுப்புத் தலைவி பானு பலமுறை படித்து விட்டாள். பள்ளி முடிவதற்குள் வந்து விடுவதாகக் கூறியிருந்த அப்பா இன்னும் வரவில்லை. பள்ளி விடும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அப்பாவை இன்னும் காணோம். சித்ரா தவித்தாள். விழா ஏற்பாடுகளைப் பார்வையிட வகுப்பாசிரியை அம்புஜத்துடன் வரும் தலைமை ஆசிரியை கோமதி மேடம், சித்ராவைப் பார்த்து, பத்து நிமிஷம் பொறுத்துத் தன்னை வந்து பார்க்கும்படி கூறிவிட்டுப் போகிறார். கோடை விழா டிக்கெட் வாங்காததைப் பற்றித்தான் 'பெரிய மேடம்' கேட்கப் போகிறார் என்று சித்ரா தவிக்கிறாள். இனி, மேலே படியுங்கள்.

ஒன்பதாம் வீடு!

2. அப்பாவின் இலட்சியம்!

நேரம் மெதுவாகப் போகக் கூடாதா என்று சித்ரா தவித்தாள்.

“என்னடி, உன்னைப் பத்து நிமிஷம் பொறுத்துத் தன்னை வந்து பார்க்கும்படி பெரிய மேடம் சொன்னாங்களே? எட்டு நிமிஷம் ஆயிட்டுதே? போகலே..?” என்று குறும்புச் சிரிப்புடன் கேட்டாள் நர்மதா.

“எங்க இத்தனை பேரை விட்டுட்டு,

வெ. நல்லதம்பி

உன்னை மட்டும் வரச் சொல்லிக் கூப்பிட்டிருக்காங்களே பெரிய மேடம்! சீக்கிரம் கிளம்பு" என்று ஏளனமாகக் கண் சிமிட்டிக் கூறினாள் பானு.

பானு பணக்கார வீட்டுப் பெண். அவள் அப்பா சாலைபோடும் காண்டிராக்டர். காரில்தான் போவார், வருவார். முரட்டுக் குரலில் பேசுவார். தொழிலாளர்களை அதட்டுவார். அதைப் பார்த்துப் பழகியதாலோ என்னவோ பானுவும் மற்றவர்களைப் பார்த்து அதட்டும் குரலில் பேசுவாள். ஏளனமாகப் பார்ப்பாள்.

சித்ரா, அப்பா வருகிறாரா என்று பார்த்துக் கொண்டே தலைமை ஆசிரியையின் அறையை நோக்கி நடந்தாள். பலிக்குப் போகும் ஆட்டைப் போல் அறைக் கதவைத் திறந்துக் கொண்டு உள்ளே சென்றாள். தலைமை ஆசிரியை கோமதி தன் இருக்கையில் இருந்தார். எதிரே இருந்த இருக்கையில் வகுப்பாசிரியை அம்புஜம். இருவரும் ஏதோ விவாதித்துக் கொண்டிருந்தார்கள். விழாவைப் பற்றித்தான் இருக்கும்.

"வணக்கம் மேடம்"- உயிரே இல்லாமல் கூறிக் கைகூப்பினாள் சித்ரா.

"வா சித்ரா" என்று புன்னகைத்த பெரிய மேடம், அம்புஜம் டீச்சரைப் பார்த்தார்.


"என்ன அம்புஜம், நீயே சொல்லி விடுகிறாயா, இல்லே நானே விளக்கட்டுமா?"

விழாவுக்கான டிக்கெட்டை வாங்காததால் தன்னை வகுப்பை விட்டு வெளியேற்றப் போகிறார்கள். இல்லை, பெரிய தண்டனை எதையோ தரப் போகிறார்கள். அதை எப்படிக் கூறுவது என்று தான் தவிக்கிறார்கள் என்று எண்ணிய சித்ரா விசும்பினாள்.

"மேடம், எங்கப்பா நேராகப் பள்ளிக்கே வருவதாகக் கூறியிருந்தார். என்ன காரணமோ தெரியலே. இன்னும் வரலே. கண்டிப்பா வந்திடுவார்."

பெரிய மேடமும், அம்புஜம் டீச்சரும் திகைப்புடன் ஒருவரை ஒருவர் நோக்கிக் கொண்டனர்.

"ஏ அசடு! உன்னை நான் வரச் சொன்னது, டிக்கெட்டை இன்னும் வாங்காததைப் பற்றிக் கேட்க இல்லே. முதல்ல



அதைப் புரிஞ்சுக்க"- தலைமை ஆசிரியை தான் கூறினார்.

"பள்ளி வாசலில், இரும்பு கேட்டுக்கு அருகே, விழாவுக்கு வருபவர்களை வரவேற்க ஒரு போர்டு எழுதி வைக்கணும். 'நல்வரவு' என்று அழகாக எழுதி, இரண்டு மாணவிகள் கைகூப்பி வரவேற்பது போல் இருக்கணும். உனக்கு நல்ல ஓவியத் திறமை இருக்குன்னு உங்க அம்புஜம் டீச்சர் சொன்னாங்க. அதான் அந்தப் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்க வரச் சொன்னேன்" என்று சிரித்தார் பெரிய மேடம்.

சித்ராவின் முகத்தில் கவலை மறைந்து, பெருமையும் மகிழ்ச்சியும் குடி கொண்டது.

"கரும்பலகை, வண்ண சாக்பீஸ், டஸ்டர் எல்லாம் நூல் நிலையத்துலே இருக்கு. வகுப்புக்குப் போய்ப் புத்தகப் பையை எடுத்துக்கிட்டு நூல் நிலையத்துக்குப் போய் உன் வேலையை ஆரம்பி" என்று கூறிய அம்புஜம் டீச்சர், பெரிய



மேடத்தின் பக்கம் திரும்பினார்.

"மேடம், சித்ரா லேட்டா வருவாள். கவலைப்பட வேண்டாம். சாப்பாடு கூட இங்கேயேதான். யாராவது திரும்பக் கொண்டு வந்து விடுவோம்ன்னு அவள் வீட்டுக்குத் தகவல் அனுப்பணுமே? தகவல் போகலேன்னா வீட்டில் கவலைப் படுவாங்களே?"

"ஆமாம் ஆமாம். நல்ல வேளை நினைவு படுத்தினே அம்புஜம். யார் மூலமாவது தகவல் அனுப்பப்பார்" என்றார் பெரிய மேடம்.

"சித்ரா, உன் வீட்டுக்கு அருகில், உன் வகுப்பிலிருந்து யார் வருகிறார்கள்?"- பெரிய மேடம்.

"அந்த நர்மதாவும் பானுவும் இவன் வீட்டுக்கு அடுத்த தெருதான். அவர்களிடமே சொல்லச் சொல்லித் தகவல் அனுப்பலாம்" என்று சித்ராவை முந்திக் கொண்டு பதில் கூறிய அம்புஜம் பியூனை அழைத்தார். பானுவையும் நர்மதாவையும் உடனே வரச் சொல்லித் தகவல் அனுப்பினார்.

நிமிடங்கள் ஓடின. பாவம் சித்ரா! பெரிய மேடத்தின் அறையில் கண்ணைக் கசக்கி கொண்டு பரிதாபமாக நின்று கொண்டிருப்பாள். அந்தக் காட்சியை அப்படியே நடித்துக்காட்டி, இந்த ஆண்டு முழுவதும் கிண்டல் பண்ணலாம் என்ற எண்ணத்தில், தாங்க முடியாத மகிழ்ச்சியுடன் பானுவும் நர்மதாவும் தலைமை ஆசிரியையின் அறைக்குள் வந்தனர்.

இருவரும் உள்ளே நுழைந்து வணக்கம் கூறினர்.

"உங்க இரண்டு பேருக்கும் ஒரு வேலை. சித்ராவின் வீடு தெரியுமல்லவா?"

"நன்றாகத் தெரியுமே? அவ அப்பாவையோ அம்மாவையோ அழைத்து வரணுமா?"

"அதெல்லாம் வேண்டாம். சித்ரா, விழா வேலைகளை கவனித்துக் கொண்டிருக்கிறாள். அதனால் வீடு திரும்ப நேரமாகும். சாப்பாடுகூட இங்கேயேதான். திரும்ப யாராவது கொண்டு வந்து விடுவோம். அதனால் கவலைப்பட வேண்டாம்னு அவங்க அம்மாவிடம் சொல்லி

விட வேண்டும்."

பானுவுக்கும் நர்மதாவுக்கும் ஒரே ஏமாற்றம்! அவர்கள் முகம்போன போக்கைப் பார்த்து சித்ரா மனதுக்குள் ரசித்துக் கொண்டிருந்தாள்.

"சொல்விடறோம். விழாவுக்கு உதவி பண்ண நாங்களும் வரலாமா மிஸ்?"

''எங்களுக்கும் ஏதாவது வேலை கொடுங்களேன்?"

சித்ரா மட்டும் பெருமைக்கு உரியவளாகிவிடக் கூடாது என்பதில் இருவருக்கும் இருந்த துடிப்பை அறிந்து கொண்டுவிட்ட பெரிய மேடமும் அம்புஜம் டீச்சரும் 'கடகட'வெனச் சிரித்தனர்.

"சித்ரா, உன் தோழிங்க கேட்டதைக் கேட்டியா? உனக்கு இவங்க உதவி தேவைப்படுமா?"- பெரிய மேடம்தான் கேட்டார்.

அவமானப்பட்டு, தான் தலை கவிழ்ந்து நிற்பதைக் கண்டு களிக்கத் துடித்த பானுவையும் நர்மதாவையும் சித்ரா நிமிர்ந்து பார்த்தாள். 'நாங்களும் வருகிறோம். எங்களையும் சேர்த்துக் கொள்' என்று கெஞ்சியது அவர்கள் பார்வை.

"மிஸ், இவங்களும் வரட்டும். என்னுடைய வேலைக்கு உதவியா இருக்கும்'' என்றாள் சித்ரா.

இருவர் முகத்திலும் அளவிட முடியாத மகிழ்ச்சி.

"அப்போ நாங்க போய் சித்ராவின் வீட்டில் தகவல் சொல்விட்டு, எங்க வீட்டிலும் சொல்விட்டு உடனே திரும்பி வந்திடறோம்."

இருவரும் சிட்டாகப் பறந்தனர்.

தன் திறமையைக் காட்டக் கிடைத்திருக்கும் பொன்னான வாய்ப்பு என்ற பெருமகிழ்ச்சியோடு நூல் நிலையத்திற்குக் கிளம்ப இருந்தாள் சித்ரா.

அத்தனை மகிழ்ச்சி, பெருமைக்கு இடையேயும் மனதில் முள்ளாக ஓர் உறுத்தல். அப்பாவை ஏன் இன்னும் காணோம்? என்னவாயிற்று அவருக்கு?


டெலிபோன் மணி கிணுகிணுத்தது. அம்புஜம் மிஸ்தான் எடுத்துப் பேசினார். "சித்ரா, உங்கப்பாகிட்டேயிருந்துதான்'' என்று கூறிவிட்டுத் தொடர்ந்து பேசி முடித்தார்.

"கிளம்பும் நேரத்தில், நண்பர் ஒருவருக்கு திடீரென்று உடம்பு குணமில்லாமல் போச்சாம். அவரைக் கூட்டிக் கொண்டு வந்து மருத்துவ மனையில் சேர்த்திருக்கிறாராம். அவர் வீட்டிலிருந்து யாராவது வந்ததும் டிக்கெட்டை வாங்கிக்க உடனே கிளம்பி வரேன் என்று சொன்னார். நண்பரை கவனிச்சுட்டு நிதானமா வாங்கன்னு சொன்னேன்'' என்று அம்புஜம் டீச்சர் விளக்கிய பிறகுதான் சித்ராவின் மனசில் இருந்த உறுத்தல் மறைந்தது. முழு மனதுடன் தனக்குத் தரப்பட்ட பொறுப்பைக் கவனிக்கக் கிளம்பினாள்.

இரவு மணி பத்து பத்து. தன்னுடைய ஓவியத் திறமையை எல்லாம் வெளிக் கொண்டு வந்து முடித்திருந்த அந்த வரவேற்புப் பலகையை சித்ரா பெஞ்சில் சாய்த்து வைத்தாள்.

அறை வாயிலில் நிழலாடியது. பெரிய மேடமும், அம்புஜம் டீச்சரும் தான் வந்து நின்றார்கள்.


''வணக்கம். நல்வரவு'' இரண்டும் அழகு கொஞ்சும் எழுத்துகளால் உருவாகி



''வளர்ந்து பெரியவனானதும் என்ன பண்ணுவே?''

''பெரிய ஆளாகி பாதுகாப்புக்கு 'மனித'ப்படை வெச்சுப்பேன்...''

– சி. சங்கர்



கண்களைக் கவர வைத்தன. அதற்குப் பக்கத்தில் ஒரு சிறுமி புன்னகை தவழ இரு கரம் கூப்பினாள். மற்றொரு சிறுமி தட்டில் மங்கலப் பொருள்களை ஏந்தி நின்றாள்! மேலே, தலைப்பில் வண்ணத் தோரணங்கள்!

"எத்தனை அழகாக எழுதியிருக்கிறாய் சித்ரா! இந்த அளவுக்கு இருக்கும் என்பதை நான் எதிர்பார்க்கவே இல்லை!" என்று அறை வாசலில் இருந்தபடியே தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பார்த்து ரசித்தார் பெரிய மேடம். அம்புஜம் டீச்சர் முகத்திலும் தனியான பெருமை.

"என் நம்பிக்கை வீண் போகவில்லை சித்ரா!"

புகழுரையில் சித்ரா கூச்சப்பட்டுத் தலை குனிந்தாள்.

"எல்லாம் நீங்கள் தந்து வரும் ஆர்வம் தான் காரணம்."

செருப்புச் சத்தமும் ''வணக்கம் மேடம்'' என்ற குரலும் கேட்டது. சித்ராவின் அப்பா பசுபதி உள்ளே வந்தார்.

"மன்னிக்கனும். நேரமாகிவிட்டது."

"இதுவும் ஒரு நல்லதுக்குத்தான். நீங்கள் நேரம் காலம் பார்க்காது கடினமாக உழைப்பவர். உங்கள் பெண்ணிடம் புதைந்து கிடக்கும் அற்புத ஓவிய ஆற்றலைக் கண்டு மகிழும் வாய்ப்பு உங்களுக்கு எங்கே கிடைத்திருக்கப் போகிறது? எதிரே உள்ள வரவேற்புப் பலகையைப் பாருங்கள். வரவேற்கும் சிறுமிகளைப் பார்க்கும் போதே, உள்ளே சென்று விழாவைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பு ஏற்படவில்லை? அழகு கொஞ்சுகிறது. வருங்காலத்தில் உங்கள் பெண், ஒரு ரவிவர்மாவாக உயர்ந்து கட்டாயம் இந்தப் பள்ளிக்குப் பெருமை சேர்ப்பாள்'' என்றார் பெரிய மேடம்.

சித்ராவின் தந்தை பசுபதியின் முகத்தில் நிறைந்த பெருமிதம் உடனே ஓடி மறைந்து முகம் கடினமானது!


"மன்னியுங்கள் மேடம். வருங்கால ரவிவர்மா சித்ராவுக்குள் ஒளிந்திருக்கலாம். ஆனால் அந்த ரவிவர்மாவை வெளிக் கொண்டு வர நான் ஒருக்காலும் ஊக்கம் அளிக்க மாட்டேன். நானும் என் மனைவியும் சித்ரா நன்கு படித்து, ரேங்க் வாங்கி, நுழைவுத் தேர்வு எழுதி, ஒரு டாக்டராகவோ, ஒரு பொறியாளராகவோதான் ஆக வேண்டும் என்று கனவு காண்கிறோம். என்னைப் போல் கைக்கும் வாய்க்கும் நிறைவு காணாத சொற்ப வருமானம் வாங்காது, சித்ராவாவது கை நிறையச் சம்பாதித்து பணத்தில் கொழித்து, செழிப்பாக வளர வேண்டும் என்பதுதான் எங்கள் இலட்சியம். தயவு செய்து அவளுக்குள் இருக்கும் ஓவிய ஆர்வத்தை வளர்த்து எங்கள் இலட்சியக் கனவைப் பாழாக்காதீர்கள்."

பசுபதி கண் கலங்க இருகரம் கூப்பி, பெரிய மேடத்தையும் அம்புஜம் டீச்சரையும் கெஞ்சினார். சித்ராவின் கண்களில் கண்ணீர் அருவியாகக் கொட்டியது. எல்லோரும் திகைத்து நின்றனர்!

(வளரும்)

• BRAIN TEASERS • LIFE ON MARS

TRUE FRIENDS



AND MANY PUZZLES

October '97

GOKULAM


The monthly magazine for children


பிருந்தாவனக் கவியரங்கம்

கொய்யா

எங்கள் வீட்டுக் கொய்யா
எவரும் விரும்பும் கொய்யா
சர்க்கரை போல இனிப்பு
சத்து நிறைந்த கொய்யா
பழுத்து வளைந்த கிளையிலே
பழுத்துத் தொங்கும் கொய்யா
அணில் பறவை மனிதரை
அருகில் அழைக்கும் கொய்யா?
ஒன்று தினமும் தின்றிடில்
ஓட்டி விரட்டும் நோய்களை!

— எஸ். கல்யாணி, தாம்பரம்.





பூக்கள்


வண்ண வண்ண பூக்கள்
வகை வகையாம் பூக்கள்
சின்னச் சின்ன பூக்கள்
சிதறிக் கிடக்கும் பூக்கள்
வாசம் வீசும் பூக்கள்
வண்டு அமரும் பூக்கள்
தெய்வம் விரும்பும் பூக்கள்
தோட்டம் மணக்கும் பூக்கள்

— பொன். குமார், சேலம் - 6.


குற்றாலம்

பள்ளி மாணவர் பட்டாளம்
பயணம் போனது குற்றாலம்
கடகட கடகட வண்டிதான்
காலே பதியா மாடுதான்
மரத்தை மலையைக் கடந்தோமே
மலைத்து அருவியைக் கண்டோமே!
குற்றால அருவி கண்டதுமே
குதித்துப் போட்டோம் கும்மாளம்!

— நா. ராஜசேகர், சென்னை - 83



தாமரை




குளத்தில் முளைத்து வளர்ந்திடும்
குன்றா அழகுத் தாமரை
கதிரவன் உதித்தால் மலர்ந்திடும்
கலைமகள் அமரும் தாமரை
தண்ணீரில் மட்டும் வாழ்ந்திடும்
தேசிய மலராம் தாமரை

— ர. சோமநாதன், விக்கிரவாண்டி.

கணிதம் கற்றான்

குட்டித் தம்பி சேகர்
கணிதம் தினமும் கற்றான்
ஏறு வரிசை இறங்கு வரிசை
எழுதப் படிக்க அறிந்தான்
முன்னி தொடரி இவைகூட
முழுமை யாகச் சொன்னான்!
கூட்டல் கழித்தல் போட்டான்
கவனம் கொண்டே முயன்றான்
மணியும் பார்க்க அறிந்தான்
மகிழ்ச்சி மனதில் கொண்டான்!

— சு. கண்ணகி, மிட்டூர்.




வேப்ப மரம்



வீட்டு வாசல் வேப்பமரம்
வேண்டும் குளுமை தந்திடும்
பல்லை விளக்க உதவிடும்
பறவை வாழ இடந்தரும்
நோயை விரட்டிக் காத்திடும்
நீண்டு பரந்து நிலைத்திடும்
வீட்டிற் கொன்று வளர்த்திட்டால்
வந்து மழையும் பெய்திடும்!

— கே. தீபா, அயனாவரம்.



சைக்கிள்

இரண்டு சக்கர வண்டி
இருவர் செல்லும் வண்டி
எரிபொருள் கேட்கா வண்டி
எங்கள் சிறிய வண்டி

நீண்ட நெடிய வழியில்
நேராய் செல்லும் சைக்கிள்

ஏழை எளியவர் செல்ல
ஏற்ற வண்டி இதுவே.

அக்கா தம்பி ஓட்ட
ஆசை வண்டி சைக்கிள்.

— த. பழனி, வரிக்கல் கிராமம்.

பட்டு ரோஜா


சிறிய பெரிய ரோஜா
சிவப்பு நிற ரோஜா


நேரு அணிந்த ரோஜா
நேர்த்தி மிக்க ரோஜா

பட்டு இதழ் ரோஜா
பார்க்க மயக்கும் ரோஜா

மனதைக் கவரும் ரோஜா
மகிமை மிக்க ரோஜா

— ஸ்ரீ. அனுராதா, கூடுவாஞ்சேரி.





காலண்டர்


கிழமை மாதம் தேதிகளை
கேட்டதும் காட்டிடும் காலண்டர்

காலம் நேரம் குறிப்புகளை
கணித்துக் கூறிடும் காலண்டர்


விடுமுறை பண்டிகை விவரங்களை
விரிவாய் விளக்கிடும் காலண்டர்


தினமும் முகத்தைக் கிழித்தாலும்
திட்டா பண்புக் காலண்டர்.

— டி. கணேஷ், வரிக்கல் கிராமம்.














யாருக்கு என்ன?

—போட்டி





இங்குள்ள பதினாறு படங்களிலும் ஓவியர் ஏதோ தவறு செய்து விட்டார். தாத்தா, பட்டாளச் சிப்பாய், மீன் பிடிப்பவர், ஆடு மேய்ப்பவர், பஸ் ஓட்டுநர், படகோட்டி, டாக்டர், குரங்காட்டி, ஓவியர், பாட்டி, குட்டிப் பையன், குடு குடுப்பைக்காரர், புல்லாங்குழல் கலைஞர், விறகு வெட்டி, அம்மா, தையற் கலைஞர் ஆகியோரின் படங்களைப் பாருங்கள். இவர்கள் கைகளில் இருக்க வேண்டியவைகளை ஓவியர் கவனக் குறைவாக மாற்றிப் போட்டு விட்டார்.

உதாரணத்திற்கு தையல்கலைஞர் கைகளில் குரங்காட்டும் குச்சியும்,



குரங்காட்டியிடம் துணி அளவெடுக்கும் நாடாவும் இடம் மாறியுள்ளன. இதேபோல் மற்றவற்றில் யார் கையில் என்ன இருக்க வேண்டும் என்பதைக் கண்டுபிடித்து எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் தெளிவான முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி : 31.10.97. அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதினால், பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 97.





வீட்டில் வளர்க்கக் கூடிய பறவை என்றாலே நம் நினைவில் வருபவை கோழியும் புறாவும் தானே!

புறாக்கள் அழகான; மென்மையான உடல் அமைப்புக் கொண்டவை. கூட்டமாகப் பறந்து வந்து உண்ணும் பழக்கமுடையவை.

புறா நுட்பமான அறிவுடையது. புறாவை எந்த இடத்தில் கொண்டு போய் விட்டாலும், சில குறிப்புகளை வைத்துக் கொண்டு மீண்டும் பழைய இடத்திற்கே திரும்பி வந்து விடும். அண்மையில் சென்னையிலிருந்து புது தில்லிக்குக் கொண்டு சென்று விடப்பட்ட புறா சென்னைக்குத் தானாகவே திரும்பி வந்ததைப் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள்! பழங்காலத்தில் தபால்களை அனுப்பவும் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளவும் புறாக்கள் பயன்படுத்தப் பட்டன. புறாக்கள் வேகமாகப் பறக்கக் கூடியவை. பயிற்சி கொடுத்து புறாக்களிடையே பந்தயங்கள் கூட நடத்தப்படுகின்றன.

பல வகைகளிலும், பல வண்ணங்களிலும் புறாக்கள் காணப் படுகின்றன. துருவப் பிரதேசங்களைத் தவிர உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் புறாக்கள் வாழ்கின்றன.

எல்லா நாட்டுப் புராணங்களிலும் புறா இடம் பெற்றுள்ளது. பைபிளில் நோவா கதையிலும், இந்து புராணங்களில் சிபி - புறா; பஞ்ச தந்திரக் கதைகளில் ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாகவும் புறாக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. புறா புகழ் பாடும் பல பாடல்கள் தமிழ் இலக்கியத்தில் உண்டு. பெரிய மசூதிகள், தேவாலயங்கள், கோயில்கள், அரண்மனைகளில்



பறக்க விடப் போறேன் பரிசு வாங்கும் பாரேன்!




விடுதலைப் போராட்ட வீரர்களிடம் என்ன ஒற்றுமை? – போட்டி முடிவு

இந்தப் போட்டியில் கலந்து கொண்ட ஏராளமான வாசகர்களில் பெரும்பாலானவர்கள் சரியான விடையையே தந்திருக்கிறார்கள். எனவே பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கக் குலுக்கல் முறையே கை கொடுத்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. மேரி அருள் பிரியா, மூங்கில் துறைப் பட்டு.
2. ஆ. விக்னேஷ், கோவில்பட்டி.
3. எஸ். நிவேதிதா, தூத்துக்குடி
4. ஐ. முகமது ஹாரூன் பாஷா, வத்தலக்குண்டு
5. இ. எழிலரசி, புதுச்சேரி.
6. எஸ். எத்திராஜன், திருச்சி.
7. எஸ். பூவிழி, அரவக்குறிச்சி.
8. என். வெங்கடேஸ்வரன், தஞ்சாவூர்.
9. ம. ஜேக்கம், தூத்துக்குடி





அதிக அளவில் புறாக்கள் காணப்படுகின்றன.

மற்ற பறவைகளுக்கு இல்லாத சிறப்பு புறாக்களுக்கு உண்டு. பொதுவாகப் பறவைகள் நீரை அலகால் உறிஞ்சி மேல் நோக்கிக் குடிக்கும். ஆனால் புறாக்கள் நீரை அப்படியே ஒரே மூச்சில் நாம் குளிர்பானத்தை ஸ்ட்ரா போட்டுக் குடிப்பது போலவே, உறிஞ்சிக் குடித்து விடுகின்றன.

புறாக்கள் விதைகள், பருப்பு, கனிகளை தன் தீனிப் பையில் சேமித்து வைத்துக் கொள்கின்றன. உணவு தேவைப்படும் போது அதில் ஒரு பாகத்தை இரைப்பைக்குள் கொண்டு போய்ச் செரிமானம் செய்து கொள்ளும். புறாவின் இறைச்சியும் கழிவும் மருத்துவக் குணமுடையவை.

இன்னொரு முக்கியமான விஷயம்! உலகமெங்கும் சமாதானச் சின்னமாக புறா மதிக்கப்படுகிறது. புறா தன் வாயில் ஆலிவ் இலையுடன் பறப்பது போல் சமாதானச் சின்னம் உருவாக்கப் பட்டுள்ளது.

புறாவை வளர்ப்பதற்கு நல்ல கவனிப்பும், பொறுமையும் அவசியம் தேவை. இல்லையென்றால் நோய் எளிதில் தாக்கிவிடும். புறாக்கள் தனிக் கூண்டுகளில் வளர்க்கப்படுகின்றன.


குழந்தைகள் விரும்பும் பறவைகளில் புறாவும் ஒன்று. புறாவை வளர்ப்பதும், அதைக் கூர்ந்து கவனிப்பதும் மகிழ்ச்சியளிக்கக் கூடியது. நாம் புறாவுடன் பழகிவிட்டால் நம் கையிலிருந்தே இரையைக் கொத்திச் சாப்பிடும்.

புறா மிகவும் அன்பாகவும் அமைதியாகவும் பழகக் கூடியது. புறாக்கள் கூட்டமாக படபடவென்று சிறகடித்து ஒன்றாகப் பறக்கும் காட்சி தனி மகிழ்ச்சி தரக்கூடியது. பார்த்தவர்களுக்கே இதன் அருமை புரியும்.

அட்டையில் புறாவை கையில் வைத்துக் கொண்டிருப்பது மாஸ்டர் நெய்ல் பிரெளனி. அருகில் சிறுமி பப்பி.

அட்டை வண்ணப்படம் : ஸ்ரீஹரி





10. எம். அழகு பாண்டியன், மணல்மேடு
11. பி. சந்துரு, தாராபுரம்.
12. ஆர். ஜெயந்தவேல், கடையநல்லூர்
13. எஸ். இரத்தினகுமார், நாகர்கோவில்
14. வி.பி. ராகவேந்திரன், திருச்சி
15. ஜீ. குமரன், காரைக்கால்.

சரியான விடை

பாலகங்காதர திலகர்

ஜவாஹர்லால் நேரு

காந்தியடிகள்

வ.வெ.சு. ஐயர்

வ.உ.சிதம்பரனார்

வல்லபாய் பட்டேல்

ராஜாஜி

பாபு ராஜேந்திர பிரசாத்

மோதிலால் நேரு

ஆகியோர் அனைவரும் சட்டம் பயின்றவர்கள் என்பது தான் இவர்களிடம் உள்ள ஒற்றுமை.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

சிரிப்...

"பள்ளிக்கூடம் விட்டு இவ்வளவு லேட்டா வர்றியே! மணியைப் பார்த்தாயா?"

"வரும் வழியில மணியைப் பார்த்துப் பேசிட்டு வந்ததுனாலதான் லேட்டும்மா"


— வலங்கை என். சரவணன்.
வலங்கைமான்.



"ஏன் சோகமா உட்கார்ந்திருக்க?"

"நிறைய கால்கள் இருக்குறதுனால செருப்பு வாங்கிக் கட்டுப் படியாகலே!"

— எம். மகேஷ், தாரமங்கலம்




"நான் வாங்கியிருக்கற மதிப்பெண் பேர்ல ஒரு நாடே இருக்கு தெரியுமா?"

"தெரியலையே!"

"டென்'மார்க்!"

— எஸ். மாலதி





"எங்க வகுப்பிலேயே நான்தான் உயரம்!"

"அப்படியா?"


"நான் மட்டும்தானே பெஞ்ச் மேல நிப்பேன்?"

— காழி. ஆர். சீதாராமன்

"எனக்கு ஐஸ்கிரீமும் இனிப்புப் பண்டங்களும் நிறையப் பிடிக்கும்"

"அப்படின்னா ஜலதோஷம்கூட நிறையப் பிடிக்கும்னு சொல்லு"

— சி. விஜயகுமார், தேவனாங்குறிச்சி



வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறும் நான்காவது கதை



ஸ்பெஷல் கிளாஸ் முடிந்து ரவியும் மீனாவும் திரும்பிக் கொண்டிருந்தார்கள். இலேசாக விட்டுவிட்டு ஆரம்பித்த மழைத்தூறல், கனமாகி பலத்தது. இருவரும் பிள்ளையார் கோவில் பிரகாரத்தில் ஒதுங்கிக் கொண்டார்கள். பாவம், அம்மா என்ன செய்கிறாளோ என்ற கவலை இருவரையும் பற்றிக்கொண்டது.

"காலையில் கிளம்பும்போதே அம்மாவிடம் சொல்லி விட்டுத்தான் வந்திருக்கிறோம். அதனால் கவலைப்பட மாட்டாள்" என்று கூறிய ரவி, "போய், சமைக்கணுமா மீனா?" என்று கேட்டான்.

"அவசியம் இல்லேண்ணா. இரவுக்கும் சேர்த்துத்தான் சமைச்சிருக்கேன். அம்மாவுக்குக் கூட குழம்பு சாதமும், தயிர் சாதமும் பிசைந்து தொட்டுக் கொள்ள காலிஃப்ளவர் கூட்டும் கிண்ணத்தில் போட்டு வைத்திருக்கிறேன். எட்டு மணிக்கு மேல் ஆயிட்டா, எடுத்துச் சாப்பிடும்படி சொல்லியிருக்கேன்" என்றாள் மீனா.

மழை இன்னும் பலத்தது. சாரல் கொட்டியது. இருவரும் கோவில் பிரகாரத்திற்குள் இன்னும் உள்ளே தள்ளி நின்று கொண்டார்கள்.

"மீனா உனக்குத் தெரியுமா? கண் பெற வேண்டியவர்கள் பட்டியலில் அடுத்தது அம்மாதான். டாக்டர் மதனகோபாலைப் போன வாரம் பார்த்தப்போ அவரே சொன்னார்."

தன் கண்களை தானமளிக்க எழுதிக் கொடுத்த அம்மாவுக்கே, இன்னொருவர் கண் தானமளித்து பார்வை மீண்டு வர உதவும் நிலை ஏற்பட்டுள்ளதை நினைத்த போதே மீனாவுக்கு அதிசயமாக இருந்தது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது அந்த பயங்கர நிகழ்ச்சி. மலையனூர் மேல் கேம்ப்பில் ஒரு பள்ளி விழாவுக்குத் தலைமைவகித்துப் பரிசு வழங்க அப்பாவை அழைத்திருந்தார்கள். அப்பா அரசாங்க அலுவலர் என்பதோடு திறமையான பேச்சாளியும் கூட. பள்ளி வேலை நாள் என்பதால் ரவியும் மீனாவும் போகவில்லை. அம்மா மட்டும் அப்பாவுடன் கிளம்பினாள். பஸ்ஸில்தான் போனார்கள்.

மலையனூருக்குப் போய்ச் சேருமுன்பே, ஐம்பது பயணிகளை ஏற்றிச் சென்ற அந்த பஸ், பிரேக் பிடிக்காமல், கட்டுப்பாடு இழந்து ஓடி 800 அடி உயரத்திலிருந்து கிடுகிடு பள்ளத்தில் விழுந்து விட்டது! உயிர் தப்பிப் பிழைத்தவர்கள் அம்மாவும் பஸ் டிரைவரும் மட்டுமே! டிரைவருக்குக் கூட வலது கால் போய்விட்டது! அம்மாவுக்கு இரண்டு கண்களும் போய் விட்டன!

அம்மாவுக்கு பயங்கரமான மன வலிமை. "நானும் போயிருந்தால் ரவியும் மீனாவும் அனாதையாகியிருப்பார்களே?" என்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாள். சமைக்கவும் வீட்டு வேலைகளைச் செய்யவும் ரவியையும் மீனாவையும் பழக்கினாள். தன்னம்பிக்கை ஊட்டி வளர்த்தாள். தானும் மன முடைந்து விடாது குழந்தைகளுக்கு உதவியாக இருக்கப் பழகிக் கொண்டாள். எப்பவோ பாஸ் பண்ணி பழக்கம் விட்டுப் போயிருந்த தட்டச்சுப் பழக்கத்தைப் புதுப்பித்துக் கொண்டாள்!

அம்மாவுக்கு நல்ல கற்பனை வளம் இருந்தது. அதனால் அழகாகக் கதைகள் எழுதினாள். எழுதினாள் என்பது கூடத் தவறு. தட்டச்சு செய்தாள் என்பதே சரியாக இருக்கும். அம்மாவின் கதைகள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்து பெருமையையும், பணத்தையும் தந்தன. வீட்டு வேலைகளில் கூட, தன்னால் இயன்ற வரை மீனாவுக்கு உதவி செய்வாள். கஷ்டமான கணக்குகளைக் காதால் கேட்டு, வாயால் வழி கூறி விளங்க வைப்பாள். அம்மாவைப் பற்றி ரவிக்கும் மீனாவுக்கும் அளவில்லாத பெருமை.

அம்மாவுக்கு மிகவும் இளகிய மனம். "பசிக்கிறது" என்று யார் வந்து கேட்டாலும் தவறாமல் உதவுவாள். சபாபதி பண்டாரம் என்று ஒருவர். கோவில் நந்தவனத்தில் தோட்ட வேலை. ஒரு விபத்தில் சிக்கிக் கால்களை இழந்தவர். கால்களை இழந்தாலும் அவர் மனத் துணிவை இழக்கவில்லை. அம்மா அவருக்கு சக்கர நாற்காலி வாங்கித் தந்தாள். பூ வியாபாரம் செய்யப் பணமும் கொடுத்து உதவினாள். பெரிய கடை வீதியில், கோவிலுக்கு எதிரே அவர் கடை போட்டு அமர்க்களமாகப் பூ வியாபாரம் செய்து வருகிறார். அம்மாவிடம் அவருக்கு அளவிட முடியாத அன்பு. தினமும் காலையில் சக்கர நாற்காலியில் வீட்டுக்கு வருவார். அம்மா ஒரு முழம் பூ வாங்கிக் கொண்டு பணம் தருவாள். இப்படி அம்மாவால் பயனடைந்தவர்கள் பலர் இருந்தனர். "இத்தனை பேரின் நல்வாழ்த்துக்களால்தான் உங்களை அனாதையாக்கி விடாமல்



இறைவன் என்னைக் காப்பாற்றினான்'' என்று அம்மா அடிக்கடி கூறுவாள்.

மழை ஒருவழியாக நின்றது. ரவியும் மீனாவும் வீட்டுக்கு விரைந்தனர். வீடு பூட்டியிருந்தது! அம்மா எங்கே போயிருப்பாள்!


இருவரையும் அதிக நேரம் கலங்க வைக்காமல் எதிர் வீட்டுக்காரர் வந்தார்.

"ரவி, மீனா, உங்கம்மா ஆஸ்பத்திரிக்குப் போயிருக்காங்க. அந்த சபாபதிப் பண்டாரம் ஒரு கார் விபத்தில் சிக்கி ஆபத்தான நிலையில் இருப்பதாகவும், அவருக்கு இரத்ததானம் பண்ண யாராவது உதவ வேணும்னும் மருத்துவமனையில் இருந்து தகவல் வந்தது. பண்டாரம் தான் தகவல் அனுப்பச் சொன்னாராம். என் மனைவியைத் துணைக்குக் கூட்டிக்கிட்டு உங்கம்மா ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்காங்க" என்று சாவியைத் தந்தார் எதிர் வீட்டுக்காரர்.

அடுத்த அரைமணியில் இருவரும் மருத்துவமனையில் இருந்தனர். பண்டாரத்திற்கு இரத்ததானம் பண்ணிவிட்டு அம்மா படுக்கையில் கிடந்தாள்.

"என்னம்மா, உங்களுக்கே மற்றவர் தயவு தேவைப்படுகையில் இப்படி இரத்த தானம் பண்ணியிருக்கீங்களே...?" என்று கவலையுடன் ஆதங்கப்பட்ட ரவியையும் மீனாவையும் அம்மா ஆறுதலாகத் தடவிக் கொடுத்தாள்.

''சபாபதிப் பண்டாரம் பாவம். அனாதை. எத்தனை நல்லவர்! எத்தனை தன்னம்பிக்கை உள்ளவர்! நான் இரத்த தானம் செய்வதால் எனக்கு எந்தவிதமான பாதிப்பும் இருக்காது என்றும், என் குரூப் இரத்தம் சபாபதிக்கு ஏற்கும் என்று டாக்டர்கள் கூறிய பிறகே சம்மதித்தேன். அவர் எப்படியிருக்கிறார் என்று பார்த்து வாருங்கள்" என்றாள் அம்மா.



இருவரும் போனபோது, சபாபதிப் பண்டாரத்தின் உடலை மூடியிருந்தார்கள்!


"இரத்தம் கொடுத்தும் பிழைக்க வைக்க முடியலே. தன்னைப் பிழைக்க வைக்க முடியாவிட்டால், தான் இறந்த உடனே தனது கண்களை எடுத்து உங்கம்மாவுக்குப் பொருத்துமாறு கேட்டுக் கொண்டார். கண் டாக்டருக்குத் தகவல் கொடுத்து விட்டேன்" என்றார் மருத்துவமனை டாக்டர்.

யாருமே இதை எதிர்பார்க்கவே இல்லை. "விஷயத்தை அறிந்ததும், அவனா கொடுத்தான்!'' என்று விசும்பினாள் அம்மா.

ஒரு மாதம் ஓடியது. அம்மாவுக்குப் பார்வை மீண்டது.

"நாமும் நல்லவர்களாக இருந்து, மற்றவர்களுக்கும் இயன்றவரை நல்லதையே செய்தால், நமக்கு நடப்பதும் நல்லதாகவே இருக்கும்" என்றாள் அம்மா. ரவியும் மீனாவும் மறுக்கவில்லை.

இனிமேல்...



வைத்தி, குருவிடம் பெருமையாகக் கூறிக் கொண்டான்.

"என் ஃபேஸ் பவுலிங்குக்கு முன்னாடி நீ நிக்கவே முடியாது! மிடில் விக்கெட்ல க்ளின் போல்டு ஆயிடுவே!"

"சும்மா பீத்தாம போடா..." என்றான் குரு விறைப்பாக.

இருவரும், அவர்களை ஒத்த இன்னும் இருவரும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

"நீ போடா..." என்றான் வைத்தி.

"நீ போடா.... அன்னைக்குதான் ரயில்வே கிரவுண்ட்ல நடந்த மேட்ச்ல உன் ஓவர்ல மூணு சிக்ஸ் அடிச்சனே? மறந்துட்டியா?"

"சும்மா குருட்டாம் போக்கில் காட்டடி அடிச்சே! தறிகெட்டு, சிக்ஸ் போயிடுச்சி. அதையே வெச்சுகிட்டு சொல்லாதே..."


"போடா... இப்ப வேணும்னாலும் போடுடா. சிக்ஸ் தூக்கிக் காட்றேன்!"

"அதெல்லாம் உன்னால முடியாதுடா..."

"அதையும்தான் பார்க்கலாம். பவுலிங் போடுடா..."

சவால் சூடு பிடித்தது.

குரு க்ரீஸிற்குள் நின்று கொண்டு, ஸ்டம்புக்கு நேராய் பேட்டால் கோடு இழுத்துக் கொண்டான். பந்தை எதிர்நோக்க ஆயத்தமானான்.



அசாருதீன்/டிராவிட்/ சச்சின் டெண்டுல்கரை மனதில் நினைத்துக் கொண்டான்.

அதேபோல் 'ஆலன் டொனால்டை' மனதில் நினைத்துக் கொண்டே, பனியனின் கைப் பகுதியைச் சற்றுத் தூக்கி விட்டுக் கொண்டு, வேகமாய் ஓடி வந்து பந்தை வீசினான் வைத்தி!

குரு முன்னால் வந்து அடிக்கத் தயாரானான். பந்து பேட்டில் படாமல் போனது.

'வொய்ட்!' என்று கை விரித்தான் அம்பயர் பார்த்தவன்.

வைத்தி கோபத்துடன் மறுபடியும் பந்தை வாங்கி வீசினான்.

குரு பந்தைக் கணித்து பேட்டை சுழற்றினான். பந்து பேட்டின் மத்தியில் பட்டுப் பறந்தது. அவர்கள் வகுத்துக் கொண்ட எல்லையைத் தாண்டி விழுந்தது.

அது விழுந்த இடம் வைத்தியின் வீட்டுக் கண்ணாடி ஜன்னலாய் இருந்ததால், கண்ணாடி "கல கல" சத்தத்துடன் நொறுங்கியது.

அடுத்த சில நிமிடங்களில் சிறுவர்கள் அனைவரும் விழுந்த பந்தைக்கூட எடுக்காமல் மாயமாய் மறைந்து போனார்கள்.

"வா இங்கே! ஊர்ப் புழுதி எல்லாம் உன் மேலதான் இருக்கு. கிட்ட வா... எங்கே போயி சுத்திட்டு வர்றே?" அம்மா கோபத்தோடு கேட்க குரு பயத்தோடு அவள் அருகில் வந்தான்.

"கிரிக்கெட் ஆடி, வைத்தி வீட்டு ஜன்னல் கண்ணாடியை உடைச்சியா? அவங்கம்மா வந்து இப்பத்தான் சொல்லிட்டு போறாங்க. விளையாடப் போகாதே மிட்டேர்ம் வந்திடுச்சு படி படின்னு எத்தனை தடவை சொல்லிருக்கேன்...?"

குருவின் காதுகளை நிமிண்டலாய்ப் பற்றினாள் அம்மா.

குரு வலியால் தலையைக் கோணிக் கொள்கையில், குருவின் அப்பா இடை புகுந்தார்.

"விடு விடு. குழந்தைதானே...? ஏதோ தெரியாம செஞ்சிருப்பான்..."

'குழந்தையா இவன்? பதிமூனு வயசாகுது!

"சரி விடு. குரு நீ போய் கைகால் அலம்பிட்டு வா" என்றவுடன், குரு கிணற்றடிக்கு ஓடினான்.

"இவனால பாருங்க.. கண்ணாடியை மாத்த பணம் தரேன்னு சொல்லிருக்கேன். தண்டச் செலவு. தேவையா இது?" - அம்மா கோபத்தோடு கேட்டாள்.

ஸ்ரீநிவாஸ் பிரபு



"உன் கோபம் சரிதான்... ஆனா அது கிரிக்கெட் மேல அவனுக்கு உள்ள வெறியான ஈடுபாட்டைக் குலைக்கக் கூடாது! அவனோட திறமையை ஊக்கப் படுத்தலேன்னாலும், உறுதியைக் குலைக்காமலாச்சும் இருக்கலாம் இல்லையா? இந்த மாதிரி சின்னச் சின்ன சச்சரவுகளால அவனோட துடிப்பான ஆர்வமும், கவனமும் திசை மாறிப் போயிடுச்சுன்னா... நாளைக்கு ஒரு சச்சினோ... டிராவிடோ எப்படி உருவாவாங்க?"

"என்னங்க பேசறிங்க? இப்படி வீடு வீடாப் போயி இவன் கண்ணாடியை உடைச்சிட்டு வர்றதையும், தண்டச் செலவு வைக்கறதையும் சரின்னு சொல்றிங்களா?" - அம்மா சலிப்போடு கேட்டாள்.

"நிச்சயமா இல்லை. தண்டச் செலவுன்றதை அவனுக்கு புரியவை. அவனைக் கூப்பிட்டு உட்கார வெச்சு, பாருப்பா... இந்தக் காசு இருந்தா உனக்கு புது ஸ்போட்ஸ் ஷு வாங்கித் தருவேனே...? புதுசா பேட்டிங் க்ளவுஸ் வாங்கித் தருவேனே...? இப்படி அநாவசியமா பண்ணலாமான்னு கேளு. யோசிப்பான். அதனால ரோட்ல விளையாடாம கிரவுண்டுல போய் விளையாடுன்னு சொல்லு. அப்ப புரிஞ்சப்பான். அது ஆரோக்கியமான அணுகுமுறை."

அப்பா சொல்லி முடிக்க, அம்மா சமாதானமானாள்.

கால் அலம்பிக் கொண்டு வந்த குருவுக்கு, அப்பா பேசியது முழுவதும் கேட்டது. அது அம்மாவுக்காகச் சொல்லப்பட்டது என்றாலும், அவனும் நிறையவே புரிந்து கொண்டான். 'இனி மைதானத்தில்தான் ஆடணும்!' என்று தனக்குள் உறுதியாகச் சொல்லிக் கொண்டான்.

புத்திசாலி!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

காட்சி 1

இடம்: நவீன் வீடு

அப்பா: நவீன்!.... பாபு!... பிரபா!... எல்லாம் இன்னும் என்ன செய்துக்கிட்டிருக்கீங்க?

நவீன்: என்னப்பா?

அப்பா: மணி ஏழு ஆயிடுத்தே...? சீக்கிரம் புறப்படுங்க! நேரம் போகப் போக வெயில் ஏறிடும்! அப்புறம் பாலாத்து மணல்லே நடக்கறது கஷ்டம். சூடு பொறுக்காது.

பாபு, பிரபா: இதோ நாங்க தயார், வா நவீன்!

அப்பா: ஆத்து மணல்லே ரெண்டு கிலோமீட்டர் தூரம் நடந்து அத்தை வீட்டுக்குப் போய்ச் சேரதுக்குள்ளே எப்படியும் எட்டு மணி ஆயிடும்... நவீன் உனக்கு வழி நினைவிருக்கில்லே?

நவீன்: நல்லா நினைவிருக்குப்பா!... நாமதான் இந்தக் கிராமத்துக்கு வந்தப்புறம் பல தடவை அத்தை வீட்டுக்குப் போயிருக்கோமே? பிரபா அந்த வேர்க்கடலைப் பையை எடுத்துக்க....

அப்பா: அத்தைகிட்ட அந்த வேர்க்கடலைப் பையைக் கொடுத்துடுங்க... ஜாக்கிரதையா போயிட்டு வாங்க. நாளைக் காலையிலே திரும்பி வந்துடுங்க!

மூவரும்: சரிப்பா!

காட்சி 2

இடம்: பாலாற்று மணல்

நவீன்: பிரபா.... பாபு!... காலை நேரத்திலே, இப்படி விரிஞ்சு கிடக்கிற ஆத்து மணல்லே நடந்து போறது எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கு இல்லே...?

பிரபா: ஆமாண்ணா.... இந்த மணல்லே அழகழகா நிறைய கிளிஞ்சலும் சங்குமிருக்கு!... வாங்க எல்லாரும் பொறுக்கலாம்! (பளிச்'சென்று ஒரு தங்கச் சங்கிலி பிரபாவின் கையில் தட்டுப்பட) அண்ணா, பாபு - இங்கே வாங்க... இதோ பாருங்க!

நவீன்: ஹா! எப்படி மின்னறது!... பிரபா, இது தங்கச் சங்கிலியே தான்! இந்தப் பக்கமா வந்தவங்க கழுத்துலேயிருந்துதான் கழண்டு விழுந்திருக்கும்!

பாபு: பாவம், அவங்க சங்கிலியை எங்கெல்லாம் தேடறாங்களோ? இப்ப இந்தச் சங்கிலியை நாம என்ன செய்யலாம்?

பிரபா: இந்தச் சங்கிலி என் கழுத்துக்கு நல்லாயிருக்கு... நானே போட்டுக்கட்டுமா?

நவீன்: பிரபா!... மத்தவங்களுக்குச் சொந்தமான ஒரு பொருளை வழியிலே கிடைச்சுதேன்னு நம்ம உபயோகத்துக்கு எடுத்துக்கிட்டா, அதுவும் ஒரு திருட்டு



தான்! இது காந்தி பிறந்த நாடு; இன்னிக்கு காந்தி பிறந்த நாள்! அவர் கொள்கைகளை நாம கடைப்பிடிச்சு நடக்க வேண்டாமா?

பிரபா: ஆமாம் நவீன்! நான் அப்படி நினைச்சது தப்புதான்!

நவீன்: இந்த சங்கிலியைத் தொலைச்சவங்க, இங்கே அதைத் தேடிக்கிட்டு வந்தாலும் வரலாம்! அப்படி வந்தால் விசாரிச்சுக் கொடுத்துடலாம்! சங்கிலியைக் கழட்டி எங்கிட்டே கொடு!

பாபு: யாரும் தேடி வரல்லேன்னா, நேரா போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், இந்தச் சங்கிலியை ஒப்படைச்சுடலாம்! அதுதான் சரி!

நவீன்: (எதிரில் மீசைக்காரன் ஒருவன் வருவதைக் கண்டு) பாபு! பிரபா! அதோ அங்கே பாருங்க. யாரோ ஒரு ஆசாமி இந்தப் பக்கமா வரான்!

பாபு: சங்கிலியைத் தொலைச்சவனா இருக்குமோ?



பிரபா: அப்படி இருக்காது... சங்கிலியைத் தேடறவங்க, தலையைக் குனிஞ்சு, மணலை அங்கேயும் இங்கேயுமா புரட்டிப் பார்த்துக்கிட்டுத்தான் வருவாங்க! இவன் சிப்பாய் மாதிரின்னா நடந்து வரான்... பார்த்தாலே பயமாயிருக்கு!

பாபு: திருடன் மாதிரி இருக்கான். அண்ணா எதுக்கும் சங்கிலி பத்திரம்!

நவீன்: உஷ்ஷ்... சத்தம் போடாதேடா, அவன் கிட்டே வந்துட்டான்!

மீசைக்காரன்: ஏய்! பொடிப் பசங்களா!... நில்லுங்க! ஏதோ சங்கிலி, சங்கிலின்னு பேசிக்கிட்டிருந்திங்களே..? எடுங்க அந்தச் சங்கிலியை!

பாபு: ஏன் உங்க சங்கிலி ஏதாவது தொலைஞ்சு போச்சா?

மீசை: ஆமாம்.... எடுங்க சங்கிலியை!

பாபு: அது எப்படி

இருக்கும்? எப்படித் தொலைஞ்சது?

மீசை: ஏய்! அனாவசிய பேச்சு வேண் டாம்... ம்... எடுங்க சங்கிலியை!

பிரபா: எங்ககிட்டே எந்தச் சங்கிலியும் கிடையாது!

மீசை: ஹாஹ்ஹா.... பொடிசுகளா! பொய்யா சொல்றீங்க? இந்தாங்க... இந்தத் துண்டுலே அந்தப் பையைக் கவிழுங்க... ம்... சீக்கிரம்.... ச்சே! வெறும் வேர்க்கடலை. சங்கிலியை இதிலே ஒளிச்சு வச்சிருப்பீங் கன்னு நினைச்சேன். ம்.... எங்கே சங்கிலி? உங்க நிஜார் பைகளையும் நானே சோதனை போடறேன்... ஏய் உன் பேர் என்னடா?

பாபு: பாபு!



மீசை: ம்... உன் பாக்கெட்லே இந்த பம்பரம் மட்டும்தான் இருக்கு.... செயின் என்ன ஆச்சு?

பிரபா: நவீன்! நவீன்!

நவீன்: பிரபா! வேர்க்கடலை போச் சேன்னு கவலைப்படறியா? பரவா யில்லை.... சாப்பிட்டுப் போகட்டும்... ஐயா, ருசியான கடலை, சாப்பிட்டுக்கிட்டே போங்க!

மீசை: ஏய் அதிகப் பிரசங்கி! ஏ! நவீன்! உன் பாக்கெட்டைக் காட்டு... அடச் சீ!... வெறும் ரப்பர் பந்து மட்டுந்தான் வச் சிருக்கே!... பொடியன்களா....

நவீன்: நாங்க ரயில் சங்கிலி இழுக்கற திருடன்களைப் பத்திப் பேசிக்கிட்டிருந் தோம்! நீங்க தப்பா நினைச்சுட்டீங்க!

மீசை: ம்! இந்தாங்க உங்க பந்தும், பம்பரமும்! இந்த வேர்க்கடலையை நான் சாப்பிட்டுக்கிட்டே போறேன்! ம்... திரும்பிப் பாக்காம ஓடுங்க! (மீசைக்காரன் போன பின்பு)

பிரபா: அண்ணா.. சங்கிலி என்ன ஆச்சு?

நவீன்: இந்த ரப்பர் பந்தை பிதுக்கி உள்ளே பாருங்க!

பிரபா: அட! ஆமாம்! உள்ளே நிறைய மணலும் சங்கிலியும் இருக்கு!

பாபு: இந்தப் பந்து ஏது?... எப்போ சங்கிலியை உள்ளே போட்டே?

நவீன்: கொஞ்ச விரிசலோடு இருக்கிற இந்த ரப்பர் பந்தும் இங்கேதான் கிடைச் சது... கிளிஞ்சல் பொறுக்கறப்போ இதை யும் கையிலே வச்சுக்கிட்டிருந்தேன்... தூரத் திலே அந்த மீசைக்கரனைப் பார்த்ததும் எனக்குச் சந்தேகமா இருந்தது... உடனே ரெண்டு பிடி மணலை இந்தக் கீறல் விட்ட பந்திலே போட்டு நிரப்பி, சங்கிலியையும் உள்ளே வச்சுட்டேன். இந்தப் பந்து இலேசா கீறல் விட்டு உடைஞ்ச பந்துங் கறதை கையால அழுத்திப் பாத்தாத்தான் தெரியும்! நீங்களே பாருங்க!

பாபு: ஆமாம்! மீசைக்காரனை இந்தப் பந்து நல்லா ஏமாத்திட்டுது!

பிரபா: சபாஷ் நவீன்! நல்ல சமயோசித புத்தி உனக்கு!

நவீன்: நடங்க! நடங்க! அதோ முத்தூர் கிராமம் வந்தாச்சு! மொதல்லே போலீஸ்

ஸ்டேஷனுக்குப் போய் நடந்ததைச் சொல்லிட்டு அத்தை வீட்டுக்குப் போகலாம்!

காட்சி 3

இடம்: போலீஸ் ஸ்டேஷன்

நவீன்: சார்... இன்ஸ்பெக்டர் சார்... வணக்கம்!

இன்ஸ்பெக்டர்: வணக்கம்! எல்லாரும் உள்ளே வாங்க! உட்காருங்க!

நவீன்: சார், நாங்க கிளியூர்லேந்து வரோம்! முத்தூருக்கு வர வழியிலே, பாலாத்து மணல்லே எங்களுக்கு இந்தத் தங்கச்சங்கிலி கிடைச்சுது சார்!

இன்ஸ்பெக்டர்: அடேடே! இன்னிக்குக் காலையிலேதான் இந்தச் செயினை தவற விட்டதைப் பத்தி, இந்த ஊர்க்கார அம்மா ஒருத்தி புகார் எழுதிக் கொடுத்துட்டுப் போனாங்க... இதனோட மதிப்பு பதினைஞ்சாயிரம் ரூபா தம்பி!

நவீன்: அப்படியா சார்!.... இன்னும் கேளுங்க சார்! நாங்க இந்தச் சங்கிலியோடு வந்துக்கிட்டிருந்த சமயம் எதிரே ஒரு திருடன் வந்துட்டான்.

பிரபா: அவனைத் தூரத்திலே பாத்ததும் இந்த நவீன் சங்கிலியை சமயோசிதமா இந்தச் சின்னப் பந்துக்குள்ளே மறைச்சு வச்சுட்டான் சார்!

'காதுல பூச்சி புகுந்துட்டால் என்ன ஆகும் டாக்டர்?''

''சாக வேண்டியதுதான்''

''என்ன டாக்டர் பயமுறுத்தறீங்க?''

''நான் சொன்னது, காதுல புகுந்த பூச்சியை...! உன்னை இல்லே தம்பி.''

— சீர்காழி வி. ரேவதி



பாபு: திருடன் இதைப் பந்துன்னு நினைச்சு நவீன்கிட்டே திருப்பிக் கொடுத்துட்டு, அஞ்சு லிட்டர் வேர்க்கடலையைத் தூக்கிக்கிட்டுப் போயிட்டான் சார்.

இன்ஸ்: அந்தத் திருடன் எப்படி இருந்தான்?

பிரபா: குண்டு பீப்பா மாதிரி, மீசை வச்சுக்கிட்டு கறுப்பா இருந்தான் சார்!

இன்ஸ்: அப்படியா?... அவன்தான் முத்தாண்டி! பெரிய திருட்டுக்கூட்டத்தைச் சேர்ந்தவன். அவனைப் பத்தி துப்பு தர்றவங்களுக்கு இருபதாயிரம் தரதா விளம்பரம்கூடப் பண்ணியிருக்கோம்.

நவீன்: அப்படியானா இப்பவே புறப்படுங்க சார்! அந்தத் திருடன் போகும் போது சாப்பிட்டுப் போட்ட வேர்க்கடலைத் தோல் மணல் நெடுகக் கீழே விழுந்திருக்கும்... இப்போ காத்துகூட இல்லே... உடனே போனா அவன் போன வழியை சுலபமாகக் கண்டுபிடிச்சு, அவனையும் பிடிச்சுடலாம்... புறப்படுங்க சார்!

இன்ஸ்: சபாஷ்! நவீன்!... எல்லாரும் என்கூட வாங்க!

காட்சி 4

இடம்: கிராமத்து மைதானம்

இன்ஸ்: அன்பார்ந்த கிராமத்து மக்களே! வணக்கம்! இத்தனை வருட காலமாக போலீஸார் கண்களில் மண்ணைத் தூவி விட்டு மறைந்து வாழ்ந்திருந்த பெருந் திருடன் முத்தாண்டி பிடிபட்டு விட்டான்! அவனைப் பிடித்துக் கொடுத்தது யார் தெரியுமா? இதோ உங்கள் முன் நிற்கும் சிறுவன் நவீன்தான்! அவனது அஞ்சா நெஞ்சமும், சமயோசித புத்தியும்தான், முத்தாண்டி பிடிபட்டதற்குக் காரணமாயிருந்தவை! அரசாங்க அறிவிப்புப்படி அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் விழாவில் நவீனுக்கு 'பரிசளிப்பு விழா' நடைபெறும்! நவீனைப் போன்ற அஞ்சா நெஞ்சமுடைய சிறுவர்களே நாளைய இந்தியாவிற்குத் தேவை. வணக்கம்!

கிராம மக்கள்: சபாஷ் நவீன்!... நவீனுக்கு.... ஜே!

(கை தட்டல்)

ஜானகி மணாளன்

உண்மையான கருவூலம்

பண்டைக் காலத்தில், போஜராஜன் என்று ஒரு மன்னர் இருந்தார். நல்லவர். குடிமக்களிடம் அன்பும் பரிவும் காட்டி, நியாயம் தவறாது சிறந்த முறையில் நாட்டை ஆண்டு வந்தார்.

ஒரு சமயம், அவ்வரசன் வேட்டையாடத் தனியாகக் காட்டுக்குச் சென்றார். அன்று பரிவாரங்கள் எதுவும் அவருடன் செல்லவில்லை. மிருகங்களைத் துரத்திக் கொண்டே, தனியாகக் காட்டுக்குள் வெகுதூரம் சென்று விட்டார். நகரம் திரும்ப வழி புரியவில்லை; அலைந்தார். பய



னில்லை.

கடைசியில், ஒரு குன்றின் மீதிருந்த உயரமான மரத்தின் உச்சிக் கிளையில் ஏறி நின்று, நாற்புறமும் உற்று நோக்கினார். வெகு தூரத்தில் ஒரு குடிசை தெரிந்தது. போஜராஜன் அங்கு சென்றார்.

அக்குடிசையில் ரோஹித் என்ற ஒரு உழவன் வசித்து வந்தான். போஜராஜன் அரசருக்குரிய உடையில் இருக்கவில்லை. எனவே வந்துள்ள விருந்தாளி யார் என்பது ரோஹித்துக்குத் தெரியவில்லை. இருந்தாலும் இயல்பாக அமைந்த பண்பாடு காரணமாக வாருங்கள் ஐயா! என்று வரவேற்றான்.

"முதலில் எனக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்..." என்று கேட்டு வாங்கிப் பருகினார் போஜராஜன்.

அதற்குள் ரோஹித், "ஐயா, தங்களைப்

பார்த்தால் பசியால் வாடுபவர் போலிருக்கிறதே...?" என்று கேட்டான்.

'ஆம்' என்று அரசன் தலையாட்டவே அவரைத் தனது வயலுக்கு அழைத்துச் சென்றான்.

வயலில் ஏராளமான தர்பூஜாப் பழங்கள் (இன்றைய தர்பூசணிப் பழங்கள்) பழுத்துக் கிடந்தன. அவற்றைக் காட்டி, "வேண்டிய மட்டும் இந்தப் பழங்களைப் பறித்து தின்று பசியாறுங்கள்..." என்றான்.

"அதோ அந்தத் தென்கிழக்கு மூலையில் இருக்கும் பழங்களை மட்டும் பறித்து விடாதீர்கள்... அவை எங்கள் அரசருக்குரியவை...' என்று கூடவே எச்சரிக்கை செய்தான் ரோஹித்.

அதைக் கேட்டதும், அரசர், 'நம் மக்கள் நம்மிடம் எத்தனை அன்பு வைத்துள்ளனர்' என்று மகிழ்ந்தார். பூரித்துப் போனார். மிகுந்த உற்சாகத்துடன், ரோஹித்திடம் கேட்டார்.- " ஒதுக்கியுள்ள அந்தப் பழங்களைத்தான் பறித்து உண்ண வேண்டும் என்று ஒருவேளை நான் ஆசைப்பட்டால்?"

அதற்கு சட்டென்று ரோஹித், "எவரையும் அவற்றைத் தொடக்கூட நான் அனுமதிக்க மாட்டேன்... அவை எங்கள் அரசருக்கு அன்பளிப்புச் செய்யப்படுவதற்காக உள்ளவை..." என்றான்.

மேற்கொண்டு பேச்சை வளர்த்தாமல், அந்த உழவன் கொடுத்த தர்பூஜாப் பழங்களைத் தின்றுவிட்டு அவன் காட்டிய வழியில் நடந்து நகரம் திரும்பினார் போஜராஜன்.

ஏழெட்டு நாட்கள் கடந்தன.

ஒருநாள், அந்த உழவன், அரசனுக்காகத் தான் ஒதுக்கி வைத்திருந்த தர்பூஜாக்களை, ஒரு கூடையில் பறித்துப் போட்டுக் கொண்டு, நகரில் உள்ள அரசர் வாழும் அரண்மனைக்கு வந்தான்.

அப்போது, அரச சபை நடந்து கொண்டிருந்தது. ரோஹித் ஓர் ஓரமாகக் கூடையுடன் அரசனைப் பார்ப்பதற்காக நின்றிருந்தான். அவனைப் போஜராஜன் கவனித்து விட்டான். சில தினங்களுக்கு முன்பு தன் குடிசைக்கு வந்த விருந்தாளிதான் நமது அரசர் என்பதை ரோஹித்தும் புரிந்து கொண்டு விட்டான். அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி!


அரசன் ரோஹித்தை அருகில் அழைத்து, "விவசாயியே! இப்போது நீ எனக்காகக் கொண்டு வந்துள்ள தர்பூஜாப் பழங்களை நான் ஏற்க மறுத்தால் என்ன செய்வாய்?" என்று விளையாட்டாகக் கேட்டார்.

"ஒரு நல்ல அரசன், தனக்கு மற்றொரு அரசன் அன்பாகக் கொடுப்பதை ஏற்க என்றுமே மறுக்க மாட்டான்" என்றான் ரோஹித்.

"நீ அரசனா! எந்த இடத்துக்கு...?"

"எனது வயல்களுக்கு...!"

"உன்னிடம், என்னிடம் இருக்குமளவுக்குப் பெரிய கருவூலம் இருக்கிறதா?" என்று கேட்டான் மன்னன் வியப்புடன்



"ஆம் அரசே!" என்ற ரோஹித், "உங்களுடைய அரண்மனைக் கருவூலத்தை விட எனது கருவூலம் மிகப் பெரியது. மதிப்பு மிக்கது! உங்களுடையதில் பொன் - வெள்ளி நாணயங்கள் முத்து - வைரம் போன்ற கற்கள் பதித்த ஆபரணங்கள் தவிர வேறு என்ன இருக்கின்றன? அவற்றைக் காவல் காப்பதற்கே நீங்கள் லட்சக் கணக்கில் பணம் செலவிட வேண்டியுள்ளதே...? என் கருவூலம் அப்படி இல்லை. அது விலை மிக்கது. எப்போதாவது நேரம் கிடைக்கும்போது, எனது கருவூலத்தை வந்து பாருங்கள்..." என்றழைத்தான்.

"எப்போதாவது என்ன...? இப்போதே வருகிறேன். உன் கருவூலத்தில் என்னதான் இருக்கிறது என்று பார்த்து விடுகிறேன்..." என்று போஜராஜன் உழவனுடன் கிளம்பினார்.

குடிசையை அடைந்ததும் ஓர் ஓரத்தில் எதையோ சுட்டிக்காட்டிய ரோஹித், "மகாராஜா! இதோ இருக்கிறது பாருங்கள்.... இதுதான் என் கருவூலம்..." என்றான். அவன் சுட்டிக் காட்டியது வயலை உழும் ஏர் கலப்பையை!

போஜராஜனிடம் வியப்பு!" இதுவா கருவூலம்..? எப்படி...?"

"ஆம் அரசே!" என்ற உழவன், "இதைப் பாதுகாக்க வீரர்கள் யாரும் தேவையில்லை. இதன் உதவியால்தான் நான் என் வயலில் விவசாயம் செய்கிறேன்... அந்தத் தானியத்தைத்தான், நீங்களும் நம் நாட்டு மக்களும் சாப்பிடுகிறீர்கள்.... இப்போது சொல்லுங்கள்.... இது பயன்படுவதைப் போன்று, உங்களிடம் உள்ள முத்தும் பவழமும் இன்னும் பிற அணிகலன்களும் செல்வக் குவியல்களும் உயிர்களின் பசியைத் தீர்க்க உதவுமா? மற்றவர் பசி தீர்க்கப் பயன்படுமா? அவற்றை மக்களால் சாப்பிட முடியுமா? எனவே, இந்த ஏர்- கலப்பைதான் நாட்டின் விலை மிக்க உண்மையான கருவூலம்..." என்றான்.



ரோஹித் கூறிய கருத்து போஜராஜனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவரது கோபமெல்லாம் போன இடம் தெரிய வில்லை...' உன்னைப் போன்ற பயமற்ற உழவர்கள் இருப்பதால்தான் என்னால் பயமற்று நாட்டை ஆள முடிகிறது. உழவுத் தொழிலுக்கு ஈடு இந்த உலகில் வேறு எதுவுமே கிடையாது. அதுதான் ஒரு நாட்டின் உண்மையான கரு வூலம்..." என்று போஜராஜன் உழவனை ஆரத் தழுவிக் கொண்டார்.

கேட்கட்டுமா டாக்டர்?

● பா. மங்களாம்பிகை, புருஷானூர்.

? கார்போஹைட்ரேட் அதிகமுள்ள உணவுப் பொருள்கள் என்னென்ன?

! அரிசி, கோதுமை, கேழ்வரகு, சோளம், கம்பு போன்ற தானிய வகைகளிலும், உருளைக் கிழங்கு, சேனைக்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு போன்ற கிழங்கு வகைகளிலும், சர்க்கரை, வெல்லம், தேன், கரும்புச்சாறு போன்ற இனிப்பு வகைகளிலும், 'கார்போஹைட்ரேட்' என்றழைக்கப்படுகிற மாவுச்சத்து அதிகமுள்ளது.

● ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர்-1

? சிறுநீரகத்தில் தங்கியுள்ள கற்களை அறுவை சிகிச்சையின்றி அப்புறப்படுத்த முடியுமா, டாக்டர்?

! முடியும், கிருஷ்ணன். 'லித்தோடிரிப்டர்' (LITHOTRYPTER) என்ற கருவி மூலம் சிறுநீரகக் கற்களை உடைத்து சிறுநீரில் வெளியேற்ற முடியும். கத்தியின்றி, ரத்தமின்றி அறுவை சிகிச்சையின்றி கற்களை உடைக்கும் கருவி இது!

● ஆர். ரவிவர்மன், கபிஸ்தலம்.


? 'அப்பெண்டிஸ்' அறுவை சிகிச்சை என்றால் என்ன டாக்டர்?

! அப்பெண்டிஸ் அல்ல, ரவிவர்மன், 'அப்பெண்டிக்ஸ்!' (APPENDIX). தமிழில் குடல் வால். நமது வயிற்றில் பெருங் குடலின் துவக்கத்தில் ஒரு மிளகாய் அளவுக்குத் தொங்கிக் கொண்டிருக்கிறது குடல் வால். இதில் அசுத்த உணவு மற்றும் சுத்தமில்லாத குடிநீர் காரணமாக கிருமிகள் தங்கி அழற்சி ஏற்படுத்தி விடும். அப்போது குடல் வாலில் புண் உண்டாகி சீழ் பிடித்து விடும். இதன் விளைவாக அடிவயிற்றில் வலி, வாந்தி, காய்ச்சல் போன்ற தொல்லைகள் துவங்கும். ஆரம்ப நிலையில் இதற்கு மருந்து, மாத்திரைகளில் சிகிச்சை தந்து குணமாக்கி விடலாம்; பாதிப்பு அதிகமாகி விட்டால் குடல் வாலை அறுவை சிகிச்சை செய்து நீக்க வேண்டும். இதற்கு 'குடல்வால் அறுவை சிகிச்சை' (APPENDICECTOMY) என்று பெயர். இப்போது பிரபலமாகி வரும் 'லேப்ராஸ் கோப்பி' (LAPAROSCOPY) அறுவை சிகிச்சை முறையில் நோயாளியின் வயிற்றைக் கிழிக்காமல் சில துளைகள் மட்டும் போட்டு இந்த அறுவை சிகிச்சையை மேற்கொள்ளலாம்.

● வி. பிரபாகர், விருத்தாசலம்.


? எலும்புக் கூட்டி விருந்து ஆண், பெண்

எலும்பால் ஆண், பெண் அறிய முடியுமா?



வேறு பாட்டை எப்படி அறிவது, டாக்டர்?

! ஆணின் இடுப்பு எலும்பு குறுகலாக இருக்கும். பெண்ணின் இடுப்பெலும்பு அகலமாக இருக்கும். ஆணின் கபாலம் நீண்டிருக்கும். பெண்ணின் கபாலம் அகலமாக இருக்கும். இவை தவிர ஆண் பெண் கை கால் எலும்புகளின் அகலங்களை ஒப்பிட்டுப் பார்த்தும் ஆண், பெண் வேறுபாட்டை அறிய முடியும்.



● **என். ரம்யா, சென்னை - 5.**

? 'சைனுசைட்டிஸ்' நோய்க்கு எண்டாஸ்கோபி மூலம் அறுவை சிகிச்சை செய்யலாம் என்கிறார்களே... எப்படி செய்வார்கள்? இதற்கும் 'பங்க்சர்' செய்வதற்கும் உள்ள வேறுபாடு என்ன? எதைச் செய்தால் மறுபடியும் இந்த நோய் வராமல் தடுக்க முடியும்? விளக்கமாக பதில் தருமாறு கேட்டுக் கொள்கிறேன், டாக்டர்!

! முதலில் 'சைனுசைட்டிஸ்' (SINUSITIS) என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்வோம். நம் முகத்தில் உள்ள எலும்புகளில் நான்கு காற்றறைகள் உள்ளன. இவற்றில் பாக்டீரியா, வைரஸ் போன்ற கிருமிகள் புகுந்து அழற்சியை ஏற்படுத்தி, புண்ணாக்கி விடுகின்றன. விளைவு - காற்று இருக்க வேண்டிய இடத்தில் நீரும், சீழும் சேர்ந்து விடுகின்றன. கடுமையான தலைவலி இதன் முக்கிய அறிகுறி. ஆரம்ப நிலையில் சில நுண்ணியிர்க் கொல்லி மருந்துகளைக் கொடுத்தால் இது குணமாகி விடும். முற்றிய நிலையில் 'பங்க்சர்' செய்ய வேண்டியது வரும். அதாவது காற்றறையில் சிறிய துளை போட்டு சிரிஞ்ச் மூலம் சளியையும் நீரையும் உறிஞ்சி எடுத்து, சுத்தம் செய்வார் மருத்துவர். இது பழைய முறை. இதற்குப் பதிலாக இப்பொழுது 'எண்டோஸ்கோப்பி' மூலம் அறுவை சிகிச்சை செய்யும் முறை பிரபலமாகி வருகிறது. இந்த முறைப்படி எண்டோஸ்கோப்பி கருவியை காற்றறைக்குள் செலுத்தி அங்குள்ள குறைபாட்டை நேரில் பார்த்து அந்தக் கருவி மூலமே காற்றறையைச் சரி செய்வார் மருத்துவர். இப்போதைக்கு 'சைனு சைட்டிஸ்' நோய்க்கு நல்ல பலன் தருவதும் நிரந்தரத் தீர்வு தருவதும் இந்த சிகிச்சைதான்.


● **என். ராஜி, மேலப்பாதி**

? வெட்டுக் காயத்திலிருந்து இரத்தம் கசிவதைத் தடுக்க என்ன முதலுதவி செய்ய வேண்டும்?

! சுத்தமான தண்ணீரால் காயத்தைக் கழுவி, அதன் மீது ஒரு சுத்தமான துணியை பல மடிப்புகளாக மடித்து வைத்து, அழுத்தமாகக் கட்டுப் போட வேண்டும். காயம் ஏற்பட்ட உடல் உறுப்பை சற்றே உயர்த்திப் பிடிக்க வேண்டும். பொதுவாக வெட்டுக் காயங்களுக்குத் 'தையல்' (SUTURE) போட வேண்டியதிருக்கும். எனவே, முதலுதவி செய்த கையோடு மருத்துவர் உதவியையும் நாட வேண்டும்.

டாக்டர் கு. கணேசன்

வாழ்க புயல்!



மதன் வருத்தத்துடன் படுத்திருந்தான். அருகில் வந்த அப்பாவைப் பார்த்து, "ரிசல்ட் வந்துடுச்சாப்பா? டாக்டர் என்ன சொன்னார்?" என்று கேட்டான்.

"உனக்கு டைபாய்டு காய்ச்சலாம். இன்னும் பத்து நாட்கள் ஓய்வெடுத்தால் சரியாகி விடும் என்றார். எதைப் பற்றியும் நினைத்து வருத்தப்படாதே. உடம்புதான் இப்போ முக்கியம்" - மதனை ஆதரவாகத் தட்டிக் கொடுத்தார் அப்பா.

"இரண்டு பரீட்சைதானே எழுதியிருக்கேன்? நாளை மறுநாள் அடுத்த பரீட்சை. இப்படி எழுத முடியாம போயிடுத்தே! என்ன செய்வது? - மதன் தனக்குள் வருந்திக் கொண்டான். மறுபடி அப்பா வந்த போது கண்கலங்கினான்.

"அப்பா நீங்க சொன்ன போது நான் கேட்கலே. அன்றைய பாடத்தை அன்றே முடித்திருந்தால் காலாண்டு, அரையாண்டுத் தேர்வில் நல்ல மதிப் பெண் பெற்றிருப்பேன். முழு ஆண்டுத் தேர்வுக்கு மட்டும் ஒரு மாதத்துக்கு முன்னால படிச்சா போதும்ன்னு நினைச்சிட்டிருந்த எனக்கு நல்ல தண்டனை கிடைச்சிடுத்து!"

"மதன், இப்பவாவது இதை நீ புரிஞ்சுக் கிட்டதே போதும். அழாதே! ஒரு வருடம் வீணாகப் போகிறதே என்றுதான் வருத்தமா இருக்கு. அதைப் பற்றி இனிமே எண்ணிப் பயனில்லை. ஒரு பாடம் கத்துக்கிட்டியே. இது போதும்!" என்று அவனைத் தேற்றினார் அப்பா.

அன்று இரவு திடீரெனப் புயல் வீசியது. பலத்த மழை பெய்தது. ஊரே தண்ணீரால் சூழப்பட்டது. மின்சாரம் துண்டிக்கப் பட்டது.

காலையில் தன்னைப் பரிசோதிக்க வந்த டாக்டரிடம் "டாக்டர் எனக்கு ரெண்டு மணி நேரம் அனுமதி கொடுத்திங்கன்னா, நான் பரீட்சை எழுதிட்டு வந்துடுவேன்" என்றான் மதன் சிரமத்துடன்.

"வெளியில எங்கேயும் போகக் கூடாது. அலட்டிக்கவும் கூடாது. இன்னும் காய்ச்சல் குறையல. இந்த நேரத்துல ஓய்வு ரொம்ப அவசியம்" என்றார் டாக்டர் கண்டிப்புடன்.

டாக்டர் சென்றவுடன் அப்பாவிடம் கெஞ்சிப் பார்த்தான் மதன். அங்கு வந்த மதனின் தம்பி "அண்ணா எங்கே கிளம்ப இப்படித் தவிக்கிறே?" என்று கேட்டான்.

"பரீட்சை எழுதப் போகலாமான்னுதான் டாக்டர்கிட்ட கேட்டுட்டு இருக்கேன்" என்றான் மதன்.

"நான் இப்பத்தான் பள்ளியிலிருந்து வர்றேன். நேற்று அடிச்ச புயல் மழையால பள்ளிக்கூடக் கூரையெல்லாம் கீழே விழுந்துடுச்சு. எல்லா இடமும் தண்ணி நிக்குது. அதனால மீதித் தேர்வு எல்லாம் பதினைந்து நாள் கழிச்சுத்தான் நடக்கும்ன்னு சொல்லிட்டாங்க" என்றான் தம்பி.

மதனுக்கும் அப்பாவுக்கும் மகிழ்ச்சியான மகிழ்ச்சி.

"அண்ணா அடுத்த வருஷமும் நீ முழு ஆண்டுத் தேர்வு நெருங்கும் போதுதான் படிக்கப் போறியா?" என்றான் தம்பி கிண்டலுடன்.

"இல்லடா. அன்றைய பாடத்தை அன்றே படிச்சு, வகுப்பில் முன்னணி மாணவர்களில் முதலிடத்துல இருக்கப் போறேன்" என்றான் மதன்.

அப்பாவுக்கும் தம்பிக்கும் மகிழ்ச்சி!

— கமுதி மு. ரியாகல்லா

கரும்பு தின்ன...

பூவை அமுதன்



குடிசைப் பகுதியிலே குறுகலான ஒரு தெருவிலே அந்தக் குடிசை வீடு இருந்தது. காலை பத்து மணியிருக்கும். வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. அமலநாதன் வெறுந்தரையிலே படுத்துக் கொண்டு, பழைய புத்தகம் எதையோ படித்துக் கொண்டிருந்தான்.

வெளியேயிருந்து கார் ஹாரன் சப்தம் கேட்டது. "நம்மைத் தேடி யார் வரப் போறாங்க? அதுவும் காரிலே!..." என்று புத்தகத்தை மூடி வைத்து விட்டு எழுந்து வெளியே வந்தான் அமலநாதன்.

அவனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது, காருக்குள் அமர்ந்திருந்தவரைப் பார்த்ததும்.

"உன்னைத் தேடித்தான் வந்தேன் தம்பி. டி.சி. வாங்கிட்டியாமே? ஏன்... வெளியூரிலே எங்கேயாவது படிக்கப் போறியா...?" என்று காரை விட்டு இறங்கிக் கொண்டே கேட்டார் காரில் வந்தவர்.

"உள்ளூரிலேயே படிக்க முடியாத நான் வெளியூரிலே போய் வேற எங்கே படிக்கப் போறேன்? எட்டாவது வரைக்கும் படிச்சதே போதுமின்னு தோணுதையா! ஐயா... உங்களை உள்ளே வரச் சொல்லக் கூட முடியலையையா! குடிசை வீடு. குனிந்து வரணும், வந்தாலும் உள்ளே உட்கார வைக்க ஒரு பெஞ்ச்சோ நாற்காலியோ கிடையாதையா?"

அமலநாதனின் குரலில் சோகம் இழைந்திருந்தது. உண்மையில் அவன் மிகவும் வருந்தினான். கண்கள் கலங்கிக் கொண்டிருந்ததைக் காரில் வந்தவரும் கவனித்தார்.

"ஐயா... நீங்க எவ்வளவு பெரிய மனிதர்! இந்த ஏழையைத் தேடிக் கொண்டு இந்தக் குப்பத்துக்கே வந்திட்டீங்களே! சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்து உங்களைப் பார்த்திருப்பேனே?" என்று பரிவோடு கேட்டான் அமலன்.

"தம்பி! எனக்கு உன்னால் ஒரு காரியம் ஆகணும். அப்படின்னா நான்தானே உன்னைத் தேடி வரணும்? அதான் வந்திருக்கேன். வாயேன் காரில் உட்கார்ந்தே பேசலாமே?" என்று அழைத்தார் அவர்.

அப்போது குடிசைக்குள்ளிருந்து இருமல் சத்தம் கேட்டது.

"உள்ளே...?" - அவர் கேட்டு முடிக்குமுன் அவன் சொன்னான், "என் பாட்டியிருக்காங்க. உடம்பு சுகம் இல்லை. பார்வை மங்கிப் போச்சு. எனக்குப் பாட்டிதான் எல்லாம். அவங்களுக்கும் என்னை விட்டால் வேற யாரும் இல்லை. அப்பா, அம்மா தீ விபத்தில் இறந்திட்டாங்க."

"அட பாவமே!"

"இனிமேல், பாட்டியாலே இட்லி, வடை எல்லாம் சுட முடியாது. பாட்டி சுட்டுக் கொடுக்கும். நான் வித்திட்டு வருவேன். எட்டரை மணிக்கெல்லாம் முடிச்சிட்டு நேரம் தவறாமே, ஒன்பது மணிக்குள்ளே ஸ்கூலுக்கு ஓடிடுவேன். எப்படியோ எட்டாவது வரைக்கும் படிக்க முடிஞ்சது. இனிமே எப்படிப் படிக்கிறது? பாட்டியை நான்தானே காப்பாத்தணும்? ஏதாவது வேலை கிடைக்குதான்னு தேடணும்...."

"ஓ... அதான் டி.சி. வாங்கிட்டியா? பாவம்... நீ நல்லா படிக்கிற பிள்ளைன்னு அன்னைக்கே தெரிஞ்சிக்கிட்டேன். நிறையப் படிச்சு பெரிய ஆளா வரவேண்டி

யவன் தம்பி நீ! நீ படிப்பை விட்டுடக் கூடாது... அன்னைக்கு உன்னை எப்படிப் பாராட்டினாங்க எல்லாம்!"

அவர் பரிவோடு சொல்லிக் கொண்டிருந்தார். அமலநாதனுக்கு அன்று நடந்த நிகழ்ச்சி மனத்திரையில் படம் போல ஓடியது.

மாணவர்களிடையே அமர்ந்திருந்தான் அமலநாதன். பணம் உள்ளவர்களுக்கெல்லாம் இப்படிப்பட்ட நல்ல மனம் இருந்தால் எவ்வளவு நன்மையாக இருக்கும் என்று மனதுக்குள்ளேயே அவரைப் பாராட்டிக் கொண்டிருந்தான்.

அப்போது திடீரென்று அவனுக்கு ஓர் எண்ணம் பளிச்சிட்டது. அடுத்த கணமே

அன்று பள்ளியில் ஆண்டு விழா. ஊராட்சி மன்றத் தலைவர், போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டிப் பேசினார்.



நகரத்திலேயிருந்த பணக்காரர்களில் அவர் குறிப்பிடத் தகுந்தவர். கடைத் தெருவில் பெரிய மளிகைக் கடையும் பக்கத்திலேயே ஒரு ஜவுளிக்கடையும் அவருக்குச் சொந்தமாக இருந்தன.

பள்ளியின் ஆண்டு விழா திறந்த வெளியில் நடந்து கொண்டிருந்தது. திடலில் இருந்த இரண்டு மரங்களும் இலைகளை உதிர்த்து விட்டு, நிழல் கொடுக்க முடியாமல், நின்று கொண்டிருந்தன. அதைக் கவனித்து விட்டு, "உங்கள் பள்ளிக்கு நான் ஒரு கலைக்கூடம் கட்டித் தருகிறேன். இது போன்ற விழாக்களை அந்தக் கலைக் கூடத்துக்குள் நடத்திக் கொள்ளலாம்" என்று குறிப்பிட்டார் அவர்.

அதைக் கேட்டதும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்பட்டு விட்டது. எல்லோரும் கைகளைத் தட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

விழாவின் இறுதிக் கட்டம் நன்றி கூறுதல். தமிழாசிரியர் நன்றி கூறுவார் என்று நிகழ்ச்சி நிரலில் இருந்தது.

தமிழாசிரியரிடம் ஓடிச் சென்று மெதுவாக அவரிடம் ஏதோ கூறினான். அவரும் அவனைத் தட்டிக் கொடுத்து 'சரி' என்றார். ஒலிபெருக்கியருகே சென்று, "நான் நன்றி கூறுவதற்கு முன்பாக, நம் பள்ளியில் எட்டாவது வகுப்பில் படிக்கும் மாணவன் அமலநாதன் இரண்டொரு நிமிடம் பேசுவான்!" என்று அறிவித்தார்.

மாணவர்களும் ஆசிரியர்களும்... ஏன்... தலைமை ஆசிரியரும் கூட ஆச்சரியத்தோடு பார்த்தார்கள் அமலனை. ஆனால் தமிழாசிரியர் மற்றவர்களை விட அமலனை நன்கு அறிந்து வைத்திருந்தார். அவன் அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசி விடமாட்டான் என்று நம்பியே அவனைச் சில நிமிடங்கள் பேச அனுமதித்திருந்தார்.

''இந்த நேரத்தில் ஐயாவுக்கு ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். இதையும் கூட நிறைவேற்றி விடுவார் என்று உறுதியாக நம்புகிறேன்....''

அவன் என்ன கேட்கப் போகிறானோ என்று ஆசிரியர்கள் கவலையுடன் கவனித்தனர்.


''ஐயா... என் போன்ற குப்பத்துப் பிள்ளைகள் இரவு நேரத்தில் பள்ளியிலே வந்து அமைதியாகப் படிக்க மின் விளக்கு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அமைதியாகப் படிக்க முடியவில்லை. கடைத்தெரு, பக்கத்திலேயே இருக்கிறது. அங்கே டீ கடைகளிலிருந்தும் ஓட்டல்களிலிருந்தும் வானொலிப் பெட்டிகள் மூலமாகவும் ஒலிபெருக்கிகள் மூலமாகவும் சினிமாப் பாட்டுகள் போட்டி போட்டுக் கொண்டு காது பிய்ந்து போகிற அளவுக்குப் பெருஞ்சத்தமாகக் கேட்கின்றன. எங்களால் அமைதியாகப் படிக்க முடியவில்லை. இது மட்டுமல்லாமல், பக்கத்திலே இருக்கிற நகராட்சி மைதானத்தில் பல மணி நேரம் தொடர்ந்து சைகிள் ஓட்டுகிற நிகழ்ச்சியும், பொருட்காட்சி நிகழ்ச்சிகளும் அவ்வப்போது நடைபெறுவதால் பகலிலேயே கூட பள்ளியில் பாடங்கள் நடைபெற இடையூராக இருக்கிறது. இதையெல்லாம் கவனித்து மாணவர்கள் ஆழ்ந்து படிக்க பங்கம் ஏற்படாதவகையில் பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதான் என் வேண்டுகோள்!''



அமலநாதன் மேடையில் ஒலிபெருக்கி எதிரே வந்து நின்றான். தமிழாசிரியரே அவன் உயரத்துக்கு ஒலி பெருக்கியை இறக்கிச் சரி செய்தார்.

அமலநாதன் அச்சத்துடனேயே பேச ஆரம்பித்தான். தனது நன்கொடையாகக் கலைக்கூடத்தைக் கட்டித் தர முன் வந்ததற்கு நன்றி கூறிவிட்டுத் தொடர்ந்தான்.

அமலநாதன் பேச்சை முடித்துக் கொண்டு மேடையை விட்டு இறங்குமுன், செல்வந்தர் நல்ல பெருமாள் எழுந்து சென்று அமலனைச் சேர்த்து அணைத்துக் கொண்டார். எல்லோரும் எழுப்பிய கர



நம்ப முடியவில்லை!

ஆட்டுக்குட்டி ஒன்று காட்டுப் பாதையில் சென்று கொண்டிருந்தது. திடீரென்று "ஐயோ ஆபத்து, காப்பாத்துங்களேன்" என்று எங்கிருந்தோ ஒரு குரல் கேட்டது. குரல் வந்த திசையை நோக்கி ஆட்டுக்குட்டி போனது. கட்டப்பட்டிருந்த மூட்டையிலிருந்து 'ஆபத்து ஆபத்து' என்ற குரல் வந்தது.

ஆட்டுக்குட்டி உடனே அந்த மூட்டையை மெல்ல அவிழ்த்தது. அவ்வளவுதான்! உள்ளேயிருந்து ஓர் ஓநாய் தாவிப் பாய்ந்தது.

"டேய்! உன்னைச் சாப்பிடப் போகிறேன். எனக்கு ரொம்பப் பசியா இருக்கு" என்றது ஓநாய். அதற்கு ஆட்டுக்குட்டி "அண்ணா அண்ணா உங்களுக்குக் கோடி புண்ணியம். என்னை விட்டு விடுங்கள். உங்களை ஆபத்திலிருந்து காப்பாற்றினேன் அல்லவா?" என்று கெஞ்சிக் கேட்டது.

ஓநாய் விட்டபாடில்லை. கடைசியில் இருவரும் ஒரு சமாதான ஒப்பந்தம் செய்தன. அதாவது, பக்கத்துக் காட்டில் காவல் இருந்து வரும் நரியாரிடம் வழக்கை எடுத்துச் சொல்வது. அவர் சொன்னபடி கேட்பது' என்பது தான் அது.

நரியார் தனியாகப் பரண்மேல் அமர்ந்து மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டிருந்தார். இவர்களைக் கண்டதும் கீழே குதித்து வந்து 'வாங்கோ வாங்கோ' என்றபடி இரண்டையும் உட்கார வைத்து நடந்ததையெல்லாம் விவரமாகக் கேட்டார். ஆட்டுக்குட்டியைப் பார்க்கப் பாவமாக இருந்தது. நரியாருக்கு ஒரு யோசனை வந்தது.

"இது நடந்த இடத்தையும் ஓநாய் எப்படி சாக்குக்குள் கட்டப்பட்டிருந்தது என்பதையும் என்னால் நம்பமுடியவில்லை. நேரில் பார்க்க வேண்டும் என்றார் நரியார். இதை ஒப்புக் கொண்ட இரண்டும் நரியாரை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றன. இடம் வந்ததும் "இப்படித்தான் கிடந்தேன்" என்று சாக்குப் பைக்குள் ஓநாய் நுழைந்து கொண்டது. படபடவென்று அதை மீண்டும் கட்டிப் போட்ட நரியார் "அசட்டு ஆட்டுக்குட்டியே, திரும்பிப் பார்க்காம ஓடிப் பிழை. இதுதான் என் தீர்ப்பு" என்று சிரித்தது.

(கருத்து பஞ்சதந்திரம்)
— தேனி முருகேசன்

ஒலி அடங்கப் பல விநாடிகள் ஆயின.

பெரியவர் நல்ல பெருமாள் அவன் முதுகைத் தட்டிச் சொன்னார், "அமலா! நீ படிப்பை நிறுத்தக் கூடாது. மீண்டும் அதே பள்ளியில் போய்ச் சேர். தலைமை ஆசிரியரிடம் நான் சொல்கிறேன்..."

"ஐயா! பாட்டி...?" அமலன் குரல் தழதழத்தது.

"உன் பாட்டியை நான் முதியோர் இல்லத்தில் சேர்த்து விடுகிறேன். உனக்கு உணவு, உடை, படிப்பு எல்லாவற்றிற்கும் நான் இருக்கிறேன்..."

"பாட்டிக்குத் துணையாக... நான் கூடவே இருந்து...."

"பாட்டியை நல்லபடியா கவனிக்க நான்தான் ஏற்பாடு பண்ணறேனே? நீ கவலை இல்லாம படிப்பைக் கவனி."

"எதுக்கு என்னைத் தேடி வந்தீங்கன்னு சொல்லவே இல்லையே?"

"சொல்றேன். நம்ம பகுதியிலே இருக்கிற கால், கை ஊனமாகி பள்ளிக்குச் சென்று படிக்காத சிறுவர்கள், வறுமையின் கொடுமையால் படிப்பைப் பாதியிலேயே விட்ட மாணவர்களுக்குப் படிப்பு சொல்லித் தர மாலை நேரப் பள்ளிக்கூடம் ஒன்று ஆரம்பித்திருக்கிறேன். அதுல சேவை மனப்பான்மை கொண்ட உன் போன்ற புத்திசாலி, மாணவர்களைக் கொண்டே அவர்களுக்குப் பாடம் சொல்லித் தரணும். அதுக்குத் தனியாகக் கட்டடம், தங்க வசதியெல்லாம் கூட இருக்கு. அதைக் கேட்கத்தான் வந்தேன். நீ அங்கேயே தங்கிக் கொண்டு பகலில் பள்ளிக்குச் சென்று விட்டு மாலையில் வகுப்பு எடுக்கலாம். அதுக்கு ஊதியமும் கிடைக்கும். நீ உயர் கல்வி முடித்து நல்ல வேலையில் சேரும் வரை உனக்கான படிப்புச் செலவு முழுவதையும் நானும் என் நண்பர்களும் ஏற்றுக் கொள்கிறோம். என்ன சொல்றே அமலநாதா?" என்றார் நல்ல பெருமாள்.

"கரும்பு தின்னக் கூலியும் தர்றீங்க, நான் என்னங்க மறுப்பா சொல்ல போறேன்?" என்று கண்கள் பனிக்கக் கை கூப்பினான் அமலன்.

குருவியின் பரிசு!

குத்திப்பாறை வங்கக் கடலோரம் குண்டாற்றின் சங்கமத்தின் அருகே அழகிய ஊர். அதில் மணிமாறன் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். உறவு என்று சொல்லிக் கொள்ள அவனுக்குத் தாய் மட்டுமே உண்டு. தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை என்ற வாக்கிற்கேற்ப தாயைப் பணிந்து தன் கடமைகளைச் செய்து வந்தான்.

மீன் பிடித்துத் திரும்பிய பிறகு கதிரவன் மறையும் நேரத்தில் தினமும் தாய் தனக்களிக்கும் ரொட்டித் துண்டுகளை மீன்களுக்குப் பிய்த்துப் போடுவான் மணிமாறன். சின்னச் சின்ன மீன்கள் துள்ளித் துள்ளிக் குதித்து தம் மகிழ்ச்சியைத் தெரிவித்த வண்ணம் அவன் வீசும் ரொட்டித் துண்டுகளைத் தின்று மகிழும்.

ஒருநாள் வழக்கம்போல் ரொட்டித் துண்டுகளைப் பிய்த்து எறிந்தபோது அழகிய பொன்னிறமான தங்கமீன் ஒன்று இரையைத் தின்ற வண்ணம் துள்ளிக் குதித்தாடியது. அதைக் கண்டு கை கொட்டிச் சிரித்து மகிழ்ந்தான் மணிமாறன்.

மணிமாறனை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய தங்க மீன் அன்று முதல் தினந்தோறும் ரொட்டித் துண்டுகளுக்காக வர ஆரம்பித்தது. ரொட்டித் துண்டுகளைத் தின்று தின்று அது பெரிய மீனாக மாறியது. அதோடு சின்ன மீன்களைப் பிடித்துத் தின்று மேலும் மேலும் பெரிய மீனாயிற்று.

தங்கமீனின் கட்டற்ற போக்கையும், அது தங்களையே உணவாகத் தின்று மகிழ்வதையும் விரும்பாத சின்ன மீன்கள், அலை அலையாய்ச் சென்று தங்களின் மன்னவனான திமிங்கல ராஜாவை அணுகி தங்கமீனின் அட்டூழியங்களைச் சொல்லிச் சொல்லிப் புலம்பின.



சிறிய மீன்களின் முறையீட்டைக் கேட்ட திமிங்கல மகாராஜா கோபம் கொண்டார். தளபதியான சுறா மீனைப் பார்த்து, "கடலில் நம் அருமைச் செல்வங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் அந்தத் தங்க மீனைக் கைது செய்து கொண்டு வாருங்கள்," என்று உத்தரவிட்டார்.

மகாராஜாவின் கட்டளையை சிரமேற்கொண்ட தளபதி சுறாமீன் தன் படையினருடன் தங்கமீனைச் சுற்றி வளைத்து மகாராஜாவின் முன் நிறுத்தியது.

திமிங்கல மகாராஜா இடி முழக்கம்

ஜேக்கப் அமல்ராஜ்

போன்ற குரலில் "தங்கமீனே, உன்னைச் சார்ந்த மற்ற மீன்கள் எல்லாம் இன்னும் சிறிய மீன்களாகவே இருக்கையில், நீ மட்டும் இத்தனை விரைவாக எப்படிப் பெரிதாக மாறினாய்? இயற்கைக்கு மாறாக சின்னச் சின்ன மீன்களை எல்லாம் தின்று ஆட்டம் போடுகிறாயாமே?" எனக் கேட்டார்.

"மன்னர் பெருமானே! வீணே கர்வங்கொண்டு நம் இனத்தவர்களையே கொன்று தின்றதற்காக நான் வெட்கப்படுகிறேன். மன்னியுங்கள். நான் இவ்வாறு மாறியதற்குக் காரணம் ஒரு சிறுவன். மனிதர்களில் காணக் கிடைக்காத தங்கம் அவன். பெயர் மணிமாறன்'' என்றது தங்க மீன் பணிவாக.

''நம் மீன் இனத் தாரைக் கொன்று தின்னும் மனிதர்களில் மாணிக்கமா? நான் உடனே அந்தச் சிறுவனை காண ஏற்பாடு செய்க," என்று தளபதி சுறா மீனுக்குக் கட்டளையிட்டார் திமிங்கல மகாராஜா.

வழக்கப்படி, மாலை நேரத்தில் தங்க மீனை எதிர்பார்த்துக் காத்திருந்த மணிமாறன் அதனைக் காணாமல் கவலையோடு இருந்தான். திடீரென்று உருவான பேரலை ஒன்று மணிமாறனைத் தன் அலைக்கரங்களால் தூக்கி தளபதி சுறாமீனிடம் தந்தது. சுறா மீன்கள் தங்கள் முதுகின்மேல் மணிமாறனை சுமந்து கொண்டு மகாராஜாவின் முன் நின்றன.

மகாராஜாவின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. மகாராஜாவின் வேண்டுகோளின்படி மணிமாறனை வாலை, கெண்டை, கூளி, திருக்கை நட்சத்திர மீன், வாவல் இசிலா போன்ற எண்ணற்ற மீன்கள் வணங்கி வாழ்த்தி நின்றன.

திமிங்கல மகாராஜா மணிமாறனுக்கு ஒரு பெரிய விருந்து



வைத்து மீன்களை நேசிக்கும் அவன் பண்பைப் பாராட்டினார். தன் அன்பின் நினைவாகப் பறவைகள் பேசுவதை அறியும் மாய மோதிரம் ஒன்றைப் பரிசளித்தார்.

திமிங்கல ராஜாவின் முதுகின் மேல் மணிமாறன் ஏறி அமர சுறா மீன்கள் கட்டியம் கூற மற்ற மீன்கள் எல்லாம் துள்ளிக் குதித்து வாழ்த்துப்பாட பிரியா விடை பெற்றான் மணிமாறன்.

விருந்தின் அயர்ச்சியினால் களைப்புற்ற மணிமாறன் ஆலமரத்தின் கீழே கண்களை மூடிச் சாய்ந்தவாறு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தான். மரக்கிளையில் அமர்ந்திருந்த பறவைகளின் சப்த ஒலிகள் அவன் அணிந்திருந்த மோதிரம் காரணமாக அவனுக்குத் தெளிவாகக் கேட்டன; அவற்றின் மொழியும் புரிந்தன!



மரத்தில் அமர்ந்திருந்தவை இரண்டு குருவிகள். ஒன்று அம்மா குருவி; மற்றொன்று குட்டிக் குருவி!-

தாய்ப் பறவை "மகனே இளங்கன்று பயமறியாது என்பதுபோல், அவன் விழித்துக் கொண்டால் என்ன செய்வது? இந்த ஆசையை விட்டுவிடு" என உபதேசித்தது. சிறிய பறவையோ உடனே அதை மறுத்து, "அம்மா அந்தப் பையன் அயர்ச்சினால் தூங்குகிறான். அந்தப் . பையனின் கண்களைப் பார்த்தாயா? மூடிய நிலையிலும் எவ்வளவு அழகாக இருக்கின்றன! எனக்கு அவற்றைக் கொத்தி தின்ன வேண்டும் போல் உள்ளது! போகட்டுமா?" என்று கேட்டது.

நீண்ட நேரச் சர்ச்சைக்குப் பிறகு தாய்ப் பறவை தயங்கிய குரலில் 'சரி ஜாக்கிரதையாகப் போய் வா' என்றது! சிறிய பறவை மெல்லப் பறந்து வந்து மணிமாறனின் தோளில் அமர, அவனது கைகள் அதைச் சிறைப் பிடித்தன!



சிறிய பறவை 'கீச் கீச்' என அபயக் குரல் எழுப்பிச் சிறகுகளை விரித்தது. மரத்தின் உயரத்தில் இருந்த தாய்ப்பறவை மணிமாறனின் அருகில் வந்து "தம்பி! உன்னைப் பார்த்தால் நல்லவன்போல் தெரிகிறது. எப்படியோ எங்கள் மொழியையும் அறிந்து வைத்திருக்கிறாய்! என் மகனின் கட்டித் தனத்தை மன்னித்து விடுதலை செய். நான் உனக்கு உதவி செய்கிறேன்,'' என்று கெஞ்சியது.

தாய்ப்பறவையின் கெஞ்சல் மணிமாறனை உருக்கிவிட்டது. அவன் குட்டிப் பறவையைப் பறக்க விட்டான்! மனம் மகிழ்ந்து தாய்ப் பறவை, "தம்பி! தங்கமான உள்ளத்துக்கு என் பாராட்டு. என்னோடு வாருங்கள். நானொரு அதிசயத் தீவுக்கு உன்னை அழைத்துச் செல்கிறேன்" எனச் சொல்லியது. உடனே குருவியின் உடல் ஒரு சின்னக் குதிரையின் அளவுக்குப் பெரிதானது. மணிமாறன் அதில் ஏறி அமர்ந்தான். அது ஆகாய வீதியில் பறந்தது!

நீண்ட நெடுந்தொலைவு பறந்த பிறகு பறவை மணிமாறனுடன் ஒரு தீவில் இறங்கியது. அங்கே தங்கக் கட்டிகள் ஒளி மஞ்சள் பாய் விரித்தாற்போல எங்கும் பாளம் பாளமாக கிடந்தன! தாய்ப் பறவையின் அன்புக் கட்டளைக்கு இணங்க மணிமாறன் சுமக்க முடிந்த அளவு தங்கக் கட்டிகளை எடுத்துக் கொள்ள அப்பறவை அவனைத் தூக்கிக் கொண்டு மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்தது.


தங்க மீனால் தனக்கு கிடைத்த தங்கக் கட்டிகளை மணிமாறன் தன் தாயின் அறிவுரைக்கேற்ப சிறுகச் சிறுக விற்று, அடகு கிடந்த தன் தந்தையின் நிலங்களை மீட்டு அதை மரங்கள் அடர்ந்த சோலையாக்கினான். சோலையின் நடுவே புதிய வீடு ஒன்றைக் கட்டினான். புதிய வீட்டுக்கு "தங்க மீன்" என்று பெயரிட்டான். பறவைகள் கூட்டம் கூட்டமாக வந்து வாழ்த்துத் தெரிவித்தன.

வேண்டாத பட்டியலில்...

சோமு தான் தனியாக வியாபாரம் செய்யப் போவதாகவும் அதனால் தனக்குச் சேர வேண்டிய சொத்தைப் பிரித்துத் தருமாறும் பெற்றோரிடம் கேட்டான். வயதான பெற்றோர் சோமுவின் பேச்சைக் கேட்டு வருத்தமடைந்தாலும், "உன் தம்பி ராமுவிடமும் கேட்டுட்டு சொத்தைப் பிரிக்கலாம்" என்றனர். ராமுவோ, 'தனக்கு ஒன்றும் வேண்டாம், அண்ணன் என்ன தருகிறாரோ அதை அப்படியே ஏற்றுக் கொள்கிறேன்' என்றான்.

சொத்தைப் பிரிப்பதற்காக உட்கார்ந்திருந்தனர் பெற்றோர். சோமு தனக்கு வேண்டிய வீடு, நிலம், மாடு, தோட்டம் என பெற்றோரைத் தவிர மற்ற சொத்துக்களை எல்லாம் பட்டியலிட்டான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த பெற்றோர் வேதனையுடன் "நல்லா பயன் தரக்கூடிய சொத்தையெல்லாம் நீயே எடுத்துக் கொள்கிறாயே! பாவம் ராமு! அவனுக்கு நீ கொடுப்பதெல்லாம் உபயோகமில்லாத சொத்து. அவனுக்கும் நியாயமாகச் சேரும்படி பிரித்துக் கொடு" என்று கேட்டனர். சோமு ஏற்க மறுத்தான்.



சோமுவுக்கு அருகில் இருந்த ராமு பெற்றோரைப் பார்த்து, "அண்ணன் அருமையாகத்தானே சொத்தைப் பிரித்திருக்கிறார்! எனக்காக அவர் விட்டு வைத்திருக்கும் சொத்துகளில் விலை மதிப்பில்லாதவை கூட இருக்கின்றனவே!" என்றான்.

ராமுவின் பேச்சைக் கேட்ட பெற்றோர் அதிசயப்பட்டனர். ராமுவே இப்படிக் கூறிய பின்பு அவர்களால் அதற்கு மேல் பெரியவனிடம் வாதாட முடியவில்லை!


"சொத்தைப் பிரித்தாகி விட்டது. எங்கள் பணி முடிந்தது. இனி நாங்க கோயில், குளம்னு யாத்திரை போய்க் காலத்தை ஓட்டிக் கொள்கிறோம்" என்று கிளம்பினர் பெற்றோர்.

"நில்லுங்க, அண்ணன் எனக்கு விட்டு வைத்த விலைமதிப்பில்லாத சொத்துகளின் பட்டியலில் நீங்கதானே இருக்கிறீங்க? எங்கே போறீங்க? என்னை விட்டுப் போக முடியுமா நீங்க?" என்று தடுத்தான் ராமு.

"எங்களைத்தான் விலை மதிப்பில்லாத சொத்துன்னு சொன்னியா நீ?" என்று ராமுவின் கையைப் பிடித்துக் கொண்டு பெருமிதத்துடன் நின்றனர் பெற்றோர்.

— ஜானகி முத்துக்குமார்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Subscription : (Inland) Annual Rs. 60/-; Half Yearly Rs. 30/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-



நண்பன் தவளையை அடைய குருவி எந்த வழியில் செல்ல வேண்டும்?

விடை : 2

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/97 " Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 " Registered as a Newspaper in Srilanka